


கல்கி
KALKI
5.12.2004
ரூ.6.00
-பி.வாசு பேட்டி
சந்திரமுகி யார்?
இலவசம்: சென்னை ஸ்கேன்
சென்னை வாசகர்களுக்கு மட்டும்


நுங்கம்பாக்கம், காகானி டவர்ஸில்
இப்பொழுது பாபாலால் வைரங்கள்
மின்னுகின்றன
Bapalal
DIAMONDS
இப்பொழுது
காகானி டவர்ஸ்
நுங்கம்பாக்கம்
எண்.34, காதர் நவாஸ் கான் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.
போன் : 2833 1664 / 2833 1665 இ-மெயில் : pranav@bapalal.com




கைது
அரசியலாக்கப்படுவது
எதற்காக?

8

20

ராசு, கவுன்
வாங்காதது ஏன்?





தேன்மொழியின் பெயரை
மாற்றப்போவது யார்?

48

66

தமிழ்த் தாத்தா
வீட்டின் நிலை
என்ன?



கல்கி 5.12.2004

✉ மத்திய அமைச்சர்கள் 27 பேர் வேலை இல்லாமல் இருப்பது பற்றிய கேள்விக்கு தராசு பதில் நச். பிரதமரும் சோனியாவும் சிந்திப்பார்களா!

சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ பெட்ரோல், டீசல், காஸ் விலை யேற்றம் குறித்த 'முதலைக் கண்ணீர் கார்ட்டூன்' உண்மையிலேயே படு சூப்பர். சிரிக்க வைத்து, சிந்திக்கவும் வைத்தது.

லோயர் அணைக்கட்டு, பி. இராஜேந்திரன்.

✉ எரிபொருள் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள சாமான்யர்களின் உள்ளக் கிடக்கையினை, தலையங்கம் பிரதிபலித்தது. அப்பாவிகளின் குரல் இது! யார் ஆட்சிக்கு வந்தாலும், சாமான்யர்களுக்கு எந்தப் பலனும் கிட்டப் போவது இல்லை என்பதை, இந்த முதுகெலும்பை முறிக்கும் விலைவாசி உயர்வு உணர்த்தி விட்டது.



அப்பாவிகளின்

திருச்சி, இ. முகம்மது ஹஸன்.

✉ பற்றி எரியும் பெட்ரோல் விலை பற்றி அலசியிருப்பது அருமை. பெட்ரோல், டீசல் மற்றும் காஸ் விலையைக் குறைக்கும் சாத்தியக்கூறுகளை, மத்திய அரசு ஆராய வேண்டும். பொருளாதாரப் புலிகள் சிதம்பரமும், மன்மோகன்சிங்கும் மத்தியதர குடும்பத்தின் நிலைமையைப் புரிந்து கொள்ள மறுப்பது வருந்தத்தக்குரியது?

மதுரை, என். பாலகிருஷ்ணன்.

✉ 'ரஜினிகாந்த் சென்ற தேர்தலில் உங்களுக்கு எதிரான நிலையெடுத்தது' பற்றிய கேள்விக்கு, கார்த்தி சிதம்பரம் அளித்த பதில், அவரது பண்பட்ட, மனதை 'பளிச்'சென படம் பிடித்துக் காட்டி விட்டது!

வேலூர் - 6, வே.ந.கதிர்வேல்.

✉ சேலம் கம்மாளப்பட்டி ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் 'அரளி' உற்பத்தியில் செய்யும் புரட்சி பாராட்ட வேண்டிய விஷயம்!

நெய்வேலி, எஸ். கண்ணன்.

✉ 28.11.2004 தேதியிட்ட கல்கி இதழில் வெளிவந்துள்ள தலையங்கம் படித்தேன். 'காஞ்சி மடத்தை இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்கு மாற்ற வேண்டும் என்று தலைவர் கலைஞர் பேசி வருவது ஏற்புடையதல்ல' என்று தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் இதுபோலப் பேசவில்லை. சங்கர மடத்தைக் காப்பாற்ற கல்கி என்ன ஆலோசனையை வழங்கியதோ, அதே ஆலோசனையைத்தான் தலைவர் கலைஞரும் தெரிவித்துள்ளார். "மாலுமி சரியில்லையென்றால் கப்பலைக் கவிழ்த்துவிட முடியாது - கப்பலைச் சரியாகச் செலுத்தக்கூடிய புதிய மாலுமியைத்தான் தேட வேண்டும்" என்று தான் குறிப்பிட்டுள்ளார்.

டி.கே.எஸ். இளங்கோவன்,
அமைப்புச் செயலாளர், தி.மு.க. அண்ணா அறிவாலயம், சென்னை - 18.

குரல்...

✉ யாசர் அராபத் பற்றிய கட்டுரை அவரது மறைவுக்கு செலுத்தப்பட்ட மகத்தான அஞ்சலி!
அயன்புரம், த. சத்தியநாராயணன்.

✉ 'மக்களின் ரசனைகள் மேம்பட வேண்டும். அப்போதுதான் கதைகளிலும் எங்களால் தைரியமாக மாற்றம் கொண்டு வர முடியும்' என்று சொல்லும் திருச்செல்வத்தின் கருத்து ஏற்புடையதல்ல... தரமான படைப்புகளை மக்கள் எப்போதும் புறந்தள்ளியதில்லை!
நெய்வேலி, எஸ். கண்ணன்.

✉ சாகித்ய அகாடமியின் குளறுபடிகளை இந்திரா பார்த்தசாரதி நன்றாகத் தோலுரித்திருக்கிறார்.
மேலகிருஷ்ணன்புதூர், பிரபாலிங்கேஷ்.

✉ அரிதாரம் பூசி மேடையில் நடக்கும் 'கூத்துப்பட்டறை' நடிகர்களின் அவல நிலையை, 'கண்ணுக்குள் நிலவு' கதை மூலம் அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொல்லி நெஞ்சை கனக்க வைத்து விட்டார் சேலம் ராஜ்பாரதி.
மதுரை - 9, பி.எல்.பரமசிவம்.

✉ ஏவுகணை 'தனுஷ்', நடிகர் தனுஷ்- இந்த ஒற்றுமையை வைத்தே தனது சொற்கணைகள் மூலம் சூப்பராகக் கலக்கி விட்டார் சுமி!
சென்னை - 91,
கவிஞர் அய்யாறு வாசுதேவன்.

✉ சின்னான் செய்திகள் சிறியதாக இருந்தாலும் சிறப்பாக இருந்தது!
சென்னை - 116, பெ. தர்மன்.

✉ "நந்தினி நந்தினி எந்தன் சரிகமபதநி" சிறுகதையின் கதையோட்டம் அருமை. ஜி.ஆர்.சுரேந்தர் நாத்தின் கற்பனை எனது நெஞ்சில் ஆட்டோ கிராஃபாய் ஒட்டியது.
காமநாயக்கன்பாளையம், மா. மோகனராசன்.

✉ 'என் பொறுப்புக்களை உணர்ந்திருக்கிறேன்' என்ற இசையமைப்பாளர் வித்யாசாகரின் பேட்டியைப் படித்தேன். இன்று "இருக்கும் வரை அனுபவிப்பது" என்ற எண்ணம் இசையமைப்பாளர்களிடம் இருப்பதால், போட்டிகள் இல்லை! பொறாமைகள் இல்லை!
லால்குடி, எம். இராஜேந்திரன்.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

சிம்ரன்-ஜோதிகா-நயன்தாரா

சந்திரமுகி யார்?



தொடர்ந்து நடக்கும் 'சந்திரமுகி' ஷூட்டிங், அடிக்கடி உதவி இயக்குநர்களுடன் டிஸ்கஷன், அவ்வப்போது ரஜினியுடன் ஆலோசனை.. கல்யாண வீட்டுக்காரர் போல பரபரப்பாக வளையவருகிறார் பி. வாசு.


'கல்கி' என்றவுடன் நேரம் ஒதுக்கி, நமது கேள்விகளுக்கு நிதானமாக பதிலளித்தார்.

'சந்திரமுகி' பற்றி தினம் தினம் ஒவ்வொரு மாதிரி செய்தி வருகிறதே. ஹீரோயின் மாற்றம், ஷூட்டிங் தள்ளி வைக்கப்பட்டது, ரஜினிக்கு வாசு மேல் கோபம்... இப்படியெல்லாம்!

(சிரிக்கிறார்) ஆளாளுக்கு அவங்க வங்க இஷ்டத்துக்கு எழுதறாங்க; பேசறாங்க. ஆனா சந்திரமுகி யூனிட் திட்டமிட்டுச் செயல்பட்டு வருது. 'தவம்'னு சொல்லுவாங்களே... அந்த மாதிரி வேறெதிலேயும் கவனத்தைச் சிதற விடாம, 'சந்திரமுகி'யை உருவாக்கிக்கிட்டிருக்கோம்.

ரஜினியின் 'பாபா' தோல்விக்குப் பிறகு வருகிற படம் 'சந்திரமுகி'. ஆகவே உங்களுக்கு 'அழுத்தம்'

வாசு பேட்டி



அதிகமாக இருப்பதாக நினைக்கிறீர்களா?

ரஜினி படம் என்றாலே மக்களிடம் எதிர்பார்ப்பு அதிகம் இருக்கும். அந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்வதற்காக கடுமையாக உழைக்கிறோம். இது ஒரு சுகமான சுமைதான்.


இந்தப் படம் மலையாளப் படத்தின் 'ரீமேக்'தானா?

(நிறுத்தி நிதானமாகச் சொல்கிறார்). இது ரஜினி படம்! இந்தப் படத்தில் பாட்ஷாவில், மன்னனில், படையப்பாவில் பார்த்த ரஜினியை மக்கள் பார்ப்பார்கள்.



ரஜினி படத்தில் சிகரெட் பிடிக்கும் காட்சிகள் கட்டாயம் இருக்கும். இதில் எப்படி?

எதற்காகக் கேட்கிறீர்கள் என்று புரிகிறது! இந்தப் படத்தில் சிகரெட் பிடிப்பது போன்ற காட்சிகள் கிடையாது. அரசியல்வாதிகள் சிலர் ஆட்சேபிக்கிறார்கள் என்பதால் அல்ல. இந்தப் படத்தில் ரஜினியின் கேரக்டர் அப்படி!



• அரசியல் சாயம் மறையும்! •

அரசியல் 'பஞ்ச்' டயலாக்குகள் உண்டா?

சூப்பர் ஸ்டாருக்கே உரிய ஸ்டைல், பஞ்ச் டயலாக்குகள் எல்லாம் உண்டு! ஆனால் இவற்றில் துளிக் கூட அரசியல் இருக்காது. அவர் மீது பூசப்பட்டிருக்கும் அரசியல் சாயம் இந்தப் படத்துக்குப் பிறகு அகற்றப்பட்டிருக்கும்!

தமது படங்களில் ரஜினி பேசும் எந்த ஒரு வசனத்தையும் அரசியலுடன் சம்பந்தப்படுத்திப் பார்ப்பது ரசிகர்கள், மற்றும் பத்திரிகைகளின் வழக்கமாக உள்ளது. இந்த நிலையில் அரசியல் இல்லாத ரஜினி படம் ரிஸ்க் இல்லையா?

அப்படி இல்லை... ஒரு படத்தின் வெற்றிக்குத் தேவை சிறந்த கதை, அதற்கேற்ற நாயகன்! என்னிடம் இருப்பது நல்ல கதை... அதன் நாயகனும் சாதாரண ஹீரோ அல்ல! சூப்பர் ஸ்டார்! தவிர படம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, அரசியலைத் திணிக்க வேண்டிய அவசியம் இல்லை!

சரி, யார்தான் சந்திரமுகி? ஹீரோயின் மாற்றப்பட்டதாக செய்திகள் வருகின்றனவே!

இந்தப் படத்தில் பிரதானமான 'சந்திரமுகி' கேரக்டருக்கு முதலில் சிம்ரனைத்தான் அணுகினோம். கிளைமாக்ஸில் அவர் ஆடும் நடனம் தான் படத்தின் ஹைலைட்! சிம்ரனும் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டார். பிறகு, தாம் தாய்மை அடைந்திருக்கும் செய்தியைச் சொன்னார். ஆகவே மகிழ்ச்சியோடுதான் சிம்ரனுக்கு விடை கொடுத்தோம். பிறகு ஜோதிகாவை அணுகினோம். அவரும் ஒப்புக் கொண்டார். அவர்தான் சந்திரமுகி. நயன்தாரா ரஜினியின் மனைவியாக நடிக்கிறார்!

சந்திரமுகியில் கெஸ்ட் ரோலில் நடிக்க வைக்க கமலை அணுகினீர்களாமே...?

அதுவும் தவறான செய்தி. ஒரு பேட்டியில் 'சந்திரமுகியில் நடிப்பீர்களா?' என்பது போல கேட்கப்பட்ட கேள்விக்கு, கமல் பெருந்தன்மையாகப் பதில் சொன்னார். அது என்னை என்னை மகிழ்ச்சிக்குள்ளாகியது. அதனால் அவரைச் சந்தித்து நன்றி சொன்னேன். அவ்வளவுதான்!

கே.எஸ்.ரவிக்குமாரிடமிருந்து நீங்கள் வாய்ப்பைத் தட்டிப் பறித்து விட்டதாக...

(சற்றே கோபத்துடன் குறுக்கிடுகிறார்) ரவி எனது நல்ல நண்பர். அவர் இயக்கிய 'புருஷலட்சணம்' என்ற படத்தின் கதை என்னுடையது. அந்தக் கதையை ரவி இயக்கினால்தான் நன்றாக இருக்கும் என்று அவரிடம் கொடுத்தேன். அந்த அளவுக்கு ஆழமான நட்பு எங்களுடையது.

தவிர, இந்தப் பட வாய்ப்பு எனக்குக் கிடைத்த தகவல் வந்தவுடன், முதலில் நான் ரவியிடம்தான் சொன்னேன். அவரும், 'நல்ல வாய்ப்பு... நன்றாகச் செய்யுங்கள்' என்று மனமார வாழ்த்தினார்.

ரஜினியின் அம்மா சென்டிமெண்ட், வாசுவின் தாலி சென்டிமெண்ட் - சந்திரமுகியில் எது தூக்கலாக இருக்கும்?

சந்திரமுகியில் ஆக்ஷன், சென்டிமெண்ட், காமெடி எல்லாம் சரியான அளவில் இருக்கும்.

நீங்களும் இந்தப் படத்தில் நடிப்பதாக...?

அப்படியா? எனக்கே தெரியாதே *(சிரித்தபடி விடைகொடுத்தார் வாசு)*

- இரா. முத்துக்குமார்

படங்கள் : **ராஜன்**

அரசியலாக்கப்படும்




"முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன், முன்னாள் பிரதமர்கள் வாஜ்பாய், சந்திரசேகர் ஆகியோர் உண்ணாவிரதமிருந்து, சங்கராச்சாரியார் கைது பற்றி கேள்வி எழுப்பியுள்ளனர். இங்கு ஆட்சியில் இருப்பவர்களுக்கு நல்ல புத்தி வரட்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்" என்று மயிலை மாங்கொல்லை கூட்டத்தில் அத்வானி முழங்கிய போது, கூட்டம் கைதட்டி அவரது கருத்தை வரவேற்றது. பா.ஜ.க.வால் ஏற்பாடு செய்யப்பட்ட அந்தக் கூட்டம் ஜயேந்திரர் கைதைக் கண்டித்தது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு பா.ஜ.க.வில் பல பிரச்னைகள். கட்சியில் தொண்டர்கள் உற்சாகமிழந்து, வெறுத்துப் போயிருந்தார்கள். போதாததற்கு அத்வானி மீண்டும் தலைவரானவுடன் அயோத்தி விவகாரத்தை எடுத்துக் கொண்டது கூட்டணிக் கட்சிகளிடையே ஆத்திரத்தைத் தூண்டி விட்டது. 'இதுதான் சாக்கு என்று காங்கிரஸ் கூட்டணி அரசை ஆதரித்து பிழைத்துக் கொள்வோம்' என்று கூட்டணிக் கட்சிகளில் சில, நடையைக் கட்ட எத்தனித்த நிலையில், சங்கராச்சார்யார் கைது நடந்தது. கடலில் தத்தளித்தவனுக்குத் தப்பிக்க மரக்கட்டை கிடைத்தது போல ஆகிவிட்டது. "சங்கராச்சார்யார் நடத்தப்பட்ட விதம் சரியில்லை, மற்ற மதத் தலைவர்களின் மீது கை வைக்க முடியுமா? இந்து மதத்திற்கே அவமானம்" என்று குரல் கொடுக்கத் துவங்கிவிட்டன இந்துத்வா அமைப்புகளும், பா.ஜ.கவும். இந்த விவகாரத்தின் மூலமாக மத உணர்வைத் தூண்டினால், வரும் பிப்ரவரியில் பீகார், ஹரியானா, ஜார்கண்ட் மாநில சட்டசபைத் தேர்தல்களுக்கு அந்த உசுப்பல் உதவக் கூடும் என்று பா.ஜ.க. கணக்கு போட்டிருந்தால் வியப்பில்லை.

• கருணாநிதி




• அத்வானி



இந்த விஷயத்தில், ஜெயலலிதாவைவிட சோனியா காந்தியையும், கருணாநிதியையும்தான் அதிகமாகத் தாக்குகின்றன பா.ஜ.கவும், இந்துத்வா அமைப்புகளும். கைதுக்கு 'மத்திய அரசுதான் காரணம்' 'கருணாநிதி 'சதி'க்கு ஜெ.

ஜெ VS ஜெ



கைது!

வைகோ கைதாகி ஒன்றரை வருடம் சிறையில் இருந்தபோது இதே பா.ஜ.க. பிரமுகர்கள் ஏன் மௌனமாக இருந்தார்கள்? என்று நடுநிலையாளர்கள் கேட்கிறார்கள்.

காங்கிரஸ் கொஞ்சம் கலங்கித்தான் போயிருக்கிறது. ஆச்சார்யார் விவகாரத்தை வைத்து, மடங்களையும் சாமியார்களையும் பா.ஜ.க. ஒன்று சேர்க்கும் வேகம் காங்கிரஸை கவலைப்படுத்தி இருக்கிறது. ஜார்கண்டிலும் இதே நிலைதான். ஜே.எம்.எம்-காங்கிரஸ் கூட்டணி இந்த முறை ஆட்சியைக் கைப்பற்றும் என்று நம்பிக்கை துளிர்த்த நிலையில், இடியென இறங்கி விட்டது சங்கராச்சார்யார் கைது.

இந்த நிலையில் "தகுந்த சாட்சியங்களின் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. எந்த வித உள்நோக்கமும் இல்லை" என்று சட்டமன்றத்திலும், வெளியிலும் அறிக்கைகள் அளித்திருக்கிறார் ஜெ. இந்த விவகாரம் அவரது அரசியல் எதிர்காலத்துக்கே மிகப் பெரிய சவால்.

* மயிலை மாங்கொல்லை கூட்டத்தில்...



பலியாகிவிட்டார்' என்றெல்லாம் பிரசாரம் செய்கின்றன. "ராஜசேகர ரெட்டி, சங்கராச்சார்யார் கைதை பன்னிரண்டு மணி நேரம் தாமதித்தாராம். பின்னர் 'மேலி'டத்தைக் கேட்டு முடிவெடுத்தாராம். அவர் கேட்டது 'மேலி'டத்திலா, அல்லது 'female' இடத்திலா" என்று சென்னையில் நடந்த கண்டனக் கூட்டத்தில் கேட்டார் பா.ஜ.க. செயலாளர் இல.கணேசன்! "சட்டம் - ஒழுங்கு என்பது மாநில அரசு சம்பந்தப்பட்ட விவகாரம். அதில் மத்திய அரசு செய்வதற்கு ஒன்றும் இல்லை.

சங்கராச்சார்யார் கைதைப் பற்றிப் பேசும் போது, பா.ஜ.க. தலைவர்கள் "வழக்கு விவகாரத்துக்குள் நுழைய விரும்பவில்லை. ஆனால் அவர் நடத்தப்

படும் விதம் சரியல்ல'' என்கிறார்கள். உயர்நீதிமன்ற நீதிபதி பாலசுப்பிரமணியன் 'ஜயேந்திரரை பங்களாவில் வைக்கலாம்' என்று யோசனை தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. ஜயேந்திரரும் மற்ற கிரிமினல் கைதிகளைப் போல நடத்தப்பட்டிருக்கிறார். இது பா.ஜ.கவுக்குக் கோபத்தை ஏற்படுத்த, ''கருணாநிதி எங்களுக்கு விரோதி; ஜெயலலிதா துரோகி'' என்ற ஆவேசப்பட ஆரம்பித்திருக்கிறது.

ஜயேந்திரர் கைதைத் தொடர்ந்து, "நேர்மையான நடவடிக்கை. சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமம்'' என்று அறிக்கை விட்டார் கருணாநிதி. ஆனால், சில நாட்களுக்குப் பின் "இந்தக் கைது விவகாரத்தில் சில தனிப்பட்ட அரசியல் உள்நோக்கங்கள் இருப்பதாகச் சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன'' என்று பல்டி அடித்தார். கருணாநிதி, இந்த விவகாரத்தில் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

அரசியல் சூழல் இப்படி இருக்க, குற்றப் பின்னணியைப் பார்ப்போம். சங்கரராமன் கொலை வழக்கில் இ.பி.கோவின் ஐந்து பிரிவுகளின் கீழ் ஜயேந்திரர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கொலை செய்தல், சதித் திட்டம் தீட்டுதல், கொலை செய்யத் தூண்டுதல், கூட்டுச் சதி செய்தல், தவறான சான்றிதழ் காட்டுதல் ஆகிய குற்றச் சாட்டுக்கள். குற்றம் நிரூபணமானால் குறைந்த பட்சம் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்கும். வழக்கு விரைவில் முடிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படாவிடில் மக்களின் அதிருப்தி பெருகும்; வதந்திகளும் பெருகும்.

மூன்று நாட்கள் போலீஸ் காவலில் எடுத்து தனது விசாரணையை நடத்தி முடித்திருக்கிறது போலீஸ். மேலும் சில நாட்கள் ஆச்சார்யாரை ரிமாண்டில் வைக்க ராதாகிருஷ்ணன் தாக்குதல் வழக்கு இடமளித்திருக்கிறது.



''பொதுக்கூட்டத்துக்கு வந்தவங்களுக்கு ஷாம்பு சாஷே கொடுக்கப்படும்னு அறிவிச்சாங்களே ஏன்?''

''கூட்டம் பிசுபிசுத்துப் போயிடாமல் இருக்கத்தான்!''

– சீர்காழி வி.ரேவதி

ஜெயலலிதா விஷயத்தில், அவரது பல நடவடிக்கைகளுக்கு உள்நோக்கம் இருப்பதாகப் பரவலாக ஒரு பேச்சு இருக்கிறது. ''அவர் தனது நலன், தோழியின் குடும்ப நலன் ஆகியவற்றின் அடிப்படையில் சில நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார். இதன் காரணமாக, நியாயமான அவரது நடவடிக்கைகள் கூட சந்தேகக் கண் கொண்டு தான் பார்க்கப்படுகின்றன'' என்று சொல்கிறார் அரசியலில் இருந்து ஒதுங்கியுள்ள அ.இ.அ.தி.மு.க.புள்ளி ஒருவர்.

'ஆச்சார்யார் கைதுக்குத் தனிப்பட்ட விரோதம் காரணம்' என்றும் 'ஜயேந்திரர் ஜெயலலிதாவை விமர்சித்ததால் தான் இது நடந்தது' என்றும் செய்திகள் வருவதும் அவற்றை முதல்வர் மறுப்பதுமாக தினம் தினம் புதிய நிகழ்வுகள்.

இந்த நிகழ்வுகள் ஒரு விஷயத்தைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன. உலக நன்மைக்காக இறைவனை வழிபடும் ஒரு துறவி - மடாதிபதி - எந்தக் காரணம் கொண்டும் அரசியல்வாதிகளோடும், நிழல் மனிதர்களோடும் எவ்விதத் தொடர்பும் கொள்ளாமல் இருப்பதே உத்தமம்.

- ப்ரியன்



"அரசியலாக்கவில்லை!"

ஸ்ரீ ஜயேந்திரர் கைது செய்யப் பட்டதைக் கண்டித்து, பா.ஜ.க நடத்திய கண்டனக் கூட்டத்தில் கலந்து கொள்ள சென்னைக்கு வந்திருந்தார் வெங்கையா நாயுடு. அவர் நமக்களித்த மினி பேட்டி...

"ஸ்ரீ ஜயேந்திரர் கைது விஷயத்தை பா.ஜ.க ஏன் அரசியலாக்குகிறது?

"சட்டம் தன் கடமையைச் செய்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஜயேந்திரர் இந்து சமுதாயத்தின் மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவர். அவரை உரிய மரியாதையுடன் அரசு நடத்தத் தவறிவிட்டது. அதைத்தான் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். கொலை நடந்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆன பிறகு, அவசர அவசரமாய், அதுவும் தீபாவளிப் பண்டிகை அன்று, பிரத்யேகமாய் ஹெலிகாப்டரில் போய் கைது செய்ய வேண்டுமா என்பதுதான் எங்கள் கேள்வி. 'இஸட்' பிரிவு பாதுகாப்பில் உள்ள ஜயேந்திரர், ஹெலிகாப்டரில் நேபாளத்துக்குத் தப்பி ஓடப் பார்த்தார் என்று இழிவு படுத்துவதை, எப்படிக் கண்டிக்காமல் இருக்க முடியும்?

நள்ளிரவில் கருணாநிதி கைது செய்யப்பட்டதையும், 'ஹிந்து' என். ராமைக் கைது செய்ய முயன்றதையும்கூட பா.ஜ.க கடுமையாகக் கண்டித்தது. அப்போது எங்கள் கண்டனத்தை, 'ஏன் ஒரு கைதை அரசியலாக்குகிறீர்கள்?' என்று யாரும் விமர்சிக்கவில்லையே! தர்ணா என்பது அரசியல் ரீதியான போராட்டம்; உண்ணாவிரதம் என்பது ஆன்மிக ரீதியிலான போராட்டம். நாங்கள் ஜயேந்திரர் கைதை எதிர்த்து உண்ணாவிரதம்தான் இருந்தோம். ஒரு முன்னாள் ஜனாதிபதி, இரண்டு முன்னாள் பிரதமர்கள் கலந்து கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் அது, என்பதை நினைவில் கொள்ளுங்கள்."

"சட்டத்தின் முன் அனைவரும் சமம் அல்லவா?"

"அப்படித்தான் இன்று அனைவரும் நடத்தப் படுகிறார்களா? அத்வானி, உமாபாரதி, லாலு பிரசாத் யாதவ் என எத்தனையோ பேர் கைது செய்யப்பட்ட போது, அவர்களது சொந்த வாகனத்தில் அழைத்துச் செல்லப்படவில்லையா? அரசு மாளிகையில் 'ஹவுஸ் அரஸ்ட்டில்' வைத்து விசாரிக்கப்படவில்லையா? அவ்வளவு ஏன்? தேசத் துரோகக் குற்றம் சாட்டி கைது செய்யப்பட்ட ஷேக் அப்துல்லாவை, கொடைக்கானலில் தனி பங்களாவில்தானே சிறை வைத்தார்கள்? போதாக் குறைக்கு, அரசு வழக்குரைஞர் சுவாமிகளை கிரிமினல் என்று கோர்ட்டில் சொன்னார். யாருடைய நிர்ப்பந்தத்தில் அப்படிச் சொன்னார்?

இது ஒருபுறம் இருக்க, குற்றம் நிருபணமாகி, தண்டனை வழங்கப்பட்டு விட்ட குற்றவாளி போல பத்திரிகைகள் சித்திரிக்கின்றன. நிரபராதி என்று வெளியில் வரும்போது, இப்போது அவருக்கு இழைக்கப்படும் அவமானத்துக்கு யார் பரிகாரம் காண முடியும்?

ஆக, இந்த விஷயத்தை மற்ற கட்சியினர் அரசியலாக்குகிறார்கள். நாங்கள் அதை எதிர்த்து உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லுகிறோம்."

- கௌதம் ராம்

- வெங்கையா நாயுடு

KGEYES *Apoorvaa*

at Mogappair

Furniture for the entire Flat

JFA


FREE

Modular Kitchen from Cookscape

COOKSCAPE







Flats at an amazing Price of Rs. 1225/- Sq.ft.


Visit the Model Flat at Site

- CHILDRENS PLAY AREA
- LAWN & GARDEN
- GYMNASIUM
- RECREATION ROOM
- COMMUNITY HALL

Preferred Financier:
ICICI Bank Home Loans
It's really easy!
98840 57545

KGEYES RESIDENCY PRIVATE LIMITED
10, 2nd Cross Street, R.A. Puram, Chennai - 600 028
Ph: 24313939 (8 Lines) / 98403 98009, 98407 31854.
Website: www.kgeyes.com

* Offer for a limited period. Conditions apply



விரைந்து வரட்டும் தீர்ப்பு!

சங்கராமன் கொலை வழக்கில் கைதான ஜயேந்திரர், ராதா கிருஷ்ணன் தாக்குதல் வழக்கிலும் கைதாகியிருப்பதாக அதிகார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறார். இந்த இரட்டைக் குற்றச்சாட்டுகள் பயங்கரமானவை. வழக்குகளின் முடிவு எவ்வாறு அமைந்தாலும், தமிழக மக்களை - குறிப்பாக காஞ்சி மட பக்தர்களை - நேரடியாகவும் உணர்வுபூர்வமாகவும் பாதிக்க வல்லது. எனவே, தமிழக அரசு, இவ்வழக்குகளுக்கான விரைவு நீதிமன்றத்தை ஏற்படுத்தி, தாமதமின்றி அவற்றை நடத்தி முடிப்பது மிக அவசியம். இவ் விஷயத்தில் தாமதம் செய்வது என்பது, காஞ்சி மடம் என்ற உயர்ந்த அமைப்புக்கு இழைக்கப்படுகிற அநீதியாக அமையும்; மக்களின் உணர்வுகளைச் சீண்டும் அபாயகரமான விளையாட்டாகவும் போய் விடும். இதற்கெல்லாம் துளியும் இடங் கொடாதிருக்க, வழக்கை விரைந்து முடிக்க காவல்துறையைப் பணிப்பது முதல்வரின் கடமை. அவ்வாறு நடத்தி முடிப்பதற்கான வசதிகளையும் அவர் செய்து தர வேண்டும்.

பொதுவாழ்வில் உள்ள ஒரு நபர் இவ்வாறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகும்போது, மக்களிடையே பல தரப்பட்ட பேச்சுகள் அடிபடுவது ஆச்சரியமில்லை. மீடியா, உடனடியாக அதை விதவிதமான பரபரப்புக்குள்ளாக்கி வியாபாரம் பெருக்குவதும் அவலமான வாடிக்கையாகி விட்டது. ஆனால், ஜயேந்திரர் விஷயத்தில் இதெல்லாம் போதாதென்று, அரசியல் கட்சிகளும் குளிர் காய்கின்றன. தேசியக் கட்சிகள் முதல், லெட்டர் ஹெட் கட்சிகள் வரை அனைத்து அரசியல் கட்சிகளும், தங்கள் இஷ்டத்துக்கு இந்த விவகாரம் பற்றி விமர்சனம்




கல்கி



2004 டிசம்பர் 5
தாரண கார்த்திகை 20
மலர் : 63
இதழ் : 19

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




செய்வதென்பது மோசமான, மலினமான அரசியல்.

அரசு தரப்பு வழக்குரைஞர் மிகக் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி, குற்றம் சாட்டப்பட்ட ஜயேந்திரரை ஒரு குற்றவாளி போலவே சித்திரித்ததை, பா.ஜ.க கடுமையாக ஆட்சேபித்திருக்கிறது. இந்த ஆட்சேபணை நியாயமானதல்ல. நீதிமன்றத்துக்கு வெளியே அரசு வழக்குரைஞர் அவ்வாறு பேசியிருந்தால் குற்றம்தான். ஆனால், நீதிமன்றத்துக்குள் அவர் தம் தரப்பு வாதத்தை வன்மையாகத்தான் பிரயோகித்தாக வேண்டும். இந்த வாதங்களை முறியடிப்பது எதிர்த்தரப்பு வழக்குரைஞரின் பணி. இதே நேரத்தில் பா.ஜ.கவைச் சேர்ந்த முரளி மனோகர் ஜோஷி போன்றோர், ஜயேந்திரர் பேரில் போடப்பட்டுள்ளது பொய் வழக்கே என்று உறுதிபடக் கூறுவது எவ்வாறு நியாயமாகும்? குற்றம் ருசுவாகும் முன், ஒருவரை எவ்வாறு குற்றவாளி என்று முத்திரை குத்த முடியாதோ, அவ்வாறே நிரபராதி என்றும் அறிவிக்கலாகாது.

அரசியல் கட்சிகளுக்கு இது பற்றிய கவலையெல்லாம் இல்லை. ஹிந்து மதத் தலைவர் ஒருவர் கைதாகியிருப்பதையே, அனைத்துக் கட்சிகளும் தங்கள் சொந்த ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்கின்றன. ஆதாரமின்றித் தொடரப்பட்ட வழக்கு என்பதும், கைது செய்த விதம் சரியில்லை என்பதும், ஜயேந்திரர் கௌரவமாக நடத்தப்படவில்லை என்பதும் எடுபடாத வாதங்கள் என்று தெரிந்தும், பா.ஜ.க அவற்றை மேடை மேடையாக முழங்கி வருகிறது. அடையாள உண்ணாவிரதம், நாடு தழுவிய பந்த் என்றெல்லாம், சங் பரிவார் அமைப்புகள் கொட்டி முழக்குவது போதாது என்று, ராஞ்சியில் நடைபெறவுள்ள பா.ஜ.கவின் தேசிய செயற்குழு கூட்டத்திலும், ஆசாரியர் கைது விவகாரமே முக்கிய விவாதப் பொருளாக் கப்பட்டிருக்கிறது.

ஒரு ஹிந்து தலைவருக்கு நிகழ்ந்துள்ள அவமானமாக இந்த வழக்கைச் சித்திரிக்க எடுக்கப்படும் முயற்சிகள் மத உணர்வுகளைத் தூண்டி, சம்பந்தப்பட்ட கட்சிகளுக்குத் தற் காலிகமாக மக்கள் கவனத்தையும், மீடியா கவனத்தையும் பெற்றுத் தரும். அதே நேரத்தில், இம் முயற்சிகள் நீதித் துறையின் செயல்பாடுகள் குறித்துச் சந்தேகம் எழுப்பி, களங்கம் ஏற் படுத்துகின்றன என்பதை பா.ஜ.க தலைமை உணர வேண்டும்.

உண்மையில் ஹிந்து மதத்துக்கு ஒரு சோதனையாக இதை உணர்பவர்கள் வழக்கு விரைவில் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்திக் கோர வேண்டும். வழக்கின் முடிவு தெரிந்தால்தான், குழப்பத்திலும் துயரத்திலும் ஆழ்ந்திருக்கும் பல்லாயிரக்



கணக்கான பக்தர்களுக்குத் தெளிவு பிறக்கும். அக்னிப் பரிட்சையின் முடிவு எத்தகையதாக இருந்தாலும், காஞ்சி மடம் இந்தச் சோதனையிலிருந்து படிப்பினை பெற்று ராஜபாட்டை வகுத்துக் கொள்ள முடியும்.

மத மறுப்புக் கட்சிகளான தி.க, தி.மு.க போன்றவை வேறுவிதமாக, பிரசாரம் செய்து ஆதாயம் தேடிக் கொள்கின்றன.

'முதல்வரின் தனிப்பட்ட விரோதத்தின் விளைவான உள்நோக்கமே கைதுக்குக் காரணம்' என்கிற கருணாநிதியின் திடீர்க் குற்றச்சாட்டு, அவரது முந்தைய நிலைக்கு முரண்பட்டதாக அமைந்து 'ஸேம் ஸைட் கோல்' ஆகிவிட்டது!

இதனினும் விசித்திர வினோதம், 'இந்தக் கைதுக்கு சோனியா காரணம்' என்று தோகாடியா அளக்கிற ஜிபூம்பா கதை!

கருணாநிதியின் பல்டியை, ஐந்து பக்க அறிக்கை வெளியிட்டு நார் நாராகக் கிழித்துள்ள முதல்வர், சங்கரராமன் குடும்பத்துக்கு ஐந்து லட்சம் ரூபாய் கருணைத் தொகையை திடீரென்று அறிவித்து அளித்தது ஏன் என்பதும் புதிர்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் தவறான சமிக்ஞையாகவே இச் செய்கை அமைகிறது.

கைது நடந்த முதல் சில நாட்களுக்கு, மீடியாவே தன் இஷ்டத்துக்கு இவ் வழக்கில் விசாரணை நடத்தி, தீர்ப்புகள் எழுதி வந்தது. இப்போது அந்த 'நல்ல' காரியத்தை அரசியல்வாதிகள் மேற்கொண்டிருக்கிறார்கள்!

அனைத்துத் தரப்பினரும் போடும் ஆட்டத்துக்கு முற்றுப்புள்ளி விழ வேண்டுமானால், வழக்கு விரைவாகவும் நியாயமாகவும் நடத்தப்பட்டு, தீர்ப்பு சீக்கிரம் வெளியாக வேண்டும்.

போலீஸ் காவலுக்கு உத்தரவிட்ட நீதித் துறைதான் ஜயேந்திரரின் போலீஸ் காவலை நீட்டிக்க அனுமதி மறுத்துள்ளது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். நீதிமன்றங்களின் சுதந்திர இயக்கத்துக்கான ஓர் அடையாளமாக இதைக் கொள்ளலாம். அவை விரைந்து இயங்கி தீர்ப்புச் சொல்ல, காவல் துறை மட்டுமின்றி, மீடியா, அரசியல் கட்சிகள், பொதுமக்கள் அனைவருமே ஒத்துழைக்க வேண்டும்.

வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை ஆபத்தானது. இதனால் காலதாமதமும், பக்தர்களின் மனவேதனையும் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு மட்டுமே ஆதாயமாக இருக்கும்! ○



என்று வைத்துக் கொள்வோம். வந்த வரை லாபம் என்று ஷூட்டிங் எடுத்து முடித்து விடலாம். பிறகு வெள்ளை வானத்துக்கு நீல வண்ணம் பூசிவிடலாம்! இந்தத் தொழில் நுட்பம்தான் டிஜிட்டல் கலர் கரெக்ஷன்!

பொதுவாக மெஜந்தா, மஞ்சள்,

வானவில்லை நிறம் மாற்றலாம்!

பத்திரிகைகளில் வெளியாகும் சினிமா விமர்சனங்களில் அடிக்கடி வரும் வார்த்தை 'மிரட்டியிருக்கிறார்!'

அப்படி 'மன்மதன்' திரைப்படத்தில் மிரட்டியிருப்பவர், ஒளிப்பதிவாளர் ஆர்.டி. ராஜசேகர்.

பாடல் காட்சிகளிலும், டபுள் ஆக்ஷன் காட்சிகளிலும் அவர் காட்டியிருக்கும் பிரம்மாண்டமும், நேர்த்தியையும் அசரடிக்கிறது.

'டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் கலர் கரெக்ஷன் செய்யப்பட்ட முதல் தமிழ்ப் படம் மன்மதன் என்கிறார் ராஜசேகர்.

அதென்ன டிஜிடல் கலர் கரெக்ஷன்?

"ஒரு காட்சியில் நீல வானப் பின்னணி தேவை; ஆனால் அன்று வானம் வெள்ளையாக இருக்கிறது



சியான் வண்ணங்களைத்தான் இப்படி மாற்ற முடியும். 'பிரைமரி கலர்' எனப்படும் நீலம், சிவப்பு, பச்சை ஆகியவற்றை மாற்ற முடியாது. ஆனால் இந்த புதிய டெக்னிக் மூலம் வண்ணங்களில் வானவில்லையே நிறம் மாற்றலாம், விளையாடலாம்!" என்று சிரிக்கிறார் ராஜசேகர்.

டிஜிட்டல் கலர் கரெக்ஷன் காஸ்ட்லியான விஷயமா?

"நிச்சயமா, ரொம்ப செலவு பிடிக்கும் விஷயம்தான் இது! 'சம்சாரம் அது மின்சாரம்' போன்ற குடும்பப் படங்களுக்கு இது தேவையில்லை. 'நாயகன்' படம் போல வெவ்வேறு கால கட்டங்கள், வெவ்வேறு செட் அப்புகள் வரும் படங்களில், இந்த டிஜிட்டல் கலர் கரெக்ஷன் உபயோகமாய் இருக்கும்."

"அதெல்லாம் சரி, பழைய கறுப்பு வெள்ளை திரைப்படக் காட்சிகளில் உள்ள உயிரோட்டத்தைப் புதிய தொழில் நுட்பத்துடன் வரும் தற்போதைய வண்ணப் படங்களில் உங்களால் உணர முடிகிறதா?" என்றால், 'சட்'டென வருகிறது பதில்: "ஓல்ட் ஈஸ் கோல்ட்!"

- யுகந்த்


திரையுலக நினைவுகள்

நான் விற்ற முதல் படம்

ஏவி.எம்.சரவணன்



புரொடக்ஷன் எக்ஸிக்யூடிவாக நான் வேலை செய்து கொண்டிருந்த போது, எனக்கு அறை எண் ஐந்து ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த அறை எனக்கு வசதியாக இல்லாததால், நான் ஐந்தாம் எண் அறையிலிருந்து முதல் எண் அறைக்கு மாறினேன். இதில் எனக்கு மிகப் பெரிய வாய்ப்பு கிடைத்தது. அப்பாவைப் பார்க்க யார் வந்தாலும் என் அறையில்தான் காத்திருப்பார்கள். இது ஒரு வழக்கமாகவே ஆகிப் போனதால், என் தந்தையே சில சமயங்களில் 'அவங்களை (பார்வையாளர்களை) சரவணன் ரூம்ல வெயிட் பண்ணச் சொல்' என்று சொல்வதுண்டு. இன்னும் சில சமயங்களில், என் அறையில் காத்திருக்கும் பார்வையாளர்களை என் அறைக்கே வந்து கூட அப்பச்சி சந்தித்ததுண்டு. இதன் காரணமாக ஏழை முதல் கோடீசுவரர் வரை திரையுலகில் அனேகமாக அனைவரையும், சாதாரண மீடியேட்டர்கள் முதல் தயாரிப்பாளர்கள் வரை பலரையும் தெரிந்து கொள்ள முடிந்தது. அவர்களது அறிமுகம் கிடைத்தது. அவர்களோடு நெருங்கிப் பழகி திரையுலகின் நெளிவு சுளிவுகளை நேர்த்தியாகத் தெரிந்து கொள்ளவும், வெளியே என்ன நடக்கிறது என்பதை என் அறையிலிருந்தே புரிந்து கொள்ளவும் முடிந்தது. அதிலும் மீடியேட்டர்கள் எனப்படும் இடைத்தரகர்கள், திரையுலகம் பற்றி நிறையச் செய்திகளைத் தெரிந்து வைத்திருப்பவர்கள். அந்தக் காலத்தில் பிரபலமாக இருந்த 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் பணிபுரிந்து வந்த ராமபத்ரன் மற்றும் முனிரத்



தினம், சௌண்டய்யா போன்ற முன்னணி மீடியேட்டர்கள் எனக்குப் பழக்கமானார்கள். அவர்களிடமிருந்து திரையுலகச் செய்திகள் நிறையக் கிடைத்தன. முக்கியமான சிலவற்றை நான் அப்பச்சியிடம் பகிர்ந்து கொண்டதுண்டு.

அச்சமயத்தில் அப்பச்சி ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டார். புறப்படுவதற்கு முன்பு எங்கள் அலுவலக மேலாளர் ஜி. ரங்கநாதன் - நாங்கள் அவரை ஜி.ஆர் என்று அழைப்போம் - எனது மைத்துனர் எஸ்.எஸ். பழனியப்பன் (அப்போது விநியோகப் பிரிவைக் கவனித்துக் கொண்டிருந்தார்) ஆகியோரை அழைத்து, 'மாமியார் மெச்சிய மருமகள்' பட விற்பனைக்காக ஒரு குறிப்பைத் தயார் செய்து கொடுத்தார்.



● அப்பச்சி

படத்தைக் குறைந்த பட்சம் இந்த விலைக்கும், அதிக பட்சம் இந்த விலைக்கும் விற்கலாம் என்று அதில் என் தந்தை குறிப்பிட்டிருந்தார். மினிமம் அண்ட் மேக்ஸிமம் பிரைஸ்.

அதை. அடிப்படையாகக் கொண்டு அதிகபட்ச விலையென்று என் தந்தை குறிப்பிட்டிருந்த தொகைக்குப் பேசி, இரண்டு மூன்று ஏரியாக்களுக்கு விற்று அதற்கான காசோலைகளையும் ஜி.ஆரும் மற்றவர்களும் வாங்கியிருந்தார்கள்.

என் கவனத்திற்கு இது வந்தபோது, "ஏன் இந்த விலைக்கு விற்றீர்கள்?" என்று கேட்டேன்.

"அப்பச்சியே எழுதிக் கொடுத்த மேக்ஸிமம் விலைக்குத்தான் விற்றிருக்கிறோம்" என்றார்கள்.

"இல்லை... அதைவிட அதிகமான விலைக்கு இந்தப் படம் போகும். ஆகவே வாங்கிய 'செக்'குகளைத் திருப்பித் தந்து விடுங்கள்" என்றேன். நான் சொன்னதில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. தயங்கினார்கள். அப்பச்சி 'இது மேக்ஸிமம்' என்று சொன்னதைவிட அதிகமாகப் போகும் என்கிறானே சரவணன்' என்று நினைத்திருக்கலாம்.

"பிரச்னை என்று ஏதாவது வந்தால், அப்பச்சியின் கோபத்தை நீங்கள்தான் சந்திக்க வேண்டும்" என்றார்கள்.

"கவலைப்படாதீர்கள். எது வந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று நான் அவர்களுக்குத் தைரியம் சொன்னேன்.

அந்தக் கால கட்டத்தில் எந்தெந்தப் படங்கள் என்னென்ன விலைக்குப் போயிருக்கின்றன என்ற விவரத்தை நான் சேகரித்து வைத்திருந்தேன். அந்த அடிப்படையில் பார்த்தபோது அப்பச்சியின் கணக்குப்படியான மேக்ஸிமத்தைவிட அதிகமாக, 'மாமியார் மெச்சிய மருமகள்' படத்தை நிச்சயமாக விற்க முடியும் என்று எனக்குத் தோன்றியது.

என் சகோதரர் முருகன் எனக்கு ஆதரவாக நின்றார். 'உன் விருப்பப்படியே முயற்சி செய். அப்பச்சியிடம் சொல்லிக் கொள்ளலாம்' என்றார்.

ஏரியாக்கள் விற்று முடிந்தபோது அப்பச்சி அதிகபட்சத் தொகையாகக் குறிப்பிட்டிருந்த தொகைக்கு விற்றிருந்தால் மொத்தம் எவ்வளவு கிடைத்திருக்குமோ, அதைவிட தொண்ணூறாயிரம் ரூபாய் அதிகமாகக் கிடைத்திருந்தது!

எனக்குப் பெரு மகிழ்ச்சி. பொறுப்பேற்றபின் ஈடுபட்ட முதல் விற்பனையிலேயே அப்பச்சியின் கணிப்பை முந்திவிட்டோம் என்ற பெருமிதம்.

அப்பச்சியின் பாராட்டு வார்த்தைகளுக்காக நான் காத்திருந்தேன்.

ஜப்பானிலிருந்து திரும்பி சில நாட்கள் ஆன பின்னும், அவர் என்னிடம் இது பற்றி ஏதும் பேசவில்லை.

"பண விஷயம் அப்பச்சி பார்த்தாரா?" என்று ஜி.ஆரைக் கேட்டேன்.

"ஓ... பார்த்தாரே..."

"தொண்ணூறாயிரம் ரூபாய் அதிகமா வித்திருக்கிறதை நோட்டீஸ் பண்ணாரா?"

"ஓ... பண்ணாரே..."

"ஏதாவது சொன்னாரா?"

"இல்லை... ஒண்ணும் சொல்லலை..."

எனக்கு ரொம்பவும் ஏமாற்றமாகப் போய்விட்டது. ஏனென்றால் ஏதாவது நல்லது கண்ணில் பட்டால் உடனே பாராட்டும் தன்மை கொண்டவர் அப்பச்சி. கல்யாண வீட்டில் சமையல் நன்றாக இருந்தால், உடனே அந்தச் சமையல் கலைஞரை அழைத்து மன தாரப் பாராட்டுவார். மனோகர் நாடகம் பார்த்துவிட்டு வந்த மறுநாள், அதைப் பாராட்டி மனோகருக்குக் கடிதம் எழுதினார். கே. பாலசந்தரின் 'மேஜர் சந்திரகாந்த்' பார்த்துவிட்டு அப்பச்சி எழுதிய கடிதத்தைத் தன் பட்டப் படிப்புச் சான்றிதழைவிட முக்கியமானதாகக் கருதி, அதைப் பத்திரமாகப் போற்றிப் பாதுகாத்து வருவதாக பாலசந்தரே கட்டுரையொன்றில் எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட மனம் படைத்தவர் ஏன் என்னைப் பாராட்டவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. அதிலும் 1958ல் தொண்ணூறாயிரம் ரூபாய் என்பது எவ்வளவு பெரிய பணம்! நான் இதைப் பற்றி அப்பச்சியிடம் பேசவில்லை.

பிறகு ஒருமுறை அவர் அமெரிக்கா போனார். அப்போது 'தெய்வப்பிறவி' மற்றும் சில படங்கள் பிஸினஸ் செய்ய வேண்டியிருந்தது.

அச்சமயத்தில் வெளியான ஜெமினியின் 'இரும்புத்திரை', 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' போன்ற படங்கள், என்னென்ன ஏரியாவில் என்னென்ன விலைக்குப் பிஸினஸ் ஆகியிருக்கின்றன என்ற விவரங்கள் எல்லாம் அப்பச்சிக்குத் தெரியும். அவற்றை ஒரு பேப்பரில் எழுதி என்னிடம் தந்து, "'தெய்வப் பிறவி' பிஸினஸ் பாத்துக்கோ" என்று மட்டும் சொல்லிவிட்டு அமெரிக்காவுக்குக் கிளம்பினார்.

"மினிமம், மாக்ஸிமம் பிரைஸ் எழுதித் தரலியே, அப்பச்சி" என்று கேட்டேன்.

"அட, அதெல்லாம் உனக்குத் தெரியும்பா... பாத்துச் செய்" என்றார் அப்பச்சி.



• என்னுடன் ஜி. ரங்கநாதன்

அப்போதுதான் அவருக்கு என் மீதிருந்த நம்பிக்கையை நான் உணர்ந்தேன்.

'மாமியார் மெச்சிய மருமகள்' படத்தை நான் அதிக லாபத்துக்கு விற்றதை ஏன் அவர் பாராட்டவில்லை என்பதும் எனக்கு அப்போது புரிந்தது. அப்போதே அவர் பாராட்டியிருந்தால் ஒரு வேளை என் கழுத்தில் தலை நிற்காமல் போயிருக்கலாம். அப்பச்சியே பாராட்டிட்டார் என்கிற கர்வம் தலைக்குள் ஏறி, 'மற்றவர்களுக்கெல்லாம் பிஸினஸ் தெரியாது... நமக்குத்தான் எல்லாம் தெரியும்' என்ற மமதையில் நான் அதிகாரம் போட்டிருக்கலாம்... எனவேதான் என்னை அவர் பாராட்டவில்லை' என்று எண்ணிக் கொண்டேன்.

அடுத்தமுறை அவர் வெளிநாடு சென்றபோது 'உனக்குத் தெரியும்பா... பாத்துச் செய்' என்று அவர் சொன்னது, அன்றே எனக்குப் பெரிய 'சர்டிபிகேட்' கொடுத்தது போலிருந்தது. மனத்தில் இருந்த வருத்தமும் ஆதங்கமும் மகிழ்ச்சியாக மாறின. ஆனால் அந்த மகிழ்ச்சிக்கு வேட்டு வைத்தது போல ஒரு விஷயம் நடந்தது!

(தொடரும்)

உயிர்க்கிளி

மகேஸ்வரன்

திருவாரூர் பஸ் ஸ்டாண்ட்...

அன்று...

சரியான முகூர்த்த நாள்... ஏகப்பட்ட கூட்டம் இருந்தது... எல்லாப் பேருந்துகளும் நிரம்பி வழிந்தன.

உடம்பு முழுவதும் கிளி பொம்மைகளைத் தொங்க விட்டுக் கொண்டு, பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்தான் ராசு.

கழுத்தைச் சுற்றி...

தோளில்...

கைகளில்... என ஒரு நூறு பொம்மைகளாவது இருக்கும்...

கீ...கீ...

அந்த பொம்மைக்கிளி... அழகாய்க் கத்தியது. அச்சு அசலாய் கிளி கத்துவது போலவே இருந்தது.. கிளியின் உடம்பிலிருந்து சின்ன டியூப் நீண்டிருந்தது. அதன் நுனியில் ஹாரன் மாதிரி ஏதோ பொருத்தப்பட்டிருந்தது.

அதை விரலால் அழுத்தினால்,

கத்தியது...

சிறகுகளைப் படபடத்தது...

'இன்னைக்குச் செம கூட்டம்... எல்லா பொம்மைகளையும் வித்துடணும்.'

ஹாரனை அழுத்தி அழுத்தி கிளி பொம்மையைக் கத்த வைத்தான்.

கிளியின் கத்தலில் ஈர்க்கப்பட்ட குழந்தை ஒன்று... பேருந்தினுள் இருந்தபடியே தன்னுடைய தாயிடம் அடம் பண்ணியது.

''பொம்மை வேணும்மா... கிளி பொம்மை வேணும்மா.''

மூச்சு விடாமல் பேசி, பேருந்துக்குக் கீழே நின்றிருந்த ராசுவை விரலால் சுட்டிக்காட்டியது.

''தம்பி... கிளி எவ்ளோப்பா...?''

''பத்து ரூவாம்மா...!''

''கொறைச்சுக்கக்படாதா?''

''ஒரே வெலைதாம்மா.''

''சரி... குடு! நல்லா கத்தற கிளியா குடு!'' பர்சிலிருந்து ஒரு கசங்கிய பத்து ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினாள்.

கிளிபொம்மை குழந்தையின் கைக்கு மாறியது.

அடுத்த கணம் பேருந்து முழுவதும் அந்த ''கீ...கீ..'' கத்தல்... 'கீ...கீ...கீ...'

கிளியின் உயிர்க் கத்தல்... இன்னும் சில தாய்மார்களையும் கவர... வீட்டிலேயே விட்டு வந்த குழந்தையின் நினைவு வர... பேருந்தின் ஜன்னலின் வழியே.... கையை நீட்டினார்கள்.

''கிளி... இங்கே...வா...''

ராசுவின் வியாபாரம் சூடுபிடித்தது.

ராசுவுக்குப் பதினேழு வயது....

குடிகார அப்பா...

ராசு பத்தாம் வகுப்பு படிக்கிற போதே லாரியில் அடிபட்டு செத்துப் போனார்! உயிரோடு இருந்த போதும் வீட்டுக்கு அவரால் எந்தப் பிரயோஜனமும் இல்லை.

ரிக்ஷா மிதித்து கிடைக்கிற வருமானத்தில் சாராயம்... பிறகு முனியாண்டி விலாஸில் வயிறுமுட்ட சாப்பாடு. தள்ளாடியபடியே வீட்டுக்கு வந்தால் அம்மாவோடு எப்போதுமே சண்டைதான்! அடியும் உதையும் வாங்கியே நோயாளியாகியிருந்தாள் அம்மா. கொஞ்ச நாட்களிலேயே அவளும்...

ராசு அழுதது அம்மாவுக்காகவும், தன் குட்டித் தங்கை வள்ளி அநாதரவாய்ப் போய் விட்டாளே என்பதற்காகவும்தான்!


நான்காவது படித்தாள் வள்ளி. அவள் மீது ராசுவுக்கு உயிர். அவளையாவது நன்றாகப் படிக்க வைக்க ஆசைப்பட்டான்... கனவு கண்டான்.

தான் பள்ளிக்குப் போவதை நிறுத்தினான்.

நூறு ரூபாய் முதலீட்டில்... இந்த பொம்மை வியாபாரத்தில் குதித்தான்.

இந்தக் கிளி பொம்மை ஒன்று எட்டு ரூபாய். பத்து ரூபாய்க்கு விற்பான். ஒரு நாளைக்கு பத்து பொம்மை விற்றால்... இருபது ரூபாய் லாபம் கிடைக்கும்! அதிக பட்சம் இருபது... முப்பது பொம்மைகளுக்கு மேல் விற்க முடியாது! வருகிற பணத்தில் அரிசி, பருப்பு, காய்கறி, முக்கியமாக தங்கை வள்ளிக்கு தின்பண்டம் என வாங்கிப் போவான்.





காலையிலிருந்து இரவு வரைக்கும் பஸ் ஸ்டாண்டையே சுற்றிச் சுற்றி வர வேண்டும்... கால்கள் எல்லாம் வலிக்கும்! கடுக்கும்! தண்ணீர் தாகமெடுக்கும்! நிற்கவே முடியாது. இருந்தாலும் களைப்பையெல்லாம் மீறி... சுறுசுறுப்பாய்ச் சுற்றுவான்.

ஒவ்வொரு பொம்மையாய் விற்றுத் தீரத் தீர மகிழ்ச்சி பிரவாகமெடுக்கும்.

தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு பொம்மை... விற்காமல் போனால்... சிரமம்தான்!

முதலீடு செய்த பணம் செலவாகிப் போகும்.

கடனுக்குப் பொம்மைகளை வாங்கி வருவான்.

குழந்தைகள் இருக்கும் இடமாய் பார்த்துப் பார்த்து நடந்தான். ஹாரனை அழுத்தினான். கிளி கத்தக் கத்த...

குழந்தைகள் அடம் பண்ணப் பண்ண...

அன்று ராகவின் காட்டில் பண மழை.

இன்று அதிசயம்! ஐம்பது பொம்மைகளை விற்றிருந்தான். நூறு ரூபாய் லாபம் கிடைத்திருந்தது.

தினமும் இதேபோல் நூறு ரூபாய்

லாபம் கிடைத்தால்! மனம் கூத்தாடியது.

'அரிசி... பருப்பு... மளிகை சாமான் வாங்க ஐம்பது ரூபாய் போதும்... மீதி ஐம்பது ரூபாயில் என்ன வாங்குவது?

தங்கை வள்ளிக்கு ரோட்டோரக் கடையில் ஒரு கவுன் எடுத்துப் போக லாமா?

வள்ளியிடம் நல்ல கவுனே இல்லை! கிழிசலைத்தான் கட்டிக் கொண்டு திரி கிறாள். புது கவுனைப் பார்த்தால் எவ்வளவு சந்தோஷப்படுவாள்!

'அண்ணே வாங்கித் தந்துச்சு...' குதிப்பாள்.

கும்மாளமிடுவாள்.

அணிந்து கொண்டு உடைந்த கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துச் சிரிப்பாள். ராசுவுக்கு அந்த நினைப்பே தித்தித்தது. மனசில் பூப் பூத்தது... பஸ் ஸ்டாண்டை விட்டு வெளியே வந்தான். ரோட்டோரக் கடையை நோக்கி நடந்தான்.

பிளாட்பார துணிக்கடையில் ஒவ்வொரு கவுனாய்ப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும்போது முதுகுக்குப் பின்னால் அந்தக் கத்தல்...

"கீ...கீ..."

இது பொம்மைக் கிளியின் கத்தல் அல்லவே...

ராசு திரும்பினான்...

ஒரு கிழவன்... கம்பிக் கூண்டினுள்... ஒரு உயிர்க்கிளியை அடைத்து வைத்து... விற்பதற்காக அலைந்து கொண்டிருந்தான்.

"கீ...கீ..."

அந்தக் கிளி கத்தியது...

நீலவானத்தைப் பறி கொடுத்து, தன் இணைக் கிளியைத் தொலைத்து, பறப்பதை மறந்து போன அந்த உயிர்க்கிளி கத்தியது.

"கீ...கீ..."

ராசு அந்தக் கிளியையே பார்த்தான்.

தன் பொம்மைக் கிளிக்கு வானம் தேவையில்லை... சிறகும் தேவையில்லை... உணவும் தேவையில்லை...

அது பறக்காத கிளி...

பசிக்காத கிளி...

உயிர் இல்லாத கிளி... எந்த வலியும் தெரியாத கிளி...

இந்தக் கிளி அப்படி இல்லையே!

ராசு கண்களில் ஈரம் கசிய அந்தக் கிளியையே பார்த்தான்.

அந்தக் கிழவனை நெருங்கினான்.

"கிளி எவ்ளோ?"

'மூணு கொண்டாந்தேன். இரண்டை வித்துட்டேன். இது ஒண்ணுதான்... மிச்சம்... அம்பது ரூவா தர்றியா... கூண்டோட தர்றேன்!"

பேரம் பேசவில்லை ராசு.

"தாங்க...!"

கம்பிக் கூண்டை கையில் வாங்கினான்.

'கீ...கீ...'


கிளி கத்தியது.

சிறகை அடித்தது.

புரியாத பாஷையில் கத்தியது.

ராசு கூண்டைத் திறந்தான். கிளியை மெல்ல வெளியே எடுத்தான். இரு கைகளினாலும் அள்ளி தலைக்குமேலே உயர்த்தி வீசினான்.

அந்த உயிர்க் கிளி... சிறகைப் படபடவென்று அடித்தபடி... வானில் பறக்கப் பறக்க... ராசுவுக்கு மனசு நிறைந்து போனது...!



"டீ.வி. பார்த்துக்கிட்டே உங்க மனைவி அப்படி என்ன வேண்டிக்கறாங்க?"

"சீரியல்ல கணவன், மனைவி ஒண்ணு சேர்ந்துட்டா நூத்தியெட்டு தேங்காய் உடைக்கறதா வேண்டிக்கிறா!"

- லட்சுமி ஆவுடைநாயகம்



பட்டுப்புடைவை, படு கலக்கலான ஆபரணங்கள் என்று பளிச்சிட்டார் 'கஜேந்திரா' கதாநாயகி ஃப்ளோரா. கூடவே ஐயோடா... வெட்கம்! அப்படியே சிந்தாமல், சிதறாமல் 'கிளிக்'கிக் கொண்டு, நேராக பாலு ஜுவல்லர்ஸ் உரிமையாளர் ஐயப்பன் முன்னால் ஆஜரானோம். 'விலை மதிப்பில்லாத ஃப்ளோராவின் புன்னகையைத் தவிர்த்து (ஃப்ளோரா: 'ஹுச்சு!') மற்ற நகைகளுக்கு மட்டும் விலை போட்டுச் சொல்லுங்களேன்?" என்றோம். "டபுள் ஓ.கே" என ஒப்புக் கொண்டார்.

"ஃப்ளோரா அணிந்திருக்கிற நெற்றிச் சுட்டி உள்ளிட்ட கூந்தல் அலங்கார அணிகலன்கள் அனைத்தும் ஒரு செட்டா கவே கிடைக்கின்றன. இவை பழைய காலத்தைய ரூபி - எமரால்ட் வகையைச் சேர்ந்தவையாகும். இவற்றின் விலை ஒரு லட்சம் ரூபாய். கழுத்திலுள்ள 'பளபள' முத்து ஆரமும், அதே ரூபி - எமரால்ட் தான்! இதன் லேட்டஸ்ட் ரேட் ஐம்பத்தி இரண்டாயிரத்தில் தொடங்கி எழுபதா யிரம் வரையிலாகும். கூடவே கன ஜோராகத் தொடங்குகின்ற நெக்லஸின் தற்போதைய விலை ஒரு லட்சம் ரூபாய்.

இடுப்பில் அணிந்துள்ள ஒட்டியாணம் போன்று இதே மாடலில், சைஸில் செய்ய வேண்டுமானால், முன்னூறு கிராம் அளவுக்குத் தங்கம் தேவைப்படும். கூடவே அனைவரையும் கவர்கின்ற அழகிய கற்களையும் பதிக்க வேண்டும். எனவே இதற்கு எப்படியும் இரண்டு லட்ச ரூபாய் ஆகும்.

இது போன்ற வங்கி வளையல்கள்

ஜொலிக்குதே...!

அணிவது ஒரு காலத்தில் 'ஓகோ' ஃபேஷன்! இப்போது இது மறுபடியும் இளம் பெண்களைக் கவர்ந்திருக்கிறது. இந்த ஒரு வளையலின் விலை ஐந்தாயிரம் ரூபாய். காதில் தொங்குகின்ற ஜிமிக்கிகள் பத்தாயிரம்! ஆக, கூட்டிக் கழித்து சரியாகக் கணக்குப் போட்டால் மொத்த நகைகளின் மதிப்பு எப்படியும் ஐந்து லட்சத்துக்கு வரும்" என்றவர், கூடுதலாக நகை அணிவதில் இன்றைய டிரெண்ட் குறித்தும் பகிர்ந்து கொண்டார்.

"இந்திய அளவில், நகைகள் தயாரிப்பில் கோயமுத்தூர்தான் முன்னணியில் உள்ளது. இதற்கு அடுத்த இடத்தில் கொல்கத்தா! இவ்விரு நகரங் களிலிருந்தும் தினசரி நூறுக்கும் மேற் பட்ட மாடல்கள் புதிதாக அறிமுகமாகிக் கொண்டே இருக்கின்றன. தவிர, இப் போது 'முகப்பு செயின்'களுக்கு அதிகளவு வரவேற்பிருக்கிறது. இரட்டை வடம் எல்லாம் யாரும் விரும்புவதில்லை. கல்லூரி மாணவிகளின் லேட்டஸ்ட் செலக்ஷன் அண்ட் கலெக்ஷன் எல்லாம், ஜிமிக்கி தொங்குகின்ற வளையல்கள்தான்! பிரேஸ்லெட் அணியும் பழக்கமும் பெண்களிடம் ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஏகப்பட்ட நகைகள் போட்டு 'நாமொரு நகைக் கடையாகி விடக் கூடாது'ங்கிற கவனமும் இருக்கு. அதனால் உறுத்தாத, கண்களுக்கு லட்சண மான நகைகளுக்குக் கூடுதல் வரவேற்பு உள்ளது.

இது மட்டுமில்லாமல் 'ஐயோ வைரமா'ன்னு பதறிய காலம் போய், 'ஹையா... வைரம்'னு எல்லோ ரும் பரவசப்பட முடிகின்ற காலமிது. அந்நாளிற்கு வைரம் பதித்த நெக்லஸ் எல்லாம், இருபத் தைந்தாயிரம் ரூபாய்க்கே கிடைப்பது சர்வ சாதாரணம். பெண்களிடம் நகைகள் தேர்ந்தெடுப்பதில் சிறந்த விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளது" என்கிற இவர்,

"நான் சொன்னதெல்லாம் இந்தப்

படம்: சுதர்ஜி



படத்தில் உள்ள நகைகள் தங்கமாக இருக்கும் பட்சத்தில்தான். ஆனால் ஃப்ளோரா அணிந்திருப்பவை எல்லாம் கவரிங்!'' என்றார் புன்னகையுடன்.

\- பாலா



• ஃப்ளோரா

சின்னான் செய்திகள்

நானும் வேண்டாம் வேண்டாம்னு பாக்கறேன். என்னையும் அரசியல் வாதியா மாத்திருவாங்க போல! அதான் போன வாரம் 'மும்பை எக்ஸ்பிரஸ் படத்துல கஜோல்'னு அறிக்கை விட்டேன். இந்த வாரம் அறிக்கையை மாத்தி விடுறேன். அதுல 'கஜோல் இல்ல... கமலோட ஜோடி கட்டுறது டெலிஃபோன் மணியாட்டம் சிரிக்கும் மனீஷா!

போனவாரம் சிலி நாட்டுல ஆசியா பசிபிக் பொருளாதார கூட்டுறவு மாநாடு நடந்துச்சாம். இரவு விருந்துக்கு ஜார்ஜ் புஷ் இரண்டு பாதுகாவலர்களோட போனாராம். ஒரு பாதுகாவலரை உள்ளே விட மறுத்துட்டாங்களாம். "இன்னா... நான் யாருன்னு நினைச்சுக் கிட்ட?" அப்படின்னு ஷூடு கட்டிச் சண்டை போட்டு, பாதுகாவலரை உள்ளே கூட்டிக்கிட்டுப் போனாராம் புஷ். அடுத்த நாள் விருந்துல புஷ்




கலந்துக்கலையாம். அதனால் சிலி மக்கள் 'புஷ்ஷுக்கு நாகரிகம் தெரியல'ன்னு 'ஒலி' எழுப்பினாங்களாம். அதான் புஷ் - ரொம்ப ஃபீல் பண்ணி எனக்கு ஒரு கவிதையை மெயில் பண்ணினாரு - 'சிலி ரொம்ப சில்லி!'

கஸ்தூரி, சுமதி கதை தெரியுமா? அதான் நம்ம பழநி கோயில் யானைகளைச் சொல்றேன். அவங்களோட பாகன்கள் சரியா ஒத்துழைக்காததால, முதுமலை 'கேம்ப்'க்கு ஜம்முன்னு போக முடியலையாம். பாகன்களைக் கோயில் நிர்வாகம் சஸ்பெண்ட் செஞ்சிட்டாங்களாம். 'சாமி' வரம் கொடுத்தும், பாகன்கள் சொதப்பிட்டாங்களேன்னு வருத்தத்துல யானைகள் மெலிஞ்சிடுச்சாம்(!)


சென்னையில அசோக் பில்லர் பக்கத்துல உள்ள ஒரு தியேட்டர்ல 7/G படத்தை பதினெட்டு வயசுக்கு உட்பட்ட பசங்களும் பார்த்தாங்களாம். 'ஏ' சர்டிபிகேட் படத்தை 'ஏன்' பார்க்க விட்டீங்க?'ன்னு சொல்லி தியேட்டர் ஊழியர்களை, சென்சார் போர்டு உறுப்பினர்கள், போலீசை வைச்சு கைது பண்ணிட்டாங்க! சரி நியாயம்தான். கொடுத்த சர்டிபிகேட்டுக்கு ஏத்த மாதிரி வேலை பாத்திருக்கிங்க! இப்படியே 'ரெய்டு' தொடர்ந்து போனீங்கனா, பாதி தியேட்டர் ஊழியர்கள் ஜெயில்லதான் படம் ஓட்ட வேண்டியதிருக்கும்.

செல்லமே வில்லன், லஜ்ஜாவதிக் கள்ளன், அதான் பாய்ஸ் பரத், செமஸ்டர்ல 'பிட்' அடிச்சதாச் சொல்லி, எக்ஸாம் எழுத





விடலையாம் லவ்லெட்டரா டயலாக் பேப்பரா, லாண்டரி பில்லான்னு தெரியல, பையில ஒரு பேப்பர் இருந்துச்சுன்னு வெளிய அனுப்பிட்டாங்களாம். 'பிட்' அடிக்கறது, 'கட்' அடிக்கறது, 'சைட்' அடிக்கறதெல்லாம் தனிக் கலை! கத்துக்க சின்னானை அணுகலாம்...



புக் பேங்க்

தமிழ்க் கவிதை வரலாற்றில் முற்றிலும் கேள்விகளாலான இது போன்ற கவிதை நூல் வெளிவந்திருப்பது புதிய முயற்சி.

கேள்வி கேட்பது எவ்வளவு நுட்பமானது என்பதை நமக்குப் புரியவைத்திருக்கிறார் கவிஞர். கேட்டிருக்கும் கேள்விகள் அழகிய கவிதைகள்! நேர்த்தியான கேள்விகளால் ஆன கவிதை நெசவு இழையோடி இருக்கும் அற்புதம்! மனத்தை வசீகரிக்கும் உணர்வலைகள்!

மனிதனுக்குப் பயணம் போகின்ற வழி தெரிந்திருக்க வேண்டும்.

போகும் இடம்
தெரியாதவனுக்கு
வண்டி ஓட்டத் தெரிந்து
என்ன பயன்?

பயணம் என்பதைச் சொல்லாமல் சொல்லியிருப்பது வெறும் பயணத்தை மட்டுமா குறிக்கிறது?

பக்கம் பக்கமாய்
எழுதியவன்
எப்படி
எந்தப் பக்கத்திலும்
இல்லாமல் போனான்?
என்கிறார்.

நூலாசிரியர் இந்த நூலின் எல்லாப் பக்கங்களிலும் இருக்கிறார்.

கேள்விகளுக்கு பதில்கள்தான் தேவை. பதிலை வேண்டாமென்று மறுத்து கனாக்காண எண்ணும் கேள்விக்கு, என்ன தேவை? இவரது கேள்விக்கு பதில் தேடப் போனால் இதில் சுவை, நயம், அங்கதம், சிந்தனை, பிரமிப்பு என்று என்னென்னவோ கிடைக்கின்றன.

இலக்கிய ரீதியாக மேலை நாட்டுத் தாக்கம் பாரதி உட்பட பலராலும் ஏற்கப்பட்டதுதான். என்றாலும் சென்ற நூற்றாண்டுக் கவி பாப்லோ நெருடாவின் தாக்கம், இந்தக் கவிதைகளில் உணர்வும், உள்ளமுமாய், நிழலும் நிஜமுமாய், கவியும் சொல்லுமாய்ப் பிணைந்து கிடக்கின்றன.


'கேள்வி கேட்காமல் வாழ்க்கையில்லை' என்றான் நம் கவிஞன். வாழ்க்கையில் எத்தனை கேள்விகளுக்கு விடை கிடைக்கிறது? பதில் கிடைக்காவிட்டாலும், இவரது கேள்விகள் சிந்தனையைத் தூண்டி புதுப்புதுப் பாதைகளைக் காட்டுகின்றன.

கவிதை தொனிக்கும் கேள்விகளா, கேள்விகளைத் தொகுத்த கவிதைகளா என பகுக்க முடியாமல், சிந்தனையில் கொறிப்பதற்கான சுவையான கவித் தொகுப்பு.

விழிகள் பதிப்பகம், 8/எம்.139, 7ம் குறுக்குத் தெரு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர் விரிவு, சென்னை-600 041. விலை: ரூ. 55/-

- இராம. குருநாதன்

19 நிகழ்ந்தது விபரீதம்



"உனக்கு இரங்காவிடில் அந்த வைகுந்தன் வேறு யாருக்கு இரங்கக்கூடும்?" என்ற கேள்வியுடன் எதிரே நின்ற அந்த மனிதரைக் கண்டதும் நந்திவர்மனின் முகம் மலர்ந்தது.

"வாருங்கள் ராஜாதித்தரே, எப்பொழுது வந்தீர்கள்? இப்படி அமருங்கள்" என்ற நந்திவர்மன், அருகிலிருந்த கருங்கல் மேடையில் அவருடன் அமர்ந்தான்.

"இதோ வந்து கொண்டேயிருக்கிறேன் நந்திவர்மா. உன்னைக் கண்டபின்பே இல்லத்துக்குச் செல்ல வேண்டுமென்று வந்தேன்" என்றார் அந்த மனிதர்.

நந்திவர்மன் முகத்தில் முறுவல் படர்ந்தது. "அத்தனை முக்கிய சேதியோடு வந்திருக்கிறீர்களா?"

"நீ அறியாத செய்தியேது நந்திவர்மா? இருந்தாலும் நேரில் கண்டுவந்ததையும் கூறுகிறேன். ராஷ்டிரகூடத்தின் நிலைமை நீ யூகித்தபடியேதான் இருக்கிறது. மகாராஜா கோவிந்தன் என்னைப் பார்க்கவும் மறுத்துவிட்டார்."

"காரணம்?"

"நான் உனக்கு சிறிய தந்தையாக இருப்பதுதான். பல்லவத் தூதுவர்களையும், பிரதானிகளையும் அரண்மனைக்குள் அனுமதிப்பதேயில்லை. இளவரசர் துருவன் நடத்தும் புரட்சிக்கு நாம் மறைமுகமாக ஆதரவு தருகிறோம் என்பது அவரது சந்தேகம்."

"....பிறகு?"

"துருவன் இன்னும் சில தினங்களில் இங்கு வருவதாக இருக்கிறான், தங்களிடம் நேரிடையாக உதவி கேட்க. ஆனால் மகாராணி ரேவாதேவி இதற்கு..."

நந்திவர்மன் பலமாக நகைத்தான். "மகாராணி துருவனை என்ன செய்வாள் என்பதை இப்போது யூகிக்கும் திறன் எனக்கில்லை ராஜாதித்தரே" என்றான் நகைத்தபடி.

ராஜாதித்தர் சற்றுக் கழித்துக் கேட்டார். "நந்திவர்மா, அந்த சோழ நாட்டு வாலிபன் பராந்தகனைப் பற்றி..."

நந்திவர்மன் முகத்தில் சற்று வருத்தம் தெரிந்தது. "நானே அவனைச் சந்தித்தேன் ராஜாதித்தரே. அவன் தான் யாரென்பதை உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. அந்த விருப்பமும் அவனுக்கில்லை. அவன் விரும்புவது சோழ நாட்டின் விடுதலை மட்டுமே."

"நானே சென்று அவன் யாரென்பதைக் கூறி அழைத்து வருகிறேன். அவனுக்கு உரிய வாழ்வை நாம் அளிப்பதுதான் முறை நந்திவர்மா. உன் மகன் தந்திவர்மனைவிட, அவனுக்கு இந்தப் பல்லவ நாட்டில் அதிக உரிமை இருக்கிறது.



விஷ்வக்சேனன்

குட வைரம்

தமிழகத்து மக்களும், மன்னர்களும் அவனைத்தான் ஏற்றுக் கொள்வார்கள்."

"உண்மைதான் ராஜாதித்தரே. அவன் ஏற்பதானால் இந்த அரியணையை அவனிடம் அளித்துவிட்டு, நான் வைகுந்தன் சேவையில் இறங்கி விடுவேன் ஆனந்தமாக."

"எதற்கும் நான் அவனைச் சந்தித்து பேசிப் பார்க்கிறேன் நந்திவர்மா."

"முயன்று பாருங்கள்" என்றான் நந்திவர்மன் மாறாத முறுவலுடன்.

எங்கோ மலைநாட்டை நோக்கிச்

சென்று கொண்டிருந்த பராந்தகனின் வாழ்வை நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வர நந்திவர்மனும், ராஜாதித்தரும், ஏன் பாண்டியர் அரண்மனையிலும்கூட ஏற்பாடுகள் பல நடந்து கொண்டுதானிருந்தன.

ஆனால் அந்த வைகுந்தன் திருவுள்ளம் வேறாகயிருந்தது.

'கொல்சி' என்று வெளிநாட்டவராலும், கொற்கை என்று தமிழராலும் அழைக்கப்பட்ட அந்தத் துறைமுகம், பார்வைக்கு என்னவோ வழக்கமாக இயங்குவதைப் போலத்தான் இயங்கிக் கொண்டிருந்தது. ஆனால் காவலுக்கு நின்ற பாண்டிய வீரர்களின் விழிகள் அவ்வப்போது சற்றுத் தள்ளியிருந்த அந்த மாளிகையை நோக்கிச் சென்று மீண்டு கொண்டிருந்தன. அன்று முத்துக்களவு நிகழப் போவதாக கிடைத்திருந்த செய்தி, வீரர் அனைவரையுமே மிகுந்த எச்சரிக்கையுடன் நடமாட வைத்திருந்தது.

பலத்த காவல்களைக் கடந்து, மாளிகையின் வாயிலையும், அடுத்து நீண்ட தாழ்வரையையும், உள்ளே விரிந்த கூடத்தையும் கடந்து, பெரும் இருப்புக் கதவுகளைத் திறந்து கொண்டிருந்தான் கொற்கையின் கோட்டைத் தலைவன். பின்னால் விஷ்ணுசித்தரும் இளவரசி குமுதவல்லியும் நின்று கொண்டிருந்தனர். கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததும் விரிந்தது வட்டவடிவிலான ஒரு பெரும் அறை. சிற்பங்களும் சித்திரங்களும் நிறைந்து, தரையெங்கும் முத்துப் பேழைகள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன.

"இந்த அறையின் ஒரே திறவுகோல் என்னிடம்தான் இருக்கிறது இளவரசி. இங்கு வேறு கதவுகளோ வழியோ இல்லை. களவு எப்படி நடக்கிறதென்பதுதான் புரியவில்லை" - கோட்டைத் தலைவன் குரலில் குழப்பம் தொனித்தது.

விஷ்ணுசித்தரின் கூர்விழிகள் அந்த அறையின் கூரையிலிருந்த சித்திரங்களையும், கூரையைத் தாங்கி நின்ற தூண்களின் சிற்பங்களையும் ஆராய்ந்து, இறுதியாக அறையின் நடுவில் தரையில் வரையப்பட்டிருந்த தாமரை வடிவச் சித்திரத்தின் மீது படிந்தன. கரத்திலிருந்த நந்திவர்மனின் ஓலையை ஒருமுறை வாசித்தவர், "நந்திவர்மன் கூறியபடிதான் இருக்கிறது. சிற்ப சாஸ்திரத்தை அவனைவிட அறிந்தவர் வேறு யார்?" என்று முணுமுணுத்துக் கொண்டார்.

கோட்டைத் தலைவனை நோக்கியவரின் கேள்வி நிதானமாக வந்தது: "தலைவரே, இந்த மாளிகைக்கு வடக்கே என்ன இருக்கிறது?"

அவன் முகத்தில் இன்னும் குழப்பம் தெரிந்தது. "வடக்கில் கால் காத தூரம் வரை செடி கொடிகள்தான். அடுத்து மதிற்சுவருக்குப் பின்னால் வணிகர் வீதி இருக்கிறது."

"சரி, இரண்டாம் ஜாமம் தொடங்கிவிட்டது. இந்த அறையில் ஒரு தீபத்தைத் தவிர மற்றவற்றை அணைத்துவிடு. வணிகர் வீதியின் இரு பக்கங்களிலும் நம் வீரர்களை நிறுத்திக் காத்திரு. முகுந்தன் அங்குதானிருக்கிறான்."

"தாங்கள்... இளவரசி...?"

"இந்த அறையில்தான் காத்திருக்கப் போகிறோம், இன்று நிகழப் போகும் களவைக் காண" என்றார் விஷ்ணுசித்தர்.

ஒற்றை தீபம் மட்டும் மங்கலான ஒளியை வீசிக் கொண்டிருக்க, எந்த பாதாளத்தில் அறைகள் கட்டப்பட்டாலும் வந்து சேர்ந்து விடும் சுவர்க் கோழிகளின் ரீங்காரம் மட்டும் அந்த அறையில் ஒலித்துக்

"மன்னர் வாளைத் தீட்டிக் கொண்டு இருக்கிறாரே. போருக்குச் செல்லப் போகிறாரா?"

"நீ வேறு... மகாராணி சமையலுக்குக் காய் நறுக்கக் கூப்பிட்டார், அதான்!"

- ஆ. முருகன்



கொண்டிருந்தது. நேரம் நழுவிக் கொண்டிருந்தது.

"இன்னும் எத்தனை நேரம் காத்திருப்பது விஷ்ணுசித்தரே?" இளவரசியின் பொறுமையும் நழுவத் தொடங்கியது அவளது கேள்வியில் புலப்பட்டது.

"சற்றுப் பொறு மகளே, அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்" என்றார் விஷ்ணுசித்தர்.

மெல்லிய குளிர்காற்று அறைக்குள் ஊடுருவியது. ஏதோ சக்கரங்கள் சுழல்வதைப் போன்ற கரகரவென்ற ஒலி எழுந்தது. அறையின் நடுவில் தரையில் வரையப்பட்டிருந்த தாமரை வடிவச் சித்திரம், மெல்லச் சுழன்று உயரத் தொடங்கியது. உயர்ந்த பின்பே அது வட்டவடிவ இருப்புச் சலாகை என்பது புரிந்தது. அதை உயர்த்திய தண்டுப்பகுதி ஓர் ஆள் நுழையக்கூடிய உயரம் வந்ததும் நின்றது, படிகளில் யாரோ ஏறிவரும் ஒலி கேட்டது. தரையிலிருந்து ராஜமாதுலரின் தலை முளைத்து, உயர்ந்து, மேலே ஏறி வந்தார். தொடர்ந்து மலைநாட்டு வீரர்களாகத் தெரிந்தவர்கள் சிலரும் வந்தனர். வந்தவர்கள் பேழைகளை நெருங்கி முத்திரைகளை நீக்க முயற்சிக்க, ராஜ மாதுலர் அவர்களைத் தேக்கினார்.

"வீரர்களே, இனி முத்திரைகளை நீக்கி முத்துக்களை எடுக்க வேண்டாம். பேழைகளை அப்படியே கீழே இறக்கி விடுங்கள்!"

வீரர்கள் பேழைகளை இறக்க, முக்காலுக்கும் மேல் பேழைகள் இறங்கியதும், ராஜமாதுலர் வெகு தாராள மனத்துடன் இரண்டொரு பேழைகளை விட்டுவிட்டு, படிகளில் இறங்கினார். தாமரைவடிவச் சலாகை சுழன்று, மீண்டும் தரையோடு பொருந்தியது.

இளவரசி வெடித்தாள் "விஷ்ணு சித்தரே... நம் வீரர்களை அழைத்து..."

"பொறு மகளே, அவர்கள் அத்தனை எளிதில் இங்கிருந்து சென்றுவிட முடியாது. என்னுடன் வா" என்றவர் தூணொன்றை நெருங்கி, யாளி வடிவச் சிற்பமொன்றை வலதுபுறமாகத் திருப்பினார். தாமரை வடிவச் சலாகை மறுபடி சுழன்று உயர்ந்தது.

கீழே தெரிந்த படிகளில் இளவரசி பின்தொடர இறங்க ஆரம்பித்தார் விஷ்ணுசித்தர்.



"புலவரே... நீர் சைவமா, அசைவமா?"
"இதிலென்ன சந்தேகம் மன்னா... 'நீர்' சைவம்தான்!"
- குட்டி பிரசன்னா

சுழன்று சுழன்று இறங்கிய படிகள் சமதரையை அடைந்தபோது, எதிரே நீண்ட தாழ்வரையும், சுரங்க வழிகளாகத் தெரிந்த இரு பாதைகளும் தெரிந்தன. பாதையின் தொடக்கத்தில் பேழைகள் அடுக்கப்பட்டிருக்க, ராஜ மாதுலர் அவர்களிடம் ஏதோ கூறிக் கொண்டிருந்தார்.

விஷ்ணுசித்தர் சுரங்கப்பாதை நெடுக வரிசையாகத் தெரிந்த தூண்களை உற்று நோக்கிவிட்டு, திரும்பி தனக்குப் பின்னால் எதையோ தேடினார். அவர் தலைக்குச் சற்றுமேலே இரு இருப்புச் சங்கிலிகள் பெரும் வளையங்களுடன் புலப்பட்டன. அதேசமயத்தில் பின்னால் இருளிலிருந்து "இளவரசி..." என்ற குரல் ஒலித்தது.


அந்தக் குரலைக் கேட்ட இளவரசி திகைத்தாள்.

"முகுந்தா, அங்கேயே இரு" என்றார் விஷ்ணுசித்தர்.

"விஷ்ணு சித்தரே, இவர்களை இங்கேயே அழித்துவிடலாம். விட்டு வைக்க வேண்டாம்" என்றான் முகுந்தன்.

"வேண்டாம் முகுந்தா. நான் கூறும்போது உனக்குப் பின்புறம் இருக்கும் கதவைத் திறந்து நம் வீரர்களை வரவிடு, போதும்" என்றவர் முன்னால் நடந்து பேழைகளினருகே சென்று "ராஜமாதுலா" என்று அழைத்தார்.

சட்டென்று திரும்பிய ராஜமாதுலர் முகத்தில் திகைப்பு தெரிந்தது. அடுத்து குரூர நகைப்பொன்றும் உதிர்ந்தது. பின்னால் இளவரசி நிற்பதையும் கவனித்தவர், "குணவர்மா, காஞ்சியின் ரத்தின வணிகனாக இருந்தவன் துறவி



கௌரவ லஞ்சம்!

டெண்டர் எடுக்க காண்ட்ராக்டர்கள், அதிகாரிகளை கவனிப்பார்கள். ஆனால் மகாராஷ்டிரத்தில் கதையே வேறு. மகாராஷ்டிர மாநில சாலை போக்குவரத்து நிறுவனம், தனது ப்ராஜெக்ட் ஒன்றிற்கு அறிக்கை தயாரித்துத் தர டெண்டர் கோரியுள்ளது. டெண்டர் தரப்படும் நிறுவனம் அரசு அதிகாரிகளுக்கு ஒரு மாருதி எஸ்டீம் கார், டிரைவர், எரிபொருள் செலவு, ஒரு நல்ல நிலையிலுள்ள மொபைல் ஃபோனும் தர வேண்டும் என கோரியுள்ளது. இது பற்றிக் கேட்டதற்கு அரசு அதிகாரிகள் 'நாங்கள் ஒளிவு - மறைவு இன்றி இதனை வெளியிட்டுள்ளோம்' எனக் கூறுகின்றனர்.

- எஸ். மோகன், பூனே

யாகிவிட்டாயா? காஞ்சியிலிருந்து இவர்கள் தப்பவும் நீதான் உதவியிருக்க வேண்டும்... இளவரசி, இந்த முறையும், என்னைக் கையும் மெய்யுமாய்ப் பிடித்திருக்கிறாய். ஆனால் இம்முறை உன்னையும், இந்த ரத்தின வணிகனையும் சிறையெடுக்கப் போவதில்லை. இங்கேயே அழித்து விட்டே செல்கிறேன்" என்றார் குரோதம் நிறைந்த குரலில்.

"ராஜமாதுலா" விஷ்ணுசித்தரின் குரல் நிதானமாக ஒலித்தது.

"என்ன, கொன்று விட வேண்டாமென்கிறாயா? வசமாகப் பிடித்திருக்கிறேன் இருவரையும். இனி இந்த சந்தர்ப்பம் கிடைப்பது அரிது, வீரர்களே..."

விஷ்ணுசித்தரின் கரம் வீரர்களைத் தேக்கியது. "ராஜமாதுலா, யார் யாரைப் பிடித்திருக்கிறார்கள் என்பதை அறியாமல் பேசுகிறாய். பேழைகளை ஒப்படைத்து விட்டு சரணடைந்து விடு. பாண்டிய மன்னரிடம் நானே பேசி உன்னை விடுவித்து ராஷ்டிரகூடத்துக்கு அனுப்பி வைக்கிறேன். ராகுலனும் வில்லவனும் எங்கே, சொல்."

ராஜமாதுலரின் எகத்தாள நகைப்பு சுரங்கத்தினுள் எதிரொலித்தது. "குணவர்மா, பாண்டிய மன்னனிடம் எனக்காக நீ பரிந்து பேசப் போகிறாயா? அந்த வரகுணனைப் போல் முழுமூடன் வேறு யாரும் இருக்க முடியாது. இல்லையென்றால் இந்த அபாயத்தில் இளவரசியையும், எதற்கும் உதவாத உன்னையும் அனுப்பி வைப்பானா? உங்கள் இருவரையும் இங்கேயே வெட்டியெறிந்து விட்டுச் செல்கிறேன். உங்கள் உடல்களைக் கூட எளிதில் கண்டு பிடிக்க முடியாதபடி சுரங்க வழியையும் அடைத்து விடுகிறேன்" என்றவர் திரும்பி வீரர்களை நோக்கி, "வீரர்களே, இவர்களை வெட்டியெறிந்துவிட்டுப் பேழைகளை எடுத்து வாருங்கள்" என்று இரைந்தார்.

ராஜமாதுலர் வார்த்தைகளை முடிக்குமுன், இளவரசி நின்ற இடத்தின் பின்னால் இருளடித்த பகுதியிலிருந்து "ராஜ மாதுலா..." என்று முகுந்தனின் குரல் ஆவேசத்துடன் பலமாக ஒலித்தது.

ஒருகணமே மீண்டும் திகைத்த ராஜமாதுலர், "ஆகா, அந்த ஒற்றனும் இங்குதான் இருக்கிறானா? வீரர்களே, அந்த மூலையில் நிற்பவனை முதலில் ஈட்டிகளை எறிந்து கொன்று விடுங்கள். வெளியிலிருக்கும் நமது வீரர்களையும் வரச் சொல்லுங்கள். இந்த இருவரையும் கொன்று போடுங்கள்" என்று உரக்கக் கூவினார்.

அடுத்த கணம் இருளடித்த மூலையிலிருந்து எழுந்து பாய்ந்த முகுந்தன், மேலேயிருந்து தொங்கிய சங்கிலிகளில் முன்னதாக இருந்ததை பலமாகப் பிடித்து இழுத்தான். அந்தச் சுரங்க வழியே இடிந்து விழுவதைப் போன்று கரகர வென்ற ஒலி பலமாக ஒலிக்கத் தொடங்கியது.

'முகுந்தா... வேண்டாம் முகுந்தா...'' அலறினார் விஷ்ணுசித்தர் பலமாக.

ஆனால் அதற்குள் காரியம் மிஞ்சிவிட்டது.

அடுத்தகணம் இளவரசியின் கண்ணெதிரே நிகழ்ந்தது அந்த விபரீதம்!

(தொடரும்)

புதிய

Exo

Anti-bacterial Dishwash bar

க்ரீஸ் கட்டர் சக்தி + கிருமிகளிடமிருந்து பாதுகாப்பு மற்றும் ரூ. 5 மதிப்புள்ள எக்ஸோ ஸஃபாய் ஸ்க்ரப்பர் முற்றிலும் இலவசம்.

ரூ. 5
மதிப்புள்ள
(60mm x 75mm)
ஸ்க்ரப்பர்
இலவசம்!

புது க்ரீஸ்
கட்டர் உடன்





புதிய Exo ஆன்டி-பாக்டீரியல் டிஷ்வாஷ் பார் உங்களுக்கு இரண்டு கூடுதலான ஆரோக்கிய நன்மைகளை அளிக்கிறது.

விடாப்பிடியான கறையையும் நீக்கிட இப்போது Exo ஒப்பற்ற க்ரீஸ் கட்டர் கொண்டது. உங்கள் பாத்திரங்களை மிகத் தெளிவாக சுத்தமாக்குகிறது.

மேலும் ரூ. 5 மதிப்புள்ள எக்ஸோ ஸஃபாய் ஸ்க்ரப்பரை இலவசமாகப் பெறலாம்!

சலுகை 400 கிராம் எக்ஸோ டிஷ்வாஷ் பார் உடன், மட்டும்.

Situations/JLL-EXO/07/2004 Tam

இமான்...

கேசி

கி.பி.4002-ம் ஆண்டு.

தமிழக மன்னன் 18-ம் கஜபுஜ கஜேந்திர சோழன் சிந்தாவியாகூலனாய் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தான்.

(ஒரு பொடித் தகவல். அரசியல்வாதிகளின் மீது நம்பிக்கை இழந்து, கி.பி.2100 லேயே மீண்டும் ஆதிகாலத்தைப் போலவே மன்னர் பரம்பரைகள் தோன்றி விட்டன!)

மன்னனின் மதியூக மந்திரியான அமைச்சர் தனித்திருந்த பிரேமய ராயர், அசையாது நின்றபடி மன்னரது முகார விந்தத்தையே கண்காணித்துக் கொண்டிருந்தார். அருகிலேயே தூதுக் குழுத்தலைவர் மருகர்.

மன்னன் சிந்தையைக் கலக்கிக் கொண்டிருந்தது, மகா அரதப் பழசான காவிரி நீர்ப் பிரச்னைதான்! கர்நாடகத்தை ஆண்டுகொண்டிருந்த ஏழாம் ஹளஹல்லி ஜோஹல்லி பட்டேலப்பா, தமிழகத்திற்கு காவிரி நீரைப் பகிர்ந்தளிக்க மறுத்து முரண்டு பண்ணிக் கொண்டிருந்தான்.

கர்நாடகம் சென்று அங்கு ஐந்நூற்று ஓராவது முறையாய்ப் பேச்சு வார்த்தை மேற்கொண்டு மீண்ட மருகரிடம் "கர்நாடக மன்னன் பட்டேலப்பா என்னதான் சொல்கிறான்?" என்றான் சோழன்!

"மழைக்காலங்களில் மிகுதி நீரை தரத்தானே செய்கிறோம்? அதை வைத்துப் பயிர் செய்து கொள்ளுங்கள். காவிரி எங்கள் நாட்டில் பிறந்தவள். எங்களுக்குத்தான் சொந்தம் என்கிறான்."

மன்னன் அவரைக் கையமர்த்தி, "மருகரே, நீவிர் சற்றுச் சினம் காக்க. கர்நாடகத்தானை சண்டையால் வெல்வதைவிட, மண்டையால் வெல்வதையே நான் பெரிதும் விரும்புகிறேன்!" என்றான் நெற்றியைத் தடவியவாறே.

"மன்னா! அவனை மண்டையால் வெல்வதா? எப்படி? எப்படி?"

"கர்நாடகத்திலிருந்து காவிரி தமிழ் மண்ணில் புகும் இடத்தில், ஆற்றின் குறுக்கே ஐந்நூறு அடி உயரத்தில் ஒரு நெடிய அணை கட்டப்பட வேண்டும்! அத்தோடு கர்நாடக எல்லைகள் வடக்கேயும் தெற்கேயும் எவ்வளவு தூரம் போகிறதோ, அதுவரை அணை கட்டப்பட வேண்டும்! அதாவது தமிழக எல்லையைக் காக்கும் ஒரு பெரிய கோட்டை மதிற்சுவராய் அது இறுமாந்து நிற்கும்!"

"அரசர்க்கரசே! இரு நாட்டு எல்லைகளுக்கு நடுவே இப்படி ஒரு அணையைக் கட்டினால் தமிழகத்திற்கு மழைக் காலத்தில் கூட காவிரி நீர் கிடைக்காதே!"

"ஆம்! அதே நேரத்தில் மாரிக் காலத்தில் பொங்குமாங் கடலைப் போல தமிழகத்திற்குள் புக வரும் காவிரி, அணையால் - தன் ஓட்டம் தடைப்பட்டு ஸ்தம்பித்து நிற்கும்! கர்நாடகத்திற்குள்ளேயே கன்னாபின்னவென்று காவிரி பாயும்! கர்நாடகமே வெள்ளக் காடாகி விடும்! நீரின்றி நம் மக்கள் துன்புறுவார்கள். அதிக நீரால் கர்நாடக மக்கள் துன்புறுவார்கள்!"

"காவிரி நீரையே ஒரு போர்க்கருவி போலப் பயன்படுத்தும் உங்கள் திறனைக் கண்டு எனக்கு மெய்சிலிர்க்கிறது. இருப்பினும் அந்த அப்பாவி கர்நாடக மக்கள் அவ்வளவு பேரும் வெள்ளத்தால் பாதிப்படையப் போவதை எண்ணும்போது மனம் பதைக்கத்தான் செய்கிறது!" என்றார் ராயர்.

"என்ன செய்வது? கர்நாடக மன்னனின் விட்டுக் கொடுக்கத் தெரியாத வீண் வறட்டுப் புத்தியால் வரும் வினை

இது!" என்றான் மன்னன்.

வியப்பால் இருவரும் வாயடைத்து நிற்க, 'எதுவும் பேச வேண்டாம்' என்று செய்கை செய்து தன் பின் வரும்படி ஜாடை காட்டினான்.

மூவரும் அரண்மனையின் மேல் தளத்துக்கு வந்தனர்.

"அப்பாடா... இனி பயமின்றிப் பேசலாம்!" என்று நிம்மதி பெருமூச்சு விட்டான் க.பு.க.சோழன்.

இருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. இதைப் புரிந்து கொண்ட மன்னன், "என் ஆசனத்தின் அடிப்புறத்தில், மிகச் சக்தி வாய்ந்த ஒட்டுக் கேட்டும் கருவி சிறு மணி உருவில்



ஒட்ட வைக்கப்பட்டிருக்கிறது! அது ஜப்பான் டொமாக்கோ கம்பெனியின் அதி நவீனக் கண்டுபிடிப்பு!"

"அய்யோ மன்னா... இப்போது நாம் அங்கு பேசிய பேச்சுக்கள், நீங்கள் கூறிய மதியூகத் திட்டம் யாவுமே கர்நாடக மன்னன் காதுகளை உடனடியாய் எட்டியிருக்குமே?"

"ஹா..ஹா... அவனுக்கு நமது இந்தத் திட்டம் தெரிய வேண்டும் என்பதற்காகத் தானே, அதை அங்கு ஆசனத்தில் அமர்ந்தபடி உங்களுக்கு விளக்கினேன்?"

சில மணித்துளிகள் கடந்தன.

க.பு.க. சோழனின் ஹாட் லைன் செல்ஃபோன் ஒலித்தது. எதிர்முனையில் கர்நாடக மன்னன்!

"உங்கள் மக்களின் துயரைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொண்டேன். தயவு செய்து அணை கட்ட வேண்டாம். வெள்ளத்தால் பெரும் பாதிப்பு எங்களுக்கு ஏற்படும்.

இனி காவிரி நீரில் உங்களுக்கு உரிய பங்கை அளித்து விடுகிறோம்!"

- படபடவெனப் பேசினான் கர்நாடக மன்னன்.

க.பு.க.சோழன் இந்தச் சங்கதியை ராயரிடமும், மருகரிடமும் சொல்ல, அங்கே சிரிப்பலை ஓய வெகு நேரமாயிற்று!



பிரமிட் தேசம்-13

தண்ணீர் பாட்டில்

ஒன்பது பேர் கொண்ட எங்கள் குழுவில் நீலு, காதர், பிரியா, நான் - ஆகிய நால்வர் மட்டுமே 'இஸ்தான்புல்' நகரத்திற்கு மூன்று நாட்கள் சென்றுவர உபரிக்கட்டணம் - add on itenarary - கட்டியிருந்ததால், மற்ற ஐவரிடமும் ஹோட்டலிலேயே விடைபெற்றுக் கொண்டு ஏர்போர்ட்டுக்கு வந்தோமா... வந்த இடத்தில் ஒரு கலாட்டா! 'எகிப்து ஏர்' அலுவலகத்தில் எங்களை உட்கார வைத்துவிட்டு, டிக்கெட்டுகளோடு போன டூர் கம்பெனியின் ஆள் சுமார் ஒரு மணி நேரம் வரை அந்தர்தியானமாகிவிட, 'போர்டிங் பாஸ்' வழங்குவதில் ஏதோ தகராறு என்பதை ஊகிக்க முடிந்தது.



• இஸ்தான்புல்... ஒரு தோற்றம்

சில நிமிஷங்களில் வெளியே வந்த 'எகிப்து ஏர்' ஊழியர் ஒருவர், 'மன்னித்துக் கொள்ளுங்கள்... இந்த விமானத்தில் உங்களை அனுப்ப இயலாது' என்று மெதுவாய்க் கூற, எங்களுக்குத் தூக்கிவாரிப்போட்டது. நால்வரிடமும் தேதி உறுதி செய்யப்பட்ட பயணச்சீட்டுக்கள் இருக்கையில், அனுப்ப இயலாது என்றால் என்ன அர்த்தம்? காதரும் நானும் கேள்விகள் கேட்க, அவர் தயக்கத்துடன் விளக்கினார். எண்பது பேர் கொண்ட வெளிநாட்டுக் குழுவினர் கெய்ரோ வழியாக வேறு நாட்டுக்குச் செல்ல, சற்று முன் வந்து இறங்கியுள்ளார்களாம். அவர்களுக்கு விசா இல்லை என்பதால், நாட்டினுள் அனுமதிக்க முடியாதாம். அதனால் இதர பயணிகளின் பயணத்தை ஒரு நாள் தள்ளிவைத்துவிட்டு, அந்தக் குழுவை ஒட்டுமொத்தமாய் அனுப்ப முயற்சிக்கிறார்களாம்! "ப்ளீஸ், புரிந்து கொண்டு ஒத்துழையுங்கள்" என்று அவர் கேட்டதில், எனக்குச் சுத்தமாய் உடன்பாடில்லை. "இஸ்தான்புல்லில் தங்க ஏற்பாடாயிருந்த மூன்று நாட்களில் ஒரு நாளை இழந்துவிட்டால், ஊரைப் பார்ப்பது எப்படி? எண்பது பேர் கொண்ட குழு போல, நாங்களும் வெளிநாட்டிலிருந்து வந்த டூரிஸ்டுகள்தாம். எங்களுக்குச் சரிப்படுமா, படாதா என்ற சிந்தனையின்றி, நீங்கள் திட்டம் போடுவது நியாயமற்ற செயல். எங்களிடம் 'கன்ஃபர்மட்' டிக்கெட்டுகள் உள்ளன. எகானமி வகுப்பில் இடமில்லையென்றால், முதல் வகுப்பில் அனுப்ப வேண்டியது உங்கள் கடமை. எங்களை அலட்சியம் பண்ணாதீர்கள். பத்திரிகைகளின் உதவியோடு, இந்தக் கசப்பு அனுபவத்தின் மேல் வெளிச்சம் போட்டுக் காட்டும் கட்டாயத்திற்கு என்னை உள்ளாக்காதீர்கள்" என்று கண்டிப்புடன் மானேஜரிடம் சொன்னதற்குக் கை மேல் பலன்! அடுத்த ஐந்து நிமிஷங்களில் முதல் வகுப்புக்கு மாற்றப்பட்ட 'போர்டிங் பாஸ்கள்' கைக்கு வர,





* நால்வர் அணி

ஏழரை லட்சம்!

சிவசங்கரி

நால்வரும் மிக வசதியாக கெய்ரோவிலிருந்து இஸ்தான்புல் வரை பயணமானோம்! 'வாயுள்ள பிள்ளை பிழைத்துக் கொள்ளும்' என்ற பழமொழி, எத்தனை உண்மையானது!

கருங்கடலுக்கும் மத்திய தரைக்கடலுக்கும் இடையே கொஞ்சம் ஐரோப்பாவிலும், மிகுதி ஆசியாவிலும் உள்ள பிரதேசத்தை உள்ளடக்கியதாலேயே துருக்கி, மத்திய ஆசியக் கிழக்கு நாடுகளில் தனித்தன்மை வாய்ந்த நாடாகத் திகழ்கிறது. சுமார் 1450 கி.மீ. நீளமும், 480 மி.மீ. அகலமும் கொண்ட துருக்கியின் தலைநகர் அங்காரா; இதன் ஜனத்தொகை, சுமார் ஆறு கோடி; மதம் - இஸ்லாம்; மொழி - துருக்கி. ஐரோப்பியப் பகுதிக்கு மேற்கில் பல்கேரியா, கிழக்கில் கருங்கடல், தெற்கில் மர்மராக்கடல், மேற்கில் கிரீஸ் எல்லைகளாகவும், ஆசியப்பகுதிக்கு வடக்கில், சோவியத் யூனியன், கிழக்கில் ஈரான், தெற்கில் ஈராக், மேற்கில் ஏஜியன் (Aegean) கடல் எல்லைகளாகவும் உள்ளன. பழங்குடித் துருக்கியர்கள் பதினோராம் நூற்றாண்டில் ஆசியப்பகுதிகளை ஆக்ரமிக்கும் முன்னரே, கி.மு. 1850-ல் ஹீட்டிட் (Hittite) பரம்பரையில் துவங்கி, பல வம்சாவளியினரால் அனடோலியா (Anatolia) என்று அறியப்பட்ட அப்பிரதேசம் ஆளப்பட்டுள்ளது. 1529-லிருந்து 1789 வரை

ஆண்ட ஒட்டமான் பரம்பரையின் ஆட்சிக்காலத்தில் அவர்களது சாம்ராஜ்யம் பாரசீகத்திலிருந்து ரோம் வரை பரவியிருந்தது. 1923ம் ஆண்டு அக்டோபர் 29ம் தேதி, துருக்கி குடியரசு நாடாக அறிவிக்கப்பட, முஸ்தஃபா கேமல் அடாடுர்க் (Mustafa Kermal Ataturk) அதன் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியானார்.

இதுவரை நாம் தெரிந்துகொண்டது துருக்கி நாடு பற்றின பொதுவான சில விவரங்கள். இனி, தலைநகராக இல்லாதபோதும், அந்நாட்டின் மிக முக்கியமானதாய்க் கருதப்படும் இஸ்தான்புல் நகரத்தின் வரலாற்றைக் கொஞ்சம் அறிந்துகொள்ளலாமா? ('இஸ்தான்புல் மேல் உனக்கென்ன தனி அக்கறை?' என்றால், அக்கறை ஒன்றுமில்லை... அந்த நகரத்தில் மட்டும்தான் நாங்கள் மூன்று நாட்கள் தங்கி ஊரைச் சுற்றிப் பார்த்தோம்!)

இரண்டு கண்டங்களில் அமைந்துள்ள ஒரே நகரம் என்பதால், இஸ்தான்புல் உலகளவில் தனித்தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இப்பகுதியை கி.மு. 680ல் டோரியர்களும் (Dorians) கி.மு. 227-ல் கலாஷியர்களும் (Galatians) ஆண்ட பின்னர், கி.மு. 146-ல் ரோமாபுரியின் சாம்ராஜ்யத்தோடு இது இணைக்கப்பட்டது. பேரரசர் கான்ஸ்டான்டைன் (Constantine) தன் சாம்ராஜ்யத்திற்கு ரோம் நகரைத் தவிர, இதை இரண்டாவது தலைநகரமாய் அறிவித்து, 'இஸ்தான்புல்' என்ற பெயரை கான்ஸ்டான்டிநோபல் என்று மாற்றினார். முதலாம் தியோடோஸியஸ் (Theodosius I) மன்னரின் காலத்தில், ரோமாபுரிப் பேரரசு இரண்டாகப் பிரிந்து, கிழக்குப் பகுதி பைஸான்டைன் சாம்ராஜ்யம் (Byzantine Empire) என்று அறியப்பட்டது. தொடர்ந்து பல அரசபரம்பரைகளின் ஆட்சி. பதினைந்தாம் நூற்றாண்டில், ஒட்டமான் வம்சாவளியினர் ஆளத் துவங்கியதும், கான்ஸ்டான்டிநோபல் என்ற பெயர் மீண்டும் இஸ்தான்புல் என்று மாற்றப்பட்டது. 'இஸ்தான்புல் என்றால், ஊரின் நடுநாயகமான இடம் என்று அர்த்தம்' என்றார் அங்கு எங்களுக்கு கைடாக இருந்த ஸயத். இஸ்லாமை வளர்த்த இடம் என்பதால், ஆதியில் இதை இஸ்லாம்புல் என்று அழைத்து, நாளடைவில் மருவி இஸ்தான்புல் ஆகிவிட்டது என்று ஒரு கையேட்டுக் குறிப்பு கூறுகிறது. எது உண்மையோ, யாம் அறியோம் பராபரமே!


இஸ்தான்புல் விமானக் கூடத்தில் நாங்கள் வந்து இறங்கினபோது மாலை மணி நான்கு. பெட்டிகளை வைத்துக் கொண்டு வரும் டிராலிகளை எடுக்க, அங்கு அந்த நாட்டுப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. எங்களிடம் அமெரிக்க டாலர்கள் மட்டுமே இருக்க, ஊர் கைடாகக் காத்திருந்த ஸயத்திடம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, "கொஞ்சம் உதவ முடியுமா?" என்று கேட்டதும், அவர் உரத்த குரலில் படபடவெனப் பேசினார். "இது எகிப்து இல்லை,

> "ரயில்வேயில் வேலை பார்க்கும் உன் மாமா வந்துட்டாரா?"
>
> "120 நிமிடம் காலதாமதமாக வந்து கொண்டிருக்கிறாராம்."
>
> - எஸ்.மோகன்

துருக்கி! அங்கெல்லாம் உங்கள் பெட்டிகளை கைடுகள் தூக்கி உதவுவதைப் போன்று இங்கு செய்யமாட்டோம். பணம் போட்டு டிராலியை எடுங்கள். இந்தியர்கள் எதற்கும் இப்படி உதவிகேட்டு நிற்பவர்கள் என்பது தெரியும்!" நீளமாய்ப் பேசிக் கொண்டு போனவரிடம், "இந்தியர்களைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் என்று பேசுகிறீர்கள்? பணம் மாற்றும் இடம் எங்கிருக்கிறது என்று கேட்க வந்தோமே ஒழிய, உங்களைப் பெட்டிகளைத் தூக்கி உதவக் கெஞ்ச அல்ல!" என்று அதட்டாத குறையாய்க்

கூறி நிறுத்திவிட்டு, பணம் மாற்றி, டிராலி களை எடுத்து, பெட்டிகளை வெளியே கொண்டு போகையிலேயே, எகிப்திய கைட் பாப், நட்புடன் செயல்பட்டதைப் போல ஸயத் இருக்கப் போவதில்லை என்பது எங்களுக்கு உறுதியாய்ப் புரிந்து போனது.

எட்டு நாட்களாக எகிப்து பாலை வன வெயிலில் வறுபட்டு வந் தவர்களுக்கு, இஸ்தான்புல் லின் மலைவாசஸ் தலம் போன்ற க்ளைமேட், ஏ.ஸி. அறைக் குள் நுழைந்த இதத்தைத் தந்தது. சீதோஷ்ணத்தில் மட்டுமின்றி, எல்லா வற்றிலுமே துருக்கி மாறுபட்டுத்தான் இருக்கிறது. ஐரோப்பிய, ஆசியக் கலா சாரக் கலப்பின் சாயல் நன்கு வெளிப்பட, பணக்காரத்தனத்தோடு மக்கள், வீடுகள், கார்கள், இத்தியாதிகளுடன் பளிச்சென்று இருப்பதை ஹோட்டலுக்குச் சென்ற வழியிலேயே உணர முடிந்தது. ஐரோப் பிய பகுதியைப் பழைய நகரம் என்றும், ஆசியப் பகுதியைப் புதிய நகரம் என்றும் அழைக்கிறார்கள்.




நாங்கள் தங்கின ஹோட்டல் நாஸர், பழைய நகரத்தின் மையப்பகுதியில் இருந்தது. ஹோட்டலை விட்டுப் படி யிறங்கி நடந்தால், எதிரில், பக்கத்தில், பின் னால் என்று அனைத்துத் தெருக்களிலுமே எண்ணற்ற கடைகள்தாம். அதுவும், அந்த இடம் திரைச்சீலை, படுக்கை விரிப்பு, ரெடிமேட் ஆடைகளின் மொத்த விற் பனைக்குப் பெயர் பெற்றதாம்! லேஸ் துணிகளால் ஆன விதவிதமான திரைச் சீலைகளை, ஒவ்வொரு கடையிலும் சுவர் முழுக்கத் தொங்கவிட்டிருந்தது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. அங்கே பார்த்த தினுசுகளை இதுவரையில் அமெரிக்கா, இங்கிலாந்து கடைகளில்கூட நான் பார்த்ததில்லை. அத்தனை அழகு! லேஸ் வகையறாக்கள், இதர துணிகள் எல் லாம், உள்நாட்டிலேயே தயாராகின்றன வாம். ஐரோப்பிய, ரஷ்ய நாடுகளி லிருந்து, மக்கள் தங்கள் தேவைக்கு இங்குதான் வருகிறார்களாம்!

துருக்கியில் புழக்கத்திலிருக்கும் நாணயத்தை 'லிரா' என்கிறார்கள். ஒரு அமெரிக்க டாலர், 1.5 மில்லியன் - அதாவது 15 லட்சம் லிராக்களுக்குச் சமம். நாங்கள் ஆளுக்கு நூறு டாலர் களை மாற்றி, 1.5 பில்லியன் - அதாவது 15 கோடி லிராக்கள் பெற்று அனை வரும் கோடீஸ்வரர்கள் ஆனோம்.

பயண அட்டவணைப்படி அன்று மாலை எங்களுக்கு ஓய்வு என்பதால், பிரியாவும் நானும் அப்பகுதியிலிருந்த தெருக்களில் காலாற நடந் தோம்; கடைகடையாய் ஏறி, சும்மா 'விண்டோ ஷாப்பிங்' செய்தோம். கடை ஒன்றில் தண்ணீர் பாட்டில் ஏழரை லட்சம், பழங்கள் பத்து லட்சம் என்று ஆங்கிலம் தெரியாத கடைக்காரர் சைகை யில் கேட்ட விலையைக் கொடுத்துவிட்டு, அறைக்குத் திரும்பி, மில்லியனுக்கு எவ் வளவு சைஃபர் என்று யோசித்து கணக் குப் போட முயற்சித்தபோது தலை சுற்றி யது. அதுமட்டுமல்ல "இந்த ஊரில் மெர் ஸிடிஸ் காரை ஒருவர் வாங்கவேண்டு மென்றால், எத்தனை லிராக்களைக் கொடுக்க வேண்டி வரும்?" என்று அப்பாவித்தனமாய் பிரியா கேட்டதும் சேர்ந்துகொள்ள, எனக்குப் பைத்தியம் பிடிக்காத குறைதான்!

(தொடரும்)


ஏழைமை



மாருதி சுசுகி,
ஹீரோ ஹோண்டா,
வோல்டாஸ் ஏஸி,
எல்ஜி ஃப்ளாட்ரான்,
கோத்ரெஜ் ஃபிரிட்ஜ்,
ஐ.எப்.பி.வாஷிங் மெஷின்,
மகாராஜா டிஷ் வாஷர்,
நோக்கியா செல்போன்
இணைந்து வழங்கும்
திரைப்படம்
'ஏழை படும் பாடு!'

மாலதி ஆர். தமன்

அரண்மனை



ஒவ்வொரு முறை
வீடுமாறும்போதும்தான்
தெரிகிறது,
எவ்வளவு பெரிய
அரண்மனையை
தட்டுமுட்டுச் சாமான்களால்
எட்டடிக் குச்சாக
மாற்றியிருந்தேன்
எனும் விஷயம்.

மன்மத வாசனை

வல்லம் தாஜ்பால்



விடை பெற்று நீ சென்றபின்
நான் தனித்திருந்த கடற்கரையில்
நீ சூடிய பூக்கள்
உதிர்ந்திருக்கவில்லை.
உன் கன்னம் ஒற்றிய
கைக்குட்டை கிடக்கவில்லை.
காற்றில் படபடத்த
உன் துப்பட்டா
என் முகம் உரசியதில்லை.

மணலில் உன்
சுவடுகள் இல்லை.
பின் எப்படிக் கமழ்கிறது
என் மனம்?

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது

அமரர் கல்கி நினைவு தினம்



அமரர் கல்கியின் கட்டுரைத் தொகுப்புகள்

மீரா யாத்திரை; தாகூர் தரிசனம்; அதிர்ஷ்ட கவசம்

வெளியீட்டு விழா. (இதுவரை நூல் வடிவம் பெறாதவை)

தலைமையுரை : **தினமலர்** ஆசிரியர்

டாக்டர் ஆர். கிருஷ்ணமூர்த்தி

முதல் பிரதிகளைப் பெறுபவர் : **பாரதி பாஸ்கர்**

●●

காற்றினிலே வரும் கீதம்

(அமரர் கல்கி நூற்றாண்டுக்கென தயாரித்த, அவரது பாடல்களாலான இசை, நடன, இலக்கிய நிகழ்ச்சியின் வீடியோ திரைக் காட்சி)

●●

டிசம்பர் 5, 2004 ஞாயிற்றுக் கிழமை

மாலை 6.00 மணி

சோவியத் கலாசார மையம், கஸ்தூரிரங்கா சாலை,

ஆழ்வார் பேட்டை, சென்னை - 18.

கல்கி அன்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

பங்குச் சந்தை டிப்ஸ்...


இந்த வாரம் நமது தேசத்தின் பொருளாதாரம் பற்றிப் பார்ப்போம்.

"பங்குச் சந்தையைப் பற்றித் தெரிந்து கொண்டு பணக் கட்டுக் களை எண்ணலாம் என்று நினைத் தால், நீங்கள் பொருளாதாரம், முன் னேற்றம் என்றெல்லாம் சுற்றி வரு கிறீர்களே?" என்று சில வாசகர்கள் கேட்கலாம்.

பலாச்சுளைகளைப் பாதுகாப் பாய்ப் போர்த்தியிருக்கும் முரட்டுத் தோல் போன்றதுதான் பொருளா தாரம். இந்தத் தோல் வலுவாக இருந்தால்தான், உள்ளே இருக்கும் பங்கு (பணச்) சுளை ருசிக்கும்.

முதலில் தோலை உரிப்போம் வாருங்கள். தற்போது நடைமுறையில் இருக்கும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம், இந்த வருடம் நமது நாடு 8% பொருளாதார வளர்ச்சி பெற வேண்டும் என்பது.

ஆனால்...



சுளை சுளையாய்ப் பணம்!

சமீபத்தில் ரிசர்வ் வங்கியின் அரை ஆண்டுக் கணக்கைச் சமர்ப்பித்த, அவ் வங்கியின் கவர்னர் வேணுகோபால் ரெட்டி என்ன குறிப்பிட்டிருக்கிறார் தெரியுமா?

"இந்த ஆண்டு இந்தியாவின் பொருளா தார வளர்ச்சி ஆறு சதவிகிதமாகத்தான் இருக்கும்!"

இந்திய தொழில் நிறுவன சம்மேள னமும் இதையே உறுதி செய்கிறது.

ஆக, இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்க(மு)ம் நிறைவேறப் போவதில்லை என்பதே சோகமான உண்மை!

ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் வறுமையை ஒழிப்பதுதான். ஆனால் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறையில் இருக்கும் இன்றைய கால கட்டத்திலும், மொத்தமுள்ள நூற்றி நான்கு கோடி இந்தியர்களில், முப்பது கோடிக்கும் மேற்பட்டவர்கள் ஒரு வேளை உணவுக் கும், ஒதுங்க ஓரடி கூரைக்கும் அல்லாடு கிறார்கள்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் உரு வாக்கப்பட்டதன் நோக்கம் சிறப்பானது தான். ஆனால் அதை நடைமுறைப் படுத்தும் போது பல இடையூறுகள், பிரச் னைகள்...

ஏன்?

இந்த நேரத்தில் சீனாவைப் பற்றிச் சொல்வது பொருத்தமாக இருக்கும். அந்த நாடு கடந்த சில வருடங்களாக ஆண் டொன்றுக்கு பன்னிரண்டு சதவிகிதத்துக் கும் அதிகமாக பொருளாதார வளர்ச்சி யைக் கண்டுவருகிறது. இது உலக நாடு களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

சமீபத்தில் சில இந்தியத் தொழிலதி பர்கள் சீனாவுக்குச் சென்று வந்தார்கள். திரும்பி வந்ததும் அவர்கள் ஒருமித்த குரலில் சொன்னார்கள்:

"சீனாவின் அசாதாரண பொருளாதார வளர்ச்சிக்கு பல காரணங்கள் உண்டு. ஆனால் முக்கியக் காரணம், அந்நாட்டில் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்படும்போது அரசியல் மூக்கை நுழைப்பதில்லை!"

- வி. கோபாலன்

பொங்கல் தரும் வரலாறு!



• வ. விஜயபாஸ்கரன்



• நெல்லை ஜெயந்தா



• யுகபாரதி



• மூவேந்தர்முத்து

சக்தி இலக்கிய இதழ் மூலம் தமிழுக்குச் சேவை செய்த அமரர் சக்தி வை.கோவிந்தன் குடும்பத்துக்கு, நிதி திரட்டித் தருவதற்காக புத்தக வெளியீட்டாளர்கள் ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளாக நிதி திரட்டும் பணி மெல்ல நடந்து வருகிறது. வரும் பொங்கலன்று நிதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த விழாவையொட்டி, கோவை விஜயா பதிப்பகம், வை. கோவிந்தனின் வாழ்க்கை வரலாற்றை ஒரு சிறு பிரசுரமாகக் கொண்டுவரப் போகிறது. எழுதுபவர் 'சரஸ்வதி' விஜய பாஸ்கரன்.

கைகொடுக்கும் முத்து....

பல முன்னோடி எழுத்தாளர்களுடன் நெருங்கிப் பழகியவர் மூவேந்தர் முத்து. சாண்டில்யன் தம்மேல் காட்டிய அன்பை நினைத்து நெகிழ்பவர். அச்சகம் நடத்திவரும் இவர், 'அச்சுக்கலை கற்றுக் கொள்ளுங்கள்' என்ற புத்தகம் உள்பட, சிறுகதை, நாவல், வரலாறு எனப் பற்பல நூல்களின் ஆசிரியர். தங்கள் நூல்களுக்கு நூலக ஆணை பெற்ற ஏராளமான எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும், நூல்களை அந்தந்த நூலகங்களுக்கு அஞ்சலில் அனுப்ப இவர் உதவியைத்தான் நாடுகிறார்கள். சலிப்பே இல்லாமல் தொடர்ந்து எல்லோருக்கும் உதவிக்கரம் நீட்டுகிறார் மூவேந்தர் முத்து.

திருத்தப்படும் தென்றல்!

ஏறக்குறைய எல்லா வார இதழ்ப் போட்டிகளிலும் கவிதைக்கு முதல் பரிசு பெற்றவர், சிறந்த மேடைப் பேச்சாளரான நெல்லை ஜெயந்தா. 'கண்ணதாசன் தண்ணீரில் மூழ்கினாலும், அவரால்தான் தமிழ் கரை சேர்ந்தது' என்பது போன்ற சுவாரஸ்யமான வரிகள் இவரது மேடைப் பேச்சின் பலம். அண்மையில் வெளியான 'திணை மயக்கம்' தொகுதிக்குப் பின், 'தென்றலோடு சில தினங்கள்' என்ற தம் முதல் கவிதைத் தொகுதியைச் சில திருத்தங்களோடு மறுபிரசுரம் செய்யவிருக்கிறார்.


ஒன்றிரண்டு கட்டுரைகள்!

திரைக்கவிஞர் யுகபாரதியின் இரு கட்டுரைத் தொகுதிகள் வெளிவரவிருக்கின்றன. தொகுதிகளின் தலைப்புகள் வித்தியாசமானவை. ஒரு தொகுதிக்குப் பெயர் 'ஒன்று'. இன்னொரு தொகுதிக்குப் பெயர் 'இரண்டு'!

- திருப்பூர் கிருஷ்ணன்

"எங்கே... சொல்லு... கஜானனம்... பூத கணாதி" என்று தாத்தா சொல்லிக் கொடுத்த ஸ்லோகத்தை அப்படியே திருப்பிச் சொல்லும் குழந்தை, அப்புறம் 'யானை உம்மாச்சி'யைப் பார்க்கும் போதெல்லாம் 'கஜானனம்' சொல்ல ஆரம்பித்து விடுகிறது. அந்த ஸ்லோகத்தின் அர்த்தம், குழந்தைக்குத் தெரியாவிட்டால் பாதகமில்லை... ஆனால் நமக்கு? அர்த்தம் தெரிந்து கொண்டு ஒரு ஸ்லோகத்தைச் சொல்லித் துதிப்பது தானே முழுமையான உபாசனை?

கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூபல சார பக்ஷிதம்
உமாசுதம் ஸோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்!



அஸ்வமேத விநாயகர்



யானை முகத்தோனை, பூத கணங்களால் ஸேவிக்கப்படுகிறவரை, விளாம்பழம், நாவல்பழம் போன்ற கனிகளின் சாரத்தை ஏற்றுக் கொள்கிறவரை, உமையின் மகனை, துன்பத்தை அழிப்பதற்குக் காரணமானவரை, நமஸ்கரிக்கிறேன். விக்னேஸ்வரரின் தாமரைத் திருவடிகளைப் பணிகிறேன்.

நிற்கும் லம்போதர விநாயகர்

சிவாலயங்களில் பெரும்பாலும் நுழைவு

எங்க ஊர் பிள்ளையார்



• நின்றநிலை விநாயகர்

வாயில் அருகில், அல்லது வாயிலைப் பார்த்து பலிபீடத்தின் கீழ் அல்லது தனிச் சந்நிதியாகத் தெற்குப் பிராகாரத்தின் வட மேற்கு மூலையில்தான், விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருப்பார். அதுவும் அமர்ந்த நிலையில், மகாகணபதியாக.

ஆனால், இம்மூன்று இடங்களிலும் இல்லாமல், வேறொரு இடத்தில், அதுவும் 'நின்றநிலை'யில் பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருப்பதை, 'திருநின்றவூர்' தவிர வேறு எங்கும் காண முடியாது. (சென்னை அருகில் உள்ள திருநின்றவூர் அல்ல.)

இந்த ஊர், மயிலாடுதுறையிலிருந்து சீர்காழி மார்க்கத்தில் பத்து கி.மீ. தூரத்தில் உள்ளது. பேருந்து நிறுத்தத்திலிருந்து அரை கி.மீ. கிழக்கில்.

அந்த விநாயகரின் சிறப்புகள் பல.. தெற்கு பார்த்து, நிற்கும் நிலையில், சுமார் மூன்றரை அடி உயரத்தில் லம்போதர வடிவில், அதாவது வயிறு பருத்த விநாயகராக - மூலஸ்தான வெளிச்சுவரிலேயே தென்புறமாக உயரமான ஒரு மாடத்தில், தக்ஷிணாமூர்த்திக்கு இடப்புறம் அச்சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

நான்கு கரங்கள். அவற்றில் வழக்கமான பொருள்கள். ஒரு தந்தம் ஒடிக்கப்பட்ட யானை முகம்தான். எனினும் காதுகள் அத்தனை பெரியவை அல்ல.


இத்தகைய நின்ற நிலை கணபதி, நமது தமிழகத்தில் வேறு எந்தச் சிவாலயத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை.

எனினும் ஒரு சில வட இந்திய ஆலயங்களில் இத்தகைய நின்றநிலையில் கணபதி வழிபடப்பட்டு இருக்கலாம் என்பதைக் குவாலியர் அருங்காட்சி அகத்தில் உள்ள, வயிறு பருத்து நிற்கும் விநாயகர் சிலையிலிருந்து அறியலாம். ஆனால், அது பெண் உருவில் ஆனது. அதாவது, நிற்கும் லம்போதரி!

இப்படிப் பிள்ளையார் நிற்பதால் தான் இந்தத் திருநின்றவூருக்கு அப்பெயர் வந்ததோ என்று நாம் ஐயுறலாம். ஆனால் 'அப்படி அல்ல. அது வேறு கதை' என்கின்றனர் ஊரார்.

இந்தத் திருநின்றவூரை 'திருநன்றியூர்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

- ஜானகிமணாளன்




• பிரசண்ட விநாயகர்

நாலாயிரத்தொரு விநாயகர்

ஸ்ரீராமர் தலைமையில் நான்காயிரம் முனிவர்கள் அஸ்வமேத யாகம் செய்தனர். விநாயகரை வழிபட மறந்துவிட்டார்கள். முனிவர்களுக்கு மந்திரம் மறந்து யாகம் தடைப்பட்டது. நாரதர் வாக்குப்படி விநாயகரை வழிபட, விநாயகரே நாலாயிரத்தொன்றாம் முனிவராக வந்து யாகத்தைப் பூர்த்தி செய்தார்.

சீர்காழிக்குக் கிழக்கே எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருநாங்கூர் செல்லும் சாலையில், திருமணிக்கூடம் வைணவத் திருப்பதியில் உள்ள சுயம்பு மூர்த்தி இவர். தெற்கு நோக்கிய சன்னதி. அபிஷேக நீர் சிலையின் உள்ளே சென்றுவிடுவது இதன் சிறப்பு.





- இரா. தேன்மொழி அண்ணாதுரை, வேலூர்

எங்கள் ஊரை அடுத்துள்ள ஆழியாறு ஆற்றங்கரையில் 'பிரசண்ட விநாயகர் கோயில்' உள்ளது. நூற்றாண்டுகள் பழைமையான இந்த விநாயகர் கோயிலில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் ஏழு அடி உயர பிரம்மாண்டமான விநாயகர் சிலை உள்ளது. கோயில் மூலஸ்தானத்தில் உள்ள விநாயகருக்கு நான்கு கற்தூண்கள் கொண்டு கல்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

மூலஸ்தானத்தில் கன்னிமார் சுவாமிகள், கருப்பராயன் நாகதெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. விநாயகர் கோயிலின் எதிரில் ஏழு அடி உயரத்திற்கு நந்தி சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ராஜ அலங்காரத்தில் மூஞ்சூறு வாகனத்தில், அமர்ந்த நிலையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர் பீடத்தின் பின்பக்கம், தலைவிரி கோலத்திலுள்ள அம்மன் உருவம் வடிக்கப்பட்டுள்ளது. முன்பக்கம் விநாயகர் போலும், பின்பக்கம் அம்மன் போலும் காட்சியளிக்கும் பிரசண்ட விநாயகர், சிற்பக் கலையின் சிறப்புக்குச் சான்றாக விளங்குகிறார்.

- பா. இராதாகிருஷ்ணன், சுங்கம்



இலக்கியம், சின
தமது முத்திரைப் ப
யிடம் ஒரு ஜாலி பே

சினிமாவுக்கு வ
படித்து வக்கீலாக ஆ

ஊஹூம்.. பி.எல்.

அல்ப ஆசை?

வழுக்கைத் தலை
களும்னு கை பரபர
கிக்குவேன்.

சமீபத்தில் வாங்கி

ஒண்ணுரெண்டு
யிருக்கேன், ஊரில்.

உங்கள் அதிர்ஷ்ட

சைபர்.

பிடித்த மொழி?

சிங்களம்! (என் து

எங்கே டூர் போக

நிலாவுக்கு! ஏற்பா

ரசித்துச் செய்வது

கோலம் போடுவது

அம்மா, அப்பா..

அப்பா.

ஆவிகள் மீது நம்

அக்கம்பக்கத்துல இ
இதுல ஆவியை எப்

அழகாக இ

ஒருவேளை
பட்டிருப்

இர
மட்டு
வே
கள்

பிட
ஒத்

பிடி
பிட

பே
பற

(
மொ
பே
எங்
ஒரு

பெயரை மாத்தப் போறேன்!



ன்று இரண்டு துறைகளிலும்
வரும் கவிஞர் தேன்மொழி

காவிட்டால் எம்.பி.பி.எஸ்.
ப்பீர்கள்தானே?
) டாக்டராக ஆகியிருப்பேன்!

பார்த்தால் தொட்டுப் பார்க்
கஷ்டப்பட்டு மனசை அடக்

டி?
ல! 2400 சதுர அடி வாங்கி

r?

சிங்களவர், தெரியுமா?)
சை?
ய்கிறீர்களா?

மப்பது!
செல்லம்?

க உண்டா?
றவங்களையே நம்ப முடியலை!
நம்பறது?
றோம் என்ற கர்வம் உண்டா?
மகா பிறந்திருந்தால் கர்வப்
னா என்னவோ?
காட்டு வழியில் ஒரே ஒருவரை
னைக்கு அழைத்துச் செல்ல
ம். யாரை அழைத்துப் போவீர்

னோ! (என் செல்ல நாய்க்குட்டி)
ன வயசுல மாங்கா திருடி சாப்
க்கீங்க இல்லை? உண்மையை
க்கோங்க.
ச்சே! அதெல்லாம் எனக்
து! தேங்காய்தான் திருடிச் சாப்
க்கேன்.
தென்ன தேன்மொழின்னு ஒரு
உங்களை சுத்தி தேனீ எல்லாம்
மா?
பகதாதான் என் பேரு. தேன்
றது நானா வச்சிக்கிட்டது. இந்தப்
இப்ப போர் அடிச்சுப் போச்சு.
ம்மாகிட்ட சொல்லி மறுபடியும்
ரு வைக்கச் சொல்லியிருக்கேன்.

- சோமாஸ்



அக்கறை உள்ள சக்கர வண்டிகள்!

"தம்பி, படிக்கும் வயசில் பள்ளிக் கூடம் போகாம இப்படி மாடு மேய்க்கிறியே..." இப்படி, ஒரு சிறுவனைப் பார்த்து காமராஜர் கேட்க, "சோறு யாரு போடுவா?" என்று சிறுவனின் கேள்வியிலிருந்து அப்போது பிறந்த ஒரு சிறு பொறிதான், சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வர காமராஜரைத் தூண்டியது.



• பார்கவ சுந்தரம்

இந்த ரீதியில் ஒரு சாமானியருக்குப் பிறந்த பொறிதான் ஊனமுற்றோர்களுக்காகவே வாகனம் தயாரிக்கும் 'கல்விடை மோட்டார் கம்பெனி!'

துரைப்பாக்கத்தில் உள்ள இந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாகி, பார்கவ சுந்தரம்.

"பாட்மிண்டன் விளையாட்டு என்றால் எனக்கு மிகவும் இஷ்டம். சில வருடங்களுக்கு முன்னால் இந்த விளையாட்டில் எனக்கு ஏற்பட்ட சிறு விபத்து ஒன்று, என்னைச் சில மாதங்கள் படுக்கையில் தள்ளி விட்டது. இதனால் நட மாட முடியாமல் நான் தவிக்க நேரிட்டது! 'சில மாதங்களுக்கே இப்படிப் படாத பாடுபடுகிறோமே, நிரந்தரமாக ஊனமுற்று இருப்பவர்களின் மனம் என்ன பாடுபடும்' என்று அப்போது என் மனதுக்குள் ஒரு சிறு பொறி ஏற்பட்டது. அந்த எண்ணத்தின் விளைவுதான், ஊனமுற்றவர்களுக்கு உபயோகமாக இருக்கும் பல வகையான சக்கர வண்டிகளை உற்பத்தி செய்ய என்னைத் தூண்டியது!" என்றார்.

இதுவும் ஒரு வகையில் தொழில் தானே?

"ஆனால், லாப நோக்கை மனத்தில் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தொழில் இல்லை. சேவையே இந்நிறுவனத்தின் முதல் குறிக்கோள். லாபம் குவிக்கும் தொழில்கள் எவ்வளவோ இருந்தும் இதனைத் தேர்ந்தெடுப்பதற்குக் காரணம், ஊனமுற்றோர்களுக்கு 'ஊன்றுகோலாக' இருக்கத்தான். எந்த விளம்பரமும் செய்யவில்லை."

இங்கு ஊனமுற்றோர்களுக்கு எந்தெந்த வகையில் சக்கர வண்டிகள் தயாரித்து வழங்குகிறார்கள்?

"ஊனத்தின் தன்மை மற்றும் உடலின் அமைப்பு ஆகியவைகளை மனத்தில் கொண்டு அதற்கேற்ற சக்கரவண்டிகள் தயாரிக்கிறோம். மோட்டாரில் இயங்கும் சக்கர நாற்காலிகள் தயாரிக்கும் ஒரே கம்பெனி, இந்தியாவிலேயே எங்கள் நிறுவனம் மட்டும்தான்" என்றவர், இறுதியாகச் சொன்னது:

"பெயரளவில் மட்டும் 'சேவை' என்ற முத்திரையை நாங்கள் குத்திக் கொள்ளவில்லை. நிறுவனத்தில் பணி புரியும் 33 பேர்களில் 23 பேர் ஊனமுற்றவர்கள் தான்."

- அதிரை ஞாநி

படங்கள் : சுதர்சன்

நிகழ் காலம்



'ஏமாளிகள்' படத்தின் தயாரிப்பாளர் ரங்கநாதனின் வருகையை எதிர்பார்த்தபடி காத்திருந்தார் ராஜலிங்கம் - பிரபல எதிர்கட்சியான மா.கா.தே.காவின் தலைவர். சொல்லியிருந்த நேரத்துக்கு முப்பது நிமிடங்கள் முன்னதாகவே பதற்றத்தோடு வந்து சேர்ந்தார் திரைப்படத் தயாரிப்பாளர் ரங்கநாதன். அவரது முகம் வாட்டத்தோடு இருப்பதைக் கண்ட ராஜலிங்கம் சிரித்துக் கொண்டே சொன்னார்.

"என்ன ரங்கநாதன், திடீர்னு ஃபோன் பண்ணிங்க! இப்ப பதற்றத்தோட வர்றீங்க?"

உடைந்து போன குரலில் பேசினார் ரங்கநாதன்.

"முதலுக்கே மோசம் தலைவரே. என்னோட படத்தில இப்ப உள்ள அரசியல் பத்தி, ஆட்சியைப் பத்தி கேவலப்படுத்துறதா பல காட்சிகள் இருக்குன்னு, படத்துக்குத் தடை போட்டுட்டாங்க தலைவரே. மூணு படத்து நஷ்டத்தை இந்தப் படத்துல சரிக்கட்டலாம்னு நெனைச்சிருந்தேன். எல்லாம் நாசமாப் போச்சி."

"கவலைப்படாதீங்க. உங்க படம் மறுபடியும் ஓடுறதுக்கு நான் மறைமுகமா உதவி செய்றேன். நீங்க தைரியமா கோர்ட்டுக்குப் போங்க!"

திரைப்படத்தின் வழக்கு இழுபறி நிலைமையில் போய்க் கொண்டிருந்தது. ஆட்சி மாறியது. ஆதரவு தருவதாகக் கூறிய ராஜலிங்கம் முதல்வரானார்.

தயாரிப்பாளர் ரங்கநாதனுக்கு நம்பிக்கை பிறந்தது. முதல்வர் ராஜலிங்கத்திடம் படம் மீதான தடையை விலக்கக் கோரினார்.

"மன்னிக்கணும் ரங்கநாதன். இப்ப போய் உங்க படத்தை ரிலீஸ் பண்ணினா, அது என்னோட ஆட்சியை அவமதிக்கிறதா இருக்கும். என்னோட தொண்டர்கள் கலவரம் பண்ணுவாங்க. அதனால நான் ஆட்சியில இருக்கிற வரைக்கும் நீங்க படத்தை ரிலீஸ் பண்ண முடியாது."

வீ. உதயக்குமார்

வந்தியத் தேவன்

படுத்தவுடன் வந்தியத்தேவனுடைய கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தது. மிக விரைவில் நித்திராதேவி அவனை ஆட்கொண்டாள். ஆனாலும் என்ன பயன்? மனம் என்பது ஒன்று இருக்கிறதே, அதை நித்திரா தேவியினால் கூடக் கட்டுக்குள் வைக்க முடிவதில்லை. உடல் அசைவற்றுக் கிடந்தாலும், கண்கள் மூடியிருந்தாலும், மனத்தின் ஆழத்தில் பதிந்து கிடக்கும் எண்ணங்கள் கனவாகப் பரிணமிக்கின்றன. பொருளில்லாத, அறிவுக்குப் பொருத்தமில்லாத, பற்பல நிகழ்ச்சிகளும் அனுபவங்களும், அந்தக் கனவு லோகத்தில் ஏற்படுகின்றன.

எங்கேயோ வெகு தூரத்திலிருந்து ஒரு நரி ஊளையிடும் சத்தம் கேட்டது. ஒரு நரி, பத்து நரியாகி, நூறு நரியாகி, ஏகமாக ஊளையிட்டன! ஊளையிட்டுக் கொண்டே வந்தியத் தேவனை நெருங்கி, நெருங்கி, நெருங்கி வந்தன. காரிருளில் அந்த நரிகளின் கண்கள் சிறிய சிறிய நெருப்புத் தணல்களைப் போல் ஜொலித்துக் கொண்டு அவனை அணுகி வந்தன.

மறுபக்கம் திரும்பி ஓடித் தப்பிக்கலாம் என்று வந்தியத் தேவன் பார்த்தான். அவன் பார்த்த மறுதிசையில் பத்து, நூறு, ஆயிரம் நாய்கள் ஒரே மந்தையாகக் குரைத்து கொண்டு பாய்ந்து ஓடி வந்தன. அந்த வேட்டை நாய்களின் கண்கள் அனல் பொறிகளைப் போல் ஜொலித்தன.

நரிகளுக்கும்



வேட்டை நாய்களுக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டால் தன்னுடைய கதி



என்னவாகும் என்று எண்ணி வந்தியத் தேவன் நடுநடுங்கினான். நல்லவேளை, எதிரே ஒரு கோயில் தெரிந்தது. ஓட்டமாக ஓடித் திறந்திருந்த கோயிலுக்குள் புகுந்து, வாசற் கதவையும் தாளிட்டான். திரும்பிப் பார்த்தால், அது காளிகோயில் என்பது தெரிந்தது. அகோரமாக வாயைத் திறந்து கொண்டிருந்த காளிமாதாவின் சிலைக்குப் பின்னாலிருந்து பூசாரி ஒருவன் வெளிக் கிளம்பி வந்தான். அவன் கையில் ஒரு பயங்கரமான வெட்டரிவாள் இருந்தது. "வந்தாயா? வா!" என்று சொல்லி கொண்டு, பூசாரி அருகில் நெருங்கி, நெருங்கி, நெருங்கி வந்தான்.

"நீ பிறந்த அரச குலத்தின் வரலாறு என்ன? எத்தனை ஆண்டுகளாக உன் குலத்தினர் அரசு புரிகின்றனர்? உண்மையைச் சொல்" என்று பூசாரி கேட்டான்.

"வாணர் குலத்து வல்லவரையர் முந்நூறு ஆண்டுகள் அரசு புரிந்தவர், என் தந்தையின் காலத்தில் வைதும்பராயர்களால் அரசை இழந்தோம்" என்றான் வந்தியத் தேவன்.

"அப்படியானால், நீ தகுந்த பலி அல்ல! ஓடிப்போ!" என்றான் பூசாரி.

திடீரென்று காளிமாதாவின் இடத்தில் கண்ணபெருமான் காட்சி அளித்தான். கண்ணன் சந்நிதியில் இரண்டு பெண்கள், கையில் பூமாலையுடன் ஆண்டாள் பாசுரம் பாடிக் கொண்டு வந்து நடனம் ஆடினார்கள். இதை வல்லவரையன் பார்த்துப் பரவசமடைந்திருக்கையில், அவனுக்குப் பின் புறத்தில், "கண்டோம், கண்டோம், கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம்" என்ற பாடலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பாடியவன் ஆழ்வார்க்கடியான் நம்பிதான். இல்லை, ஆழ்வார்க்கடியானுடைய தலைபாடியது! அந்தத் தலை மட்டும் பலி பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது!

இந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்காமல் வல்லவரையன் திரும்பினான்; தூணில் முட்டிக் கொண்டான். கனவு கலைந்தது. கண்கள் திறந்தன. ஆனால் கனவையும் நனவையும் ஒன்றாய்ப் பிணைத்த ஒரு காட்சியை அவன் காண நேர்ந்தது.

- பொன்னியின் செல்வன
— முதல் பாகம்
வானதி பதிப்பகம்

('மணிரத்னத்தின் அடுத்த படத்தில் ஹீரோவாக நடிக்கப் போகிறார்'என்ற டாக் இன்னும் கோடம்பாக்கத்தை சுற்றிக் கொண்டுதான் இருக்கிறது. 'செய்திகளை' முந்தித்தரும் ஆசையில் நமது கற்பனை தறிகெட்டுப் பறக்கிறது.)

மகிழ்ச்சியில் அவரது வீட்டிற்குக் கதை கேட்கப் போகிறார் டெண்டுல்கர். உச்சி வெயில் என்றாலும் கதவு, ஜன்னல், வென்டிலேட்டர் என்று எல்லாவற்றையும் இழுத்து மூடி, கிட்டத்தட்ட கும்மிருட்டில் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறார் மணி. டெண்டுல்கர் வந்ததும் சிக்கி முக்கிக் கல்லைக் கொண்டு ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்தில் சிறியதாய் ஒரு வெளிச்சத்தை ஏற்படுத்துகிறார். பின்பு இருவரும் அமர்ந்து கலந்துரையாடுகிறார்கள்.

டெண்டுல்கர்: உங்க படத்துல நான் நடிக்கிறதுல எனக்கு ரொம்ப சந்தோஷம். இன்னிக்கு கதை சொல்றேன்னு சொன்னீங்க...?

மணிரத்னம் : சொல்றேன்.

டெண்டுல்கர்: ஆனா நீங்க எங்க இருக்கீங்கன்னே எனக்குத் தெரியலையே. ஏன் ஸார், கதை டிஸ்கஷன் போது கூட லைட்டைப் போட மாட்டீங்களா?

மணி: பிடிக்காது.

டெண்டுல்கர்: *(முணுமுணுப்புடன்)* ச்சே... தொண்டை கிழியக் கத்தினாக்கூட டெலிக்ராம் மாதிரி ஒத்த வார்த்தைல தான் பதில் வருது. சரி, சரி! கதையாவது பிரகாசமா இருக்கான்னு பார்ப்போம்.

மணி: ஓபனிங் ஷாட். நடு நிசி இரண்டு மணி.

டெண்டுல்கர்: சூப்பர் ஸார்.

மணி: கொஞ்சம் வெளிச்சம் கம்மியாயிருக்கு.

டெண்டுல்கர்: *(மனதிற்குள்)* பின்னே, பேய் உலாவர டைம்ல ப்ரைட்டாவா இருக்கும்?

மணி: ஷேர் ஆட்டோ ஒண்ணு தனியா ரோட்டுல நிக்குது.

டெண்டுல்கர்: அதுக்கு ஹெட் லைட் இருக்காதே?

மணி: கரெக்ட். அந்த ஆட்டோ டிரைவர் ஒரு தீக்குச்சியைக் கொளுத்தறான். சிவப்புக் கலர்ல ஒரு சின்ன வெளிச்சம்...

டெண்டுல்கர்: அய்யய்யோ, என்ன ஸார் இது? அபசகுனமா வெளிச்சம் எல்லாம் வருது?

மணி: இல்லப்பா. எல்லாரும் என்னை ரொம்ப கிண்டலடிக்கறாங்க. போன படத்துல அப்படி தான், டீ கொண்டு வந்த பையனை இருட்டுல ஹீரோன்னு நினைச்சு, முக்கால்வாசிப் படம் ஷூட் பண்ணிட்டேன். நல்ல வேளை யாரும் கண்டு பிடிக்கலை. அதான் இந்தப் படத்துல ஹீரோ, ரோட்டுல நடந்து வர்றத தெளிவா காட்டறோம்.

டெண்டுல்கர்: தெளிவாவா? அதாவது தீக்குச்சி வெளிச்சத்துல? பிரமாதம்!

மணி: *(உணர்ச்சிபூர்வமாக)* அப்படியே ஷாட்டை கட் பண்றோம். அடுத்தது கோயம்பேடுல செல் ஃபோன் விக்கிற ஒரு சேல்ஸ் மேனைக் காட்டறோம். அவனுக்கு ஒரு கால் வருது.

டெண்டுல்கர்: ஸார்... செல்ஃபோன்ல கால் வந்துதுன்னா, மங்கலா யெல்லோ கலர்ல ஒரு லைட் எரியுமே. என்ன பண்ணப் போறீங்க?



மணி: டோண்ட் ஒர்ரி. அப்ப காமிரா அவனோட தலைமாட்டுல இருந்து, கிட்டத்தட்ட 32 கிலோ மீட்டர் தூரத்துல இருக்கும். ஸோ, அவனோட இடது காது மட்டும் தான் தெரியும். வலது காதும் செல்ஃபோனும் தெரியாது.

டெண்டுல்கர்: இப்ப தான் ஸார் நிம்மதியாயிருக்கு. *(மனதிற்குள்)* ஐயோ, காலடியில கீழே ஏதோ பிறாண்டற மாதிரி இருக்கு. மனுஷன் வேற லைட்டே போட மாட்டேன்றாரு. ஏதாவது கடிச்சு வைச்சுதுன்னா, அப்புறம் மேட்ச் கூட ஆட முடியாது. இது தான் சாக்குன்னு

பேட்டிங் டேட்டிங்!

கங்குலி வேற கழட்டி விட்டுருவாரு.

மணி: *(சீரியஸாக)* இப்ப ஒரு ட்விஸ்ட். அந்த செல் ஃபோன்ல வந்த நம்பர், முதல் ஷாட்ல வந்த ஆட்டோ டிரைவரோடது.

டெண்டுல்கர்: *(தனது காலைத் தடவிக் கொண்டே)* சொன்னுட்டீங்க ஸார்.



அப்புறம் ஸார், என் கால்ல ஏதோ கடிக்கிற மாதிரி இருக்கு. ஒரு சின்ன ஸீரோ வாட் பல்பைப் போட்டீங்கன்னா, என்ன ஏதுன்னு பார்த்திடலாம்.

மணி: பயப்படாதீங்க. அது டாமி. கொஞ்சம் லைட்டா பிறாண்டிப் பிறாண்டி விளையாடும். அவ்வளவுதான்.

டெண்டுல்கர்: *(அலறலுடன்)* என்ன ஸார் சொல்றீங்க? உங்க கூட டிஸ்கஷன்னா, க்ளவுஸ், ஹெல்மெட், பேட் எல்லாம் போட்டுட்டுதான் வரணும் போலிருக்கே?

மணி: 'அப்புறம் ஒரு முக்கியமான விஷயம். நாளையிலிருந்து நீங்க லைட்டே இல்லாம வாழப் பழகிக்கணும். நைட் மேட்ச் தான் விளையாடணும்.

டெண்டுல்கர்: *(காலை மடக்கி வைத்துக் கொண்டே)* அது பிரச்னையில்லை ஸார். எங்க டீம்ல எல்லாருமே ராத்திரி விளையாடற மாதிரி தான் எப்பவுமே விளையாடுவாங்க. குத்துமதிப்பா தான் போலிங் கூட போடுவாங்க. பால் கூட தானாவே பேட்டுல பட்டு பறந்தா தான் உண்டு.

மணி: குட். அப்புறம், வைரமுத்து தான் சாங்ஸ் எழுதறாரு. பேட்டிங் - டேட்டிங், ஸ்டம்பு - ஜம்ப்பு அப்படின்னு எல்லாமே ரொம்ப நல்லா வந்திருக்கு. மியூசிக் ரஹ்மான். கதை பிடிச்சிருக்கில்ல?

டெண்டுல்கர்: என்ன ஸார் இப்படிக் கேட்டுட்டீங்க. டாமி பிறாண்டறது கூடத் தெரியாம இன்ட்ரஸ்டா கேட்டுட்டிருக்கேனே சார்! அப்புறம் ஸார், படத்துல ஹீரோயின்?

மணி: *(புன் முறுவலுடன்)* மொத்தம் மூணு கதாநாயகிகள். எல்லாம் நேபாள், கச்சத்தீவு, ஈராக்னு டிஃபரெண்ட் ப்ளேஸஸ்ல இருந்து வர்றாங்க! ஓகே?

டெண்டுல்கர்: டபுள் ஓகே. என்னை அப்படியே கைத் தாங்கலா கதவு கிட்ட விட்டுட்டீங்கன்னா, எப்படியாவது தடவித் தடவி வீட்டுக்குப் போயிடுவேன்.

மணி: ஷ்யூர்.

டெண்டுல்கர்: அந்த சிக்கி முக்கிக் கல்ல, கொஞ்சம் யூஸ் பண்ணிக்கலாமா? இல்லேன்னா, அப்புறம் டாமியோட வாலை நான் தெரியாம மிதிச்சு, அது என்னைக் கடிச்சதுன்னா ப்ராப்ளமாயிடும்.

மணி: நோ நோ, அநாவசியமா நான் அதை ஓவர் யூஸ் பண்ண மாட்டேன். நீங்க இப்ப இருந்தே உங்க ப்ராக்டீஸை ஆரம்பிச்சுக்கலாம். குட் பை. நாளைக்கு மிட் நைட் உங்களைக் கூப்பிடறேன். ஃப்ரீயா இருப்பீங்க இல்ல?

டெண்டுல்கர்: மிட் நைட் தானே? டோட்டல் ஃப்ரீ. குட் நைட் ஸார். *(தலை தெறிக்க ஓடுகிறார்!)*

கற்பனை : **மருதன்**

"யம்மா தாயி. கண்ணு வலிக்குது. மருந்து போடற நேரமாச்சு. யாராவது எடுத்துத்தாங்களேன்..."

ஈனஸ்வரத்தில் ஒலித்தது அவரின் குரல்.

வராந்தா ஜன்னலோரமாய்க் கிடந்தது அந்த ஓலைப்பாய். அதில் நைந்து ஒரு தலையணை. அதைவிட நைந்து போன தாய் அவர்.

அந்த மெலிந்த குரல் யாருக்குமே கேட்கவில்லை. உயிரின் கடைசிக்கட்ட ஊசலாட்டத்தில் நடுக்கத்தோடு ஊர்ந்தது அந்தக்குரல்.

சொட்டு மருந்தை எடுத்துப் பொறு மையாக ஊற்றக் கூடிய ஏதாவதொரு கரத்தைத் தேடிக் காற்றில் அலைந்தது அவரின் குரல். அந்தக் குரலும் கண் பார்வை இல்லாத மாதிரி தடுமாறி ஊர்ந்தது. முதுமையின் வாசனை வீசும் குரல். தள்ளாமையின் சுருக்கத்தைச் சுமக்கும் குரல். வேறு காதுகளில் எட்டா மல் - பிரம்மாண்டமாய் வீசிய சத்த அலையில் சறுக்கி விழுந்து விட்ட குரல்.

இரண்டு கண்களும் ஆபரேஷனாகி - குரலை யாருமே லட்சியம் பண்ண வில்லை. சத்தப் பிரளயத்தில் மூழ்கியிருந் தார்கள். காலையில் துவங்கினால், ராத்திரி தூங்கும் வரைக்கும் ஒன்று மாற்றி ஒன்றாய்ப் பின்னியெடுக்கும் குரல்.

அது அழும். கண்ணீர் விட்டுக் கதறும். சவால் விடும். சவடால் பேசும். சத்தம் போடும். சிரிக்கும். சிலிர்க்கும். கோபிக்கும். கொஞ்சும். காதல் கூத்து செய்யும். காமத் தேடல் செய்யும்.

எல்லாநேரமும் அதுபாட்டுக்குச் சத்த உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறது. சிறுதடையோ, வேலை நிறுத்தமோ இல்லாத சத்த இடி. ஊருக்கே மின்தடை வந்தாலொழிய அதன் வாயை மூட, மௌனமாக்க யாருமே அனுமதிப்ப தில்லை.

"யாரும்மா அங்கே? கூப்பிடறது கேக்குதா? கண்ணுவலி உசிரு போவுது. மருந்து போடும்மா... புண்ணியமாப் போவுது..."


அது வீட்டுக்கு வந்த முதல் நாளே!

ஆண்டாள் பிரியதர்ஷினி

ஆடாமல் அசையாமல், நகராமல் படுத்திருக்கும் கட்டாய வேளையில் தான் சத்த ஆக்கிரமிப்பு அதீத மாய்ப்பட்டது அவருக்கு. அதிர்ந்து பேச முடியாத, இரைந்து கூப்பிட முடியாத நோயின் கட்டாயத்தில் கிடந்தார் அவர். டீ.வியின் சத்தத்தைத் தாண்டி இவரின் குரல் கேட்க வில்லை. அதன் விஸ்வ ரூபத்துக்கு முன் காணா மல் கரைந்தே போனது.

"யம்மா, சத்தம் காதைப் பொளக்குது. மண்டையிடி கொல்லுது. கொஞ் சம் கொறையுங் கம்மா..."

மறுபடியும் கெஞ்சிய அவரின்



அவர் புழங்கி வந்த உள்ளங்கை அகல இடம் தான் பறிபோனது.

'இங்க தான் வைக்கணும். இதுதான் சௌகர்யம். எல்லாரும் உக்காந்து பாக்க வசதி...'' அவரின் மேடையில், ஹாலில் நடுநாயகமாகக் கம்பீரமாய் உட்கார்ந்தது. அவரின் இருப்பிடம் மூலைக்கு இடம் மாறியது.

இருட்டு மூலை; காற்றும் வெளிச்சமும் இல்லாமல், மரணக் குகையாய் மிரட்டும் மூலை. அங்கே நாற்காலி மட்டுமே அவருக்கென ஆனது. எப்போதுமே வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருக்கும் அதன் பக்கத்தில் உட்கார்ந்து, நிம்மதியாக நாளிதழ் வாசிக்க முடியாத சூழல். படுக்கையறை சமாச்சாரமெல்லாம் நடு வீட்டுக்குக் கொண்டு வந்து வெளிச்சம் போட, நாக்கைத் தொங்க விட்டுக் கண் கொட்டாமல் பார்த்தார்கள்' வெட்கம் தொலைத்தவர்கள். அதன் முன் உட்காருவார்கள். பார்ப்பார்கள். பிரிவார்கள். பேச்சுவார்த்தை தொலைத்த உறவுக் கூட்டம்.

'அம்மா... கணக்குப் பாடத்துல...'

'ச்ச்ச்... சும்மா இருடி. கிளைமாக்ஸ் பார்க்கணும். தூக்கிப் போடு கணக்கை...'

'ம்மா... பசிக்குது...'

'எப்பப்பாத்தாலும் சோறு தானா? புதுப்பாட்டு பார்க்கணும்..'

சுவரைத் தடவித் தடவி எழுந்தார். ஓரிடத்தில் காரை பெயர்ந்து, ஓரிடத்தில் வழுவழுப்பாய்க் கூடிய அந்தச் சுவர்தான் இப்போதெல்லாம் அவரின் ஒரே தோழி.

என்றைக்கோ செத்துப் போன கமலாவின் அண்மைக்கு ஏங்கித் தவிக்கும்போது, அந்தச் சுவரை இறுக்கி

அவரும் அதுவும்



நெருங்கிக் கன்னத்தை ஒட்டி வைத்துக் கொண்டு, அந்த ஜில்லிப்பைச் சுகித்துத் தூங்கிப் போவார். பேச்சுத் துணைக்கு ஆளில்லாமல் பரிதவிக்கும் போதும், பசி, தூக்கம், தாகம், தனிமைத் துக்கம், தவிப்பு எல்லாவற்றுக்கும் ஒரே வடிகால் அதுதான்.

"சுரேஷ்... வாப்பா... பரீட்சை நல்லா எழுதினியா?"

''ப்ச்... போரடிக்காதே தாத்தா. கிரிக்கெட் மேட்ச் பார்க்கணும்."



''மனசைத் திடப்படுத்திக் குங்க..."

''டிஸ்சார்ஜ் செய்யறேன்னு சொல்லிட்டு, இப்படிச் சொல்றீங்களே டாக்டர்?"

''பயப்படாதீங்க... பில் எவ்வளவுன்னுதான் சொல்லப் போறோம்!"

- பம்மல் நாகராஜன்

கண் வலியோடு மனசும் ரணமானது. அவமதிப்பின் இருப்பிடமாக தான் ஆகிவிட்டது தெரிந்தது.

''யம்மா... சத்தம் கொறைம்மா. மண்டையிடிக்குது..."

"பிலாக்கணம் பாடாதப்பா... ஆய்ஞ்சு ஓய்ஞ்ச கட்டைக்குத்தான் அமைதி வேணும். வயசுப் பசங்க ஜாலியாத்தான் இருப்பாங்க. போற காலத்துல ஒதுங்கி யிருப்பா. பிரச்னை பண்ணாத..."

மருமகளை விட அதிகமாக - மகனே பேசியது எரிச்சலானது, வேதனைப் படுத்தியது அவரை.

"வலி உசிருபோவுது. மருந்து ஊத் தணும்..."

"முதியோர் இல்லத்துல உடனே தள்ளி விடணும். என்னால மாரடிக்க முடியல. வீட்டுக்குள்ள நுழையும் போதே வராந்தா நாறுது."

அந்த வீட்டின் காற்றும் கூட அவளின் கட்டளைப்படிதான் திசை பார்த்து வீசும் என்பதால், நெருப்புக்கங்கென கையெறி குண்டென வீசப்பட்ட தீர்மானமும் செயல்வடிவம் பெறுவதற்கான சாத்தியக் கூறு நிச்சயமானது. முதியோர் இல்லம் தான் போக்கிடமா?

தட்டுத் தடுமாறி நடந்தார். குச்சியைத் தட்டித் தட்டி ஹாலுக்குள் நகர்ந்தார்.

சத்த அலையில் மூழ்கியிருந்தார்கள் எல்லாரும். அவரின் வருகையைக் கவனிக் காத அளவுக்கு - கவன ஈர்ப்பெல்லாம் அதன் மீதே.

வேண்டாத விருந்தாளியாய் - திசை தெரியாமல் நின்றார். அத்தனை பேரை யும் ஆக்கிரமித்த சத்தம் - துப்பாக்கித் தோட்டவாய் அவரைத் துளைத்தது. சல்லடைக் கண்ணாய்க் கிழித்தது.

உயிரற்ற சடலமாய் உணர்ந்தார். உலர்ந்தார்.

"கௌம்புப்பா. முதியோர் இல்லத்துல தள்ளிவுடறேன் உன்னை. ஆட்டோ புடிச்சிட்டு வர்றேன்."

ஜிவ்வென்று ரத்தம் கொதித்து உடம்பு முறுக்கியது. சத்தம் வந்த திசையில் பாய்ந்து ஓங்கி அடித்தார் கையிலிருந்த நடைக் குச்சியால். வளவளவென்று ஓயா மல் பேசிய வாய் நிமிஷமாய் மரணித்தது.

சுழற்றிச் சுழற்றிக் கம்பு வீசி நொறுக் கினார். உள்ளிருந்த சிக்கலான பாகங்கள் சிதைய, உய்யென்ற சத்தத்துடன் ஆய்ந்து ஓய்ந்து அடங்கியது அது. துள்ளத் துடிக்க உயிர்பிரிந்த அந்தப் பெட்டியை, மறு படியும் அடித்துச் சுக்கு நூறாக்கினார். கொன்று போட்டார். குற்றுயிரும் குலையு யிருமாகச் சிதைத்துப் போட்டார்.

அவர் தேடிய அமைதி மெல்ல ஆக்கிரமித்தது அவரையும் வீட்டையும், வீட்டின் காற்றையும்.

கரமிருந்தால் ஜெயிக்கலாம்!



● உஷா சரவணன்

மங்கையர் சாய்ஸ்! தொலைக்காட்சி நேயர்களுக்கு இது சுப்ரபாதம். தினசரி அதிகாலையில் இல்லத்தரசிகள் மட்டுமில்லாமல், ஆண்களும் விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சி. ஐந்தாம் ஆண்டில் அடி எடுத்து வைத்திருக்கும் இந்த நிகழ்ச்சி, ஆயிரம் எபிசோடுகளைத் தாண்டி சமீபத்தில் பிரம்மாண்டமான விழாவும் கண்டது.

மங்கையர் சாய்ஸ் நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் உஷா சரவணனைச் சந்தித்தோம். மடைதிறந்த வெள்ளமாய்ப் பேச ஆரம்பித்தார்.

"முதல்ல சமையல் கலையிலிருந்துதான் நிகழ்ச்சியைத் தொடங்கினோம். காலை நேரத்துல எப்படி இதைப் பொறுமையா நேயர்கள் பார்ப்பாங்கன்னு சின்ன தயக்கம் இருந்தது. ஆனால் நிகழ்ச்சியைப் பார்த்துட்டு பெண்களிடமிருந்தும் ஆண்களிடமிருந்தும், நல்ல ரெஸ்பான்ஸ் வந்துச்சு.

பிறகுதான் துணிச்சலா சமையல்ல இருந்து மற்ற விஷயங்களுக்கும் தாவினோம். நாங்க எடுத்துக்கிட்ட ஒவ்வொரு சப்ஜெக்ட்டும் ஒண்ணோட ஒண்ணு போட்டி போட்டுக்கிட்டு சக்சஸ் ஆச்சு.

எங்கள் நிகழ்ச்சியில் பங்கெடுக்க வந்தவர்களும் சேவை நோக்கத்துடன்தான் வந்தார்கள்.

சிவசங்கரி நடத்திய 'வேல்யூ' நிகழ்ச்சி பெரிய வரவேற்பைப் பெற்றது. நடைமுறை வாழ்க்கை, யதார்த்தத்தை அவர் சொன்ன விதம் அருமை. நடுத்தர, கீழ்த்தட்டு மக்கள், குடிநீருக்காக எப்படியெல்லாம் இரவு முழுக்க கண்விழித்துக் காத்திருந்து இரண்டு குடம் தண்ணீர் பிடிக்கிறார்கள். அதே சமயம் அவர்கள், வீட்டு வேலைக்கென பங்களா வீடுகளுக்கு வரும்போது, தண்ணீர்க் குழாயைத் திறந்துவிட்டு ஏனோதானோவென நடந்து கொள்கிறார்கள்' என்று சிவசங்கரி சொன்னதை, எங்க வீட்டில் வேலை பார்க்கும் ஆயாக்கள் கூட ஆமோதித்தார்கள். இது போல நடந்து கொள்வது தப்புதான் என்பதையும் உணர்ந்தார்கள். இதுதான் இந்த நிகழ்ச்சியின் வெற்றி.

சொத்துரிமை பற்றி வழக்கறிஞர் சுமதி கூறிய ஆலோசனைகளால் பலன் பெற்ற நேயர்கள் பலர். ஊட்டியைச் சேர்ந்த ஒரு நடுத்தரவர்க்கத்துப் பெண்மணி, நேரில் வந்து, "எனக்கு உரிய சொத்தை எனது சகோதரர்களே அபகரித்து விட்டார்கள். இந்த நிகழ்ச்சியைப் பார்த்ததும்தான் நியாயத்துக்காகப் போராட வேண்டும் என்ற உத்வேகம் வந்தது" என்றார். அதோடு வழக்கறிஞர் சுமதி கொடுத்த ஆலோசனையின்படி,

வழக்குத் தொடர்ந்து அதில் வெற்றியும் பெற்றார்.

கணவன் இறந்து சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார் பெங்களூரைச் சேர்ந்த ஒரு பெண்மணி. கணவரின் சொத்துக்களை தனது மாமியார் அபகரித்துக் கொண்டது தவறு என்று கூட அவருக்குத் தெரியவில்லை. நிகழ்ச்சியைப் பார்த்த பிறகு அந்தப் பெண் உத்வேகம் பெற்று தனக்குச் சேர வேண்டிய சொத்துக்களை மாமியாரிடமிருந்து, நீதி மன்றம் மூலம் பெற்றார்.

குழந்தை முதல் பெரியவர்கள் வரை ஒவ்வொருவருக்கும் கவுன்சிலிங் கொடுத்த பிருந்தா ஜெயராமன் நிகழ்ச்சிக்கும், மிக அதிக அளவில் பாராட்டுக் கடிதங்கள் குவிந்தன.

தொடுதல் மூலம் நோயை குணப்படுத்தும் ரேக்கி கலையை டாக்டர் சுந்தரா விளக்கினார். அதிலிருந்து எனக்கு ரேக்கி கலைமீது பெரிய ஈடுபாடே வந்துவிட்டது. சுந்தரா அவர்களிடமிருந்து அந்தக் கலையை நான் கற்றுக் கொண்டு, பலருக்கு சேவை நோக்கில் செய்து, அவர்களது நோயை குணப்படுத்தியும் இருக்கிறேன்.



• சுமதி



• சிவசங்கரி



• ஜோதிதாஸ்வானி

வெற்றிகரமான நிகழ்ச்சியென்றாலும் இடையே சிறு சிறு தடங்கல்களும் வராமல் இல்லை. வடக்கத்திய சமையல் கலையில் பிரபலமான ஜோதிதாஸ்வானி பல ரெசிபிகளைச் செய்து காட்டினார். எங்களுக்கு அந்நிகழ்ச்சி பற்றி வந்த ஒரு கடிதத்தில், 'அவர் ஏன் இடது கையை யூஸ் பண்ணி சமையல் செய்கிறார்?' என கமெண்ட் கூட வந்தது.

அதேபோல ஒருமுறை செட்டிநாடு அசைவ டிஷ் ஒன்று செய்து காட்டினோம். நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு என் தந்தையார், 'இதுபோல நான்வெஜ் டிஷ்களை இனி செய்து காட்டாமல் தவிர்த்துவிடுங்கள். இந்த நிகழ்ச்சி எல்லோரையும் சென்றடைய வேண்டும்' என அறிவுரை கூறினார். சொல்லி வைத்த மாதிரி, அந்த வாரம் எங்களுக்கு ஏகப்பட்ட கண்டனக் கடிதங்கள் நேயர்களிடமிருந்து வந்தன. அதன்பிறகு மாமிசம் மட்டுமில்லாமல், முட்டையைக் கூட எந்த ரெசிபியிலும் சேர்க்கக் கூடாது என ஒட்டுமொத்தமாக முடிவெடுத்தோம். கேக் செய்முறை என்றால்கூட, முட்டையில்லாத வகையில் தான் செய்து காட்டுகிறோம்.

இன்னும் நிறைய புதுப்புது விஷயங்களை, நேயர்களுக்குக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் எங்களுக்கு இருக்கிறது.

மக்களுக்கு நிறைய விழிப்புணர்ச்சி தேவைப்படுகிறது. சின்னச் சின்ன விஷயங்களுக்குக் கூட, பிறரின் உதவியை நாட வேண்டியிருக்கிறது. வருங்காலத்தில் நாங்கள் பேங்கிங், டிரைவிங், பாஸ்போர்ட் எடுப்பது சம்பந்தமான நிகழ்ச்சிகளைத் தொடங்க இருக்கிறோம்.

'கமர்ஷியல்' என்கிற அளவுகோலை வைத்துக் கொண்டு, நேயர்களைக் குறை சொல்பவர்களுக்கு, எங்கள் 'மங்கையர் சாய்ஸ்' ஒரு திருப்புமுனை என்று கூடச் சொல்வேன். எந்த நிகழ்ச்சியென்றாலும் அதில் சேவை நோக்கும், தரமும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் ஜெயிக்கலாம். இதுதான் மங்கையர் சாய்சில் நாங்கள் கற்றுக் கொண்ட பாடம்.

சந்திப்பு, படம் :
யுகந்த்

மங்கையர் மலர்

டிசம்பர்–2004



வேலைக்குப் போகும் பெண்ணே!

32 பக்க இலவச இணைப்பு

- ஃப்ரீசர் ஜீபூம்பா!
- 'சட்'டென்று சமையலை முடிக்க 'பட்'டான யோசனைகள்
- பழகத் தெரியவேணும், பெண்ணே! –அலுவலகத்தில் நெ.1 ஆக விளங்க ஆலோசனைகள்


பட்டுப் புடைவை பரிசுப் போட்டி

பட்டுப் புடைவை பரிசுகளை வழங்குவோர் : காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்



அன்பு வட்டம்! வாசகர் விழா

வலைபாயுதே



வரலாறு சொல்வதைக் கேளு!

டிசம்பர் - 1 : 1913-ல் ஃபோர்டு கம்பெனி இந்நாளில் ஒரு காரை முழுவதுமாக அசெம்பிள் செய்யும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தியது. இரண்டரை நிமிடத்திற்கு ஒரு காரை உருவாக்கும் சக்தி உடைய தாம் அது.

டிசம்பர் - 2: 'நான் தான் எம்பரர்' என பெருமிதப் புன்னகையுடன், இந்நாளில் பாரிஸில் நெப்போலியன் போனபார்ட் முடிசூட்டிக் கொண்டார் 1804ல். அப்போது அவருக்கு வயது 35.



டிசம்பர் - 3 : அமெரிக்க முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ் - முன்னாள் சோவியத் லீடர் கார்பசேவ், தங்கள் நாடுகளுக்கிடையே நடந்து வந்த பனிப்போரை முடித்து விடலாம் என்று உறுதியாக 1989ல் முடிவெடுத்தனர்.

டிசம்பர் - 4 : 1991-ல் அமெரிக்கப் பத்திரிக்கையாளர் டெரி ஆண்டர்சன், லெபனானிலிருந்து விடுவிக்கப்பட்டார். இவர்தான் லெபனான் நடத்திய இஸ்லாமிய புனிதப் போரில் அதிக நாள் சிறைப்பிடிக்கப்பட்டு, (2454 நாட்கள்) இறுதியாக விடுவிக்கப்பட்ட பணயக் கைதி.

டிசம்பர் - 5 : ஜோனாஸ் ஹூங் டெர்ஸ் என்ற டச் நடிகரின் பிறந்த நாள். சிறந்த பாடகர், காமெடியரான இவரின் திரையுலக வாழ்விற்கு இப்போது வயது 84. இந்த நாளில் தனது 101வது வயதை எட்டும் இவர்தான் உலகின் அதிக வயதுடைய நடிகர்.

டிசம்பர் - 6 : டிசம்பர் 6, பாபர் மசூதியைத் தவிர்த்து பல விஷயங்கள் உள்ளன.

1877ல் இந்நாளில் தான் 'வாஷிங்டன் போஸ்ட்' என்ற பத்திரிகை உதயமானது.

1768-ல் இதே நாளில் 'என்சைக்ளோபீடியாபிரிட்டானிகா' முதன் முதலில் பதிப்பிக்கப்பட்டது.

டிசம்பர் - 7 : 1941, காலை மணி 7.55, 360 ஜப்பானிய விமானங்கள், அமெரிக்காவின் படைத்தளத்தைத் தாக்க ஆரம்பித்தன. யெஸ்... இரண்டாம் உலகப் போரில் பெர்ல் ஹார்பர் மீது நடந்த தாக்குதல்தான் அது.

இன்னும் நிறைய நிறைய தெரிஞ்சுக் கணுமா... www. historychannel.com போங்க. அள்ளிக்கோங்க.

- ப்ரௌஸர்


The Washington Post

NAMES & FACES

தென்கச்சி சுவாமிநாதன்



எது தெம்பு?

காட்டின் நடுவே ஓர் ஆசிரமம்.

அங்கே ஒரு குரு.

அவரைத் தேடி ஒரு வாலிபன் வந்தான்.

குருவை வணங்கினான்.

"உங்களிடம் போர்ப் பயிற்சி பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்... என்னை உங்கள் மாணவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்றான்.

"அதுபற்றி அப்புறம் முடிவு செய்யலாம்... அதற்கு முன் எனக்கு ஒரு விவரம் தெரிய வேண்டும்...!" என்றார் குரு.

"என்ன விவரம் சுவாமி!"

"இப்போது உன்னுடைய தெம்பு எவ்வளவு?"

"இப்போது நான் ஒருவனே நூறு எதிரிகளைச் சமாளிப்பேன்!"

"ஓ...! அப்படியானால் உனக்குப் பயிற்சி தேவைதான்! உன்னை என் மாணவனாக ஏற்றுக் கொள்கிறேன்!"

பயிற்சி தொடங்கியது.

ஆறு மாதங்கள் கடந்தன. குரு கேட்டார்.

"தம்பி! இப்போது உன் 'தெம்பு' எந்த அளவில் இருக்கிறது?"

இளைஞன் கொஞ்சம் தயங்கியபடியே, "இப்போது நான் தனியாக ஐம்பது எதிரிகளைச் சமாளிக்க முடியும்!"

குரு மேலும் பல நுட்பங்களைச் சொல்லிக் கொடுத்தார்.

ஓராண்டு முடிந்தது.

"இப்போது உன் 'தெம்பு' எந்த அளவில் இருக்கிறது?" என்று கேட்டார்.

அவன் சொன்னான்:

"அதை என்னால் எப்படிச் சொல்ல முடியும் சுவாமி? எதிரியின் 'தெம்பு' எந்த அளவு என்பது புரிந்தால்தான் இதை நான் சொல்ல முடியும்!"

"நீ தேறி விட்டாய்! இனி உனக்குப் பயிற்சி தேவை இல்லை... போய் வா!" என்று வழியனுப்பி வைத்தார் குரு.

உண்மையான 'தெம்பு' எது என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா?

நம்ம ஆள் ஒருத்தன் ஒரு குருவிடம் வில் வித்தை கற்று வந்தான். கடைசியாக பரீட்சை வைத்து சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

"ஒரே அம்பில் அந்த மாங்காயை வீழ்த்தினால் நீ பாஸ்!" என்றார் குரு.

அவன் இரண்டு அம்புகளை எடுத்தான்.

ஒன்றை விட்டான். குறி தவறாமல் மாங்காயை வீழ்த்தியது.

"நீ பாஸ்!" என்ற குரு "அது சரி... இன்னொரு அம்பையும் ஏன் எடுத்தாய்?" என்றார்.

அவன் சொன்னான்.

"ஒருவேளை குறி தவறியிருந்தால் இது... உங்கள் மீது குறி வைக்க!"

5 தெம்புக்குப் படிங்க!

(பேசலாம்)



ட்ரீம்ஸ்...

கூட்டுப்புழு பருவத்திலிருந்து வண்ணத்துப்பூச்சியாகச் சிறகடிக்கும் கல்லூரிப் பருவம் வசீகரங்கள் நிறைந்தது. அவை வானவில்லைப் போல சில நிமிடங்களில் மறைந்து போய்விடும் மாயைகள் எனப் பாடம் புகட்டும் கதை. ஆனால் திரைக்கதை நெடுகிலும் மிட்டாய் தடவி, கடைசிப் பத்து நிமிடங்கள் மெசேஜ் சொல்கிறார் இயக்குனர்.

நாயகனாக தனுஷ் நடித்திருப்பதால், படம் முடிந்து வெளியே வரும் ரசிகர்கள் "படத்துல ஒண்ணும் இல்லையே மச்சி!" என்று கமெண்ட் உதிர்க்கிறார்கள். இதன் உள்ளர்த்தம் தனுஷ் படமென்றால் மாநகராட்சி குப்பைக்கிடங்கு போல, ஆபாசக் காட்சி கொட்டிக் கிடக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. இந்த ரக இமேஜிலிருந்து மீண்டு வந்துவிட்டாலே தனுஷுக்கு வெற்றி.

ஆசார அனுஷ்டானங்கள் நிறைந்த குடும்பத்தில் கட்டுப்பெட்டியாக வளர்ந்து, கல்லூரியில் அடியெடுத்து வைக்கும் சாருலதா (பாருள்), துடுக்குத்தனம் மிக்க சக மாணவன் சக்தியின் (தனுஷ்) காதலை, முதலில் புறக்கணித்து, பின்னர் ஏற்கிறாள். எதிர்பாராத சூழ்நிலையில், மற்றொரு மாணவி தியாவிடம் தன்னை இழந்து விடுகிறான் காதலன். "நான் மறக்க விரும்பும் கசப்பான விபத்து" என்று சக்தி, சாருவை சமாதானப்படுத்தினாலும், தனது வாழ்க்கையே முடிந்து விட்டதாக நினைத்து, சாரு தற்கொலை செய்து கொள்கிறாள். சினிமாத்தனத்தின் விளம்பில் நின்று சொல்லப்பட்டிருக்கும் இந்தக் காட்சி, ரசிகர்கள் மனத்தில் எந்தவித அதிர்வையும் ஏற்படுத்தவில்லை. இதனால் கதையின் மையப்புள்ளியான இந்தச் சம்பவம், படத்தின் வெற்றிக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுகிறது.



டீன் ஏஜ் கர்ப்பம், பாலியல் வழக்குகளில் சிக்கிவிடும் இந்திய இளைஞர்களின் எண்ணிக்கை கடந்த இருபது ஆண்டுகளில் பதினைந்து சதவிகிதம் அதிகரித்திருப்பதாக எச்சரிக்கும் மத்திய சமூகநலத்துறை, இதைப் பற்றிய கவலையெல்லாம் இன்றி, 'சினிமாவுக்கே உரித்தான சித்திரிப்பு' என்ற போர்வையில், பாலியல் தொழிலாளி வீட்டுக்குப் போய் விட்டு, உரிய கட்டணத்தைக் கொடுக்காமல் ஓடி வந்து விடுவது போல சித்திரிப்பதெல்லாம் வக்கிரமான கற்பனை.

'காதலிக்கும் பெண்ணுக்காக எதையும் செய்வேன்' என்கிற ரீதியில், சாருவின் வீட்டில் எடுபிடி வேலைகள் அனைத்தையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும் சக்தியாக, தனுஷ் ரசிக்க வைக்கிறார். ஆனால் நூறு கிலோ எடை கொண்ட குண்டர்களை தனுஷ் சுழன்று சுழன்று தாக்கும்போது, படத்தில் நகைச்சுவை இல்லாத குறை, நீங்குகிறது.

நாயகி தியாவைக் காட்டிலும் சாருவாக நடித்திருக்கும் அறிமுக நாயகி பாருள் கவனத்தை ஈர்க்கிறார், பரத்வாஜின் இசையைப் போல.

ட்ரீம்ஸ் - பகல் கனவு.

- விஷுவல்தாசன்

● ஆவரேஜ்

உதிர்ந்து விழும் உ.வே.சா. வீடு!



• உ.வே.சா

தம் வாழ்நாள் முழுதும் தமிழ்மொழிக்காகவே தொண்டு செய்து உயிர் நீத்தவர் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத அய்யர். கால வெள்ளத்தில் கரைந்து போக விருந்த பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றை, அச்சுப்பிரதிகளாக்கி தமிழர்க்குத் தந்த இலக்கிய வள்ளல் அவர்.

தஞ்சாவூர் பாபநாசம் அருகே உத்தமதானபுரம் என்னும் கிராமத்தில் இருக்கிறது உ.வே. பிறந்து வளர்ந்த வீடு. சிதிலமடைந்திருந்த இந்த வீட்டை, நினைவுச் சின்னமாக ஆக்குவதாக கடந்த பிப்ரவரி மாதம் அறிவித்தார் முதல்வர் ஜெயலலிதா. அறிவிப்போடு சரி. இப்போது பெய்த மழையில் அந்த வீடு இடிந்து விழுந்து விட்டது. இது நடந்தது கடந்த 8.11.04 அன்று. பக்கத்து வீட்டில் வசிக்கும் நரசிம்மய்யர் "அன்னிக்கு ராத்திரி நல்லமழை. மணி பன்னிரண்டு இருக்கும். ஏதோ இடி விழுந்த மாதிரி சத்தம். பதறிப் போய்ப் பார்த்தா, உ.வே.சா. வீட்டுமாடிப் பகுதி இடிந்து, எங்க வீட்டு மேல விழுந்திருக்கு'' என்கிறார் இன்னமும் பதற்றம் விலகாமல்.



• உ.வே.சா.வீடு

சீவக சிந்தாமணி, மணிமேகலை, பெருங்கதை, பத்துப் பாட்டு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, நம்பி திருவிளையாடல், குமரகுருபரர் பிரபந்தம், மீனாட்சி சுந்தரம் பிள்ளை பிரபந்தம், சிவக் கொழுந்து தேசிகர் பிரபந்தம், சீகாழிக் கோவை, கலைசைக் கோவை ஆகியன உ.வே.சா. அவர்கள் தம் காலத்தில் பதிப்பித்து வெளியிட்ட நூல்கள்.

"சிலம்பைப் பயிலும் போதும், சீவக சிந்தாமணியை ரசிக்கும் போதும், மணிமேகலையில் மனதைப் பதிக்கும் போதும், பதிற்றுப் பத்தில் சேரர் சிறப்பை உணரும் போதும், புறநானூற்று வீரத்தைப் புரிந்து மகிழும் போதும், தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களைப் பற்றிய நினைவுகள் நம் உள்ளத்தில் விரிந்து கொண்டேயிருக்கும். இத்தகைய உணர்வு அலைகள் நம் தமிழர்கள் அனைவரது . நெஞ்சங்களிலும் காலங்காலமாக தொடர்ந்து மிதந்து கொண்டேயிருக்கும். உயர் தனிச் செம்மொழியாய் தமிழைக் கொண்டாடி மகிழும் இந்தத் தருணத்திலாவது, தமிழக அரசு


விரைந்து செயல்பட வேண்டும்" என்றார் பட்டிமன்ற நடுவரும் இலக்கியச் சொற்பொழிவாளருமான முனைவர் சோ. சத்தியசீலன்.

நாம் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டோம். "உத்தமதானபுரம் உ.வே.சா. இல்லத்தினை நினைவுச் சின்னமாக்கும் முன்மொழிவுத் திட்டத்தை தமிழ்ப் பண்பாட்டுத் துறையிடம் தெரிவித்துள்ளோம். அது சம்பந்தமாக துறை சார்ந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பெய்து வரும் மழையினால் அந்த வீட்டின் மேற்பகுதி இடிந்து விழுந்துள்ளது. மாவட்ட நிர்வாகம் இதனையும் அரசின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளது" என்று முடித்துக் கொண்டார் அவர்.


உத்தமதானபுரம் ஊராட்சி மன்றத் தலைவி கோகிலா தமிழ்ச்செல்வன், "தொடர் மழை காரணமாக அந்த வீட்டின் ஒவ்வொரு பகுதியும் இடிந்து விழுந்து கொண்டே இருக்கின்றது. இனியாவது தமிழக அரசு துரித நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்" என்றார் ஆதங்கத்துடன்.

பத்துப்பாட்டில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டில், 'இரண்டு மகளிர் பல மலர்களைப் பறித்துப் பாறை மேல் குவித்தனர்' என்கிற செய்தி ஒன்று வருகிறது. அந்த மலர்களின் பெயர்களைக் குறிஞ்சிப் பாட்டுக் குறிப்பிட்டுக் கூறுகிறது. அதில் மொத்தம் 99 மலர்கள் வருகின்றன. உ.வே.சா. தமக்குக் கிடைத்த ஒரு சுவடியைப் பார்த்த போது, அந்த மலர் வரிசையில் ஒரு சில மலர்களின் பெயர்கள் குறைந்திருப்பதைக் கண்ணுற்றார். வாசித்து விட்டு மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்திருக்கிறார். மலர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. ஓலைச் சுவடியில் குறைந்து போன மலர்கள் என்னவாக இருக்கும் என்று, உ.வே.சா. அவர்களுக்கு மனக் குடைச்சல். தமிழகமெங்கும் ஊர் ஊராய் அலைந்தார். இறுதியில் தருமபுர ஆதீனத்தில் தற்செயலாகக் கிடைத்த ஒரு சுவடியில் அந்த மலர்களின் பெயர்கள் இருப்பதைக் கண்டு அகம் மகிழ்ந்தார். குறைவு பட்டுப் போன மலர்களின் பெயர்களையும் சேர்த்துக் கொண்டு குறிஞ்சிப் பாட்டில் அந்த 99 மலர்களின் பெயர்களும் ஒன்று விடாமல் இடம் பெறச் செய்தார். இந்த அனுபவங்களைக் குறிப்பிட்டு அவர் எழுதிய கட்டுரைக்கு "உதிர்ந்த மலர்கள்" எனப் பெயரிட்டார் உ.வே.சா. அவர் பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்த வீட்டின் செங்கற்களும், வில்லை ஓடுகளும் இன்று உதிர்ந்த மலர்களைப் போலக் கீழே கொட்டிக் கொண்டே இருப்பதுதான் சோகம்!





• தனது வீட்டில் நரசிம்மய்யர்



• சோ. சத்ய சீலன்

கட்டுரை, படங்கள்: **ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

அருள்வாக்கு

ஒருவர், பையனைப் பட்டணத்தில் படிக்க வைத்திருந்தார். அவன் பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டியிருந்தது.



அதுவும் மறுநாளே கட்ட வேண்டியிருந்தது. உடனே அப்பாவுக்கு, 'தந்தி மணியார்டரில் பணம் அனுப்பு' என்று எழுதினான். அப்பாவுக்குத் தந்தியும் மணியார்டரும் தனித் தனியாகத்தான் தெரியும். அப்பா தபாலாபீஸுக்குப் போனார். ரூபாயைக் கொடுத்துவிட்டுத் "தந்தி மணியார்டர் பண்ண வேண்டும்" என்றார். தபாலாபீஸ் குமாஸ்தா ரூபாயில் ஓட்டை பண்ணித் தந்திக் கம்பியில் கட்டி அனுப்புவார் என்று அவர் எண்ணினார். ஆனால் பணம் வாங்கிக் கொண்ட குமாஸ்தா, ரசீது கொடுத்து விட்டு, "சரி உம்முடைய பணம் சேர்ந்து விடும். அனுப்பியாகிவிட்டது" என்றார். குமாஸ்தா பணத்தை வாங்கிப் பெட்டியில் போட்டதையும், ஓட்டை பண்ணிக் கம்பியில் கோக்காமலிருப்பதையும் பார்த்த அப்பாக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை. 'ஏதோ லொட்டு லொட்டென்று சத்தம் பண்ணுகிறான். சேர்ந்து விடும் என்று சொல்லுகிறான். ரூபாய் இங்கேயே இருக்கிறது. லொட்டு லொட்டென்று கட்டையை இங்கே அடித்தால் அங்கே எப்படிப் போய்ச் சேரும்?' என்று அப்பாவுக்குச் சந்தேகம் வந்து விட்டது.

ஆனாலும் பணம் போய்ச் சேர்ந்துவிட்டது.

தர்ப்பணம் முதலியன பண்ணுவதும் அந்த மாதிரியே ஆகும். நாம் எதைக் கொடுத்தாலும் அதற்கான சட்டப்படி கொடுக்க வேண்டும். சாஸ்திரம் என்கிற சட்டம் விதித்தபடி நாம் கொடுப்பதைத் தெரிந்து கொள்ளுகிற பிதுர் தேவதைகள், அது யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குச் சேர்த்து விடுவார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

நடக்குமென்பார்; நடக்கும்!

டிசம்பர் 1 முதல் 7 வரை

அக்னிசர்மா பக்கம்

மேஷம் : உற்சாகத்தையும், சந்தோஷத்தையும் தரக்கூடிய எதிர்பாராத திருப்பங்கள் காத்திருக்கு. புத்திசாலித் தனமா பயன்படுத்துங்க. வெளிநாட்டிலேருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேர்ந்துடும். புதியவர்கள் கிட்ட கொஞ்சம் உஷாரா பழகுங்க. உத்தியோகத்தில பதவி உயர்வு, ஊதிய உயர்வுன்னு காத்திருக்கு. தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்குப் பொருளாதார நெருக்கடி விலகும். குடும்பத்தில சுபமங்கள வேளை கூடி வந்து மகிழ்ச்சி தரும். பெண்கள், ஆரோக்கியத்தில் கவனமா இருக்கணும்.

ரிஷபம்: உங்க பூர்வபுண்ணியஸ்தானத்தை கிரகங்கள் பலமாக்கிடறதால எதிர்ப்புகள் மறைஞ்சு, எல்லாக் காரியங்களிலேயும் வெற்றி கிட்டும். சில புது அறிமுகங்கள் கிடைக்கும். பண நடமாட்டம் தாராளமா இருக்கும். பணியிடத்தில ஒரு அதிர்ஷ்டமான திருப்பம் காத்திருக்கு. புது முயற்சிகள் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் இருக்கிறவங்களுக்கு எதிர்பாராத உதவி வந்து சேரும். குடும்பத்தில ஒற்றுமை கூடும். கல்யாணத்துக்குத் தயாரா இருக்கிறவங்க சுப வேலைகளைத் தொடங்கிடலாம். பெண்களுக்குப் பொன், பொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.

மிதுனம்: கல்வி, கேள்வி, ஆராய்ச்சிகள்ல இருக்கிறவங்களுக்கு சாதிக்கிற நேரம் வந்தாச்சு. தெய்வீக ஈடுபாடும், முக்கியஸ்தர்கள் ஆதரவும் கிட்டும். உத்தியோகத்தில இருக்கிறவங்களுக்கு, அனுகூலமான நேரம். சுய தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும்! குடும்பத்தில இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் விலகி, சுபகாரிய முயற்சிகள் ஈடேறும். கொஞ்சம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிறது நல்லது. பெண்களுக்கு எண்ணம் போல எல்லாம் நடக்கும்.

கடகம்: இழுக்கிறதில ரப்பராவும், நகர்றதில கூட்ஸ் வண்டியாவும் இருந்து வந்த உங்க பிரச்னைகள், தடங்கல், எதிர்ப்பு எல்லாத்தையும் தாண்டி, வேகம் பிடிக்கிற நேரம் இது. பொருளாதாரம் கொஞ்சம் ஏற்ற இறக்கமாகத் தான் இருக்கும். வேலையில் இருக்கிற



மீன ராசிக்காரரான நடிகர் ஸ்ரீகாந்துக்கு இந்த வாரம் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகுமாம்.

இது நல்ல வாரம்

கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	டிசம். 1 கார்த்.16	புனர்பூசம்	சதுர்த்தி	முகூர்த்த நாள்
வியாழன்	டிசம். 2 கார்த்.17	பூசம்	பஞ்சமி	-
வெள்ளி	டிசம். 3 கார்த்.18	ஆயில்யம்	சஷ்டி	-
சனி	டிசம். 4 கார்த்.19	மகம்	ஸப்தமி	-
ஞாயிறு	டிசம். 5 கார்த்.20	பூரம்	அஷ்டமி	திருவையாறு கால சம்ஹாரமூர்த்தி உற்சவம் / காலபைரவாஷ்டமி
திங்கள்	டிசம். 6 கார்த்.21	உத்திரம்	நவமி	-
செவ்வாய்	டிசம். 7 கார்த்.22	ஹஸ்தம்	தசமி	-


வங்க, நிதானத்தோட இருப்பது நல்லது. புது முயற்சியேதும் இருந்தா, தள்ளிப் போடுங்க, யந்திரம், இண்டஸ்ட்ரீஸ், கமிஷன் வியாபாரங்கள் வளம்பெறும். குடும்பத்தில அமைதியும், ஒற்றுமையும் நிலவும். பெண்களுக்கு அனுகூலமான வாரம்.

சிம்மம்: பெரியவங்க சொன்னா பெருமாளே சொன்ன மாதிரிங்க. எதுக்கும் முக்கியமான விஷயங்களில் பெரியவங்க அறிவுரையைக் கேட்டு நடங்க. ஆபீஸில புதிய பொறுப்புகள் சேரும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்குச் சாதகமான நேரம். ஆனாலும் அவசரப்பட்டு அகலக்கால் வெச்சிடாதீங்க. குடும்பத்தில மகிழ்ச்சி நிலவும். சுபகாரிய முயற்சிகள் ஈடேறும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

கன்னி: உங்க துணிவும், தன்னம்பிக்கையும் கூடி எல்லாக் காரியங்களையும் வெற்றிகரமா நிறைவேற்றுகிற நேரம் இது. ஆபீஸில் எதிர்ப்புகள் மறையும். உங்க திறமை கூடி பாராட்டுகளைப் பெற்றுத் தரும். உலோகப் பொருள், தோல் பொருள், ஏற்றுமதி இறக்குமதி தொழில்கள்ல இருக்கிறவங்களுக்கு ஆதாயம் கூடுற நேரம். குடும்பத்தில சொந்தபந்தங்களெல்லாம் கூடி சந்தோஷமா, ஒற்றுமையா இருப்பாங்க. சுபகாரியங்கள் கூடி வரும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

துலாம் : உங்க தெய்வபலமும் தெய்வீக ஈடுபாடும் கூடி காரியங்களில் வெற்றி தேடித்தர்ற நேரம். புது அறிமுகங்கள் சில கிடைக்கலாம். விஐபிக்களோட ஆதரவும் உங்க பலத்தைக் கூட்டும். தொழில் வியாபாரம்னு இருக்கிறவங்க கொஞ்சம் பொருளாதாரத்திலயும், கொடுக்கல் வாங்கல்லயும் கவனமா இருக்கறது நல்லது. புதுமுயற்சிகளைக் கொஞ்சம் தள்ளிப் போடுங்க. குடும்பத்தில உடன்பிறந்தவர்களால சிறு

பரிகாரம் : இழந்தவற்றை மீண்டும் பெறுவது இரண்டு மடங்கு ஆனந்தம். அப்படி இழந்ததைப் பெற, சந்தர்ப்பவசத்தாலோ, அநீதியாக சட்டத்தாலோ, சிறைப்பட்டவர் மீண்டு வர, எத்தனை செல்வமிருந்தாலும் ஓடியாடிக் களிக்கக் குழந்தைகள் இல்லாத வெறுமையைப் போக்க, அருள் வழங்கக் காத்திருக்கிறார் மகர நெடுங்குழைக் காதப் பெருமாள். குழந்தைகள் விளையாட்டைக் காண கருடன், பலிபீடம், துவஜஸ்தம்பம் அனைத்தையும் நகர்த்தி, கண்டு ரசிப்பவர் இந்த 'பிள்ளை விளையாட்டொலி அறா'த்திருப்பேரைப் பெருமாள். ஆழ்வார் திருநகரியிலிருந்து 5 கி.மீ. தூரத்திலிருக்கிறது இந்தத் தென்திருப்பேரை.



- வி.

பிரச்னைகள் ஏற்பட்டு மறையும். பெண்களுக்குச் சாதகமான வாரம்.

விருச்சிகம் : குரு பகவானோட சஞ்சாரம் உங்களுக்குச் சாதகமான பலன்களைக் கூட்டிக்கிட்டே இருக்கிறதால, ஒண்ணு ரெண்டு பாதகமான விஷயங்களைப் பத்திக் கவலைப்படாதீங்க. உத்தியோகத்திலயும் சில எதிர்ப்புகள் பலவீனமா குரல் கொடுத்து ஓய்ஞ்சுடும். சுயதொழில், வியாபாரம்னு பாக்கிறவங்களுக்கு, பழைய கடன் தொல்லை குறைஞ்சு முன்னேற்றம் கிடைக்கும். குடும்பத்தில பிரிஞ்சவங்க ஒண்ணு சேர்ந்து மகிழ்ச்சியை அதிகமாக்குவாங்க. திருமண வாய்ப்புகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறவங்களுக்கு யோக காலம் கூடி வந்துடும். பெண்களுக்கு ஆரோக்கிய மேன்மை கிட்டும்.

தனுசு : உங்க ராசிக்காரர் குரு பகவான் பலமா இருந்தாலும், வெளியிலிருந்து ஆதரவு தர்றோம்னு கேதுவும் செவ்வாயும் தொல்லை பண்ணறாங்க. அதனால சிறு பிரச்னைகள், காரியங்கள்ல தாமதம்னு ஆகலாம். கவலைப் படாதீங்க. சரியாயிடும். கொஞ்சம் செலவுகள் கூடும், உஷாரா இருங்க. தொழில், வியாபாரங்கள்ல பொருளாதார ஏற்ற இறக்கம் இருக்கும். பொறுமையும், தீர்க்கமான ஆலோசனையும் அவசியம். புதிய முயற்சிகள் இப்ப வேண்டாம். குடும்பத்தில மகிழ்ச்சி கூடும். பெண்களுக்கு உடன்பிறந்தவர்களால் அனுகூலம் கிட்டும்.

மகரம் : உங்க தெய்வபலத்தைக் கூட்டிக்கிட்டே இருந்தாலே போதுங்க, எல்லாக் காரியமும் வெற்றிதான். எதிர்ப்புகள் மறைந்து, விஐபிக்கள் ஆதரவு கூடும். உத்தியோகத்திலயும் ஓர் அதிர்ஷ்டமான திருப்பம் காத்திருக்கு. புதிய முயற்சிகள் வெற்றி பெறும். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு, பொருளாதார அபிவிருத்தி உண்டாகும். குடும்பத்தில கருத்து வேறுபாடுகள் மறையும். குடும்பத்துக்கு சுபவரவு ஒன்றுகூடும். பெண்களுக்கு ஏற்றமான வாரம்.

கும்பம் : உங்க துணிவும் தன்னம்பிக்கையும் கூடி, வெற்றியையும் பாராட்டையும் கொண்டு வர்ற நேரம் இது. திடமா முன்னேறுவீங்க. வேலை பார்க்கிற இடத்துல, கொஞ்சம் நிதானமா, சுமுகமாப் பழகி வர்றது நல்லது. பொருளாதாரம் கொஞ்சம் ஸ்பீட் பிரேக்கர்களைத் தாண்டித் தாண்டிதான் போகும், உஷாரா இருங்க. தோல் பொருள், எண்ணெய் வகை, கலைத்துறை, ஃபர்னிச்சர் தொழில்களில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குடும்பச் செலவுகள் கூடும், கவனமா இருங்க. பெண்களுக்கு இதுவரை இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும்.

மீனம் : எதிர்பாராத சந்திப்பு, புது அறிமுகம், முக்கியமான விஷயங்களில் அனுகூலம்னு உற்சாக வாரமிது. அரசாங்க விஷயங்களில் நீங்க கேட்டது கேட்டபடி கிடைக்கும். உத்தியோகத்திலயும் உற்சாகமும், உங்கள் திறமைக்குப் பாராட்டும் கூடும். ரியல் எஸ்டேட், கெமிக்கல்ஸ், மருந்துவம், தொழில்கள் முன்னேற்றம் காணும். ஏற்றுமதி இறக்குமதி தொழில் வெகு அனுகூலமான பலன் காணும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குரு பலன் நிறைந்திருப்பதால் சுபமங்களக் காரியங்கள் கூடி வரும். பெண்களுக்கு நிம்மதியான வாரம்.

மைக்ரோவேவ் மாமி

“மைக்ரோ வேவ் மாமின்னு பேர் வச்சுண்டா, நார்த் இண்டியா, இல்லே ஃபாரின் ஐட்டமாத்தான் கொடுக்கணுமா?”னு சில பேர் கேக்கறாளாம். என் ஆத்துக்கார் சொன்னார்.

இந்த மைக்ரோவேவ் மாமி ஆல்ரவுண்டராக்கும்! அதான் இந்த வாரம் பிடி கொழுக்கட்டை!

ஆழாக்கு பச்சரிசியை ஒரு மணி நேரம் நன்னா ஊற வச்சு, களைஞ்சு, ஜலத்தை வடிச்சுட்டு துணியில போட்டுக் காய வையுங்கோ. டீ.வியில ஒரு சினிமா பாக்கற நேரம் காயலாம். அதான் விளம்பரத்தோட ஆறு மணி நேரம் காட்டறாளே!

ஒரு துண்டு இஞ்சி, அதோட பச்ச மிளகாய் ரெண்டையும் மிக்ஸியில அரைச்சு வச்சுக்கணும். ரொம்ப மையா அரைச்சுடாதேள். கரகரப்பா இருக்கட்டும். அப்புறம் ஒரு கப் தேங்காயைத் துருவி வச்சிண்டு, அடுப்பிலே வாணலியை வச்சு ரெண்டு டீஸ்பூன் எண்ணெய் விட்டு சித்த நேரம் பொறுமையா இருங்கோ. விளம்பர இடைவேளை டைம்னு வச்சுக்கோங்களேன்.

அப்புறம் ரெண்டு டீஸ்பூன் கடலைப் பருப்பை போடுங்கோ. உங்க பாராட்டுக் கடிதாசியையெல்லாம் வாசிக்கும் போது, மாமி முகம் இலேசா செவக்கும் பாருங்கோ, அந்த பதத்துக்குப் பருப்பு வந்ததும், ஒரு சின்ன டீஸ்பூன் அளவு கடுகைப் போடுங்கோ! கடுகு வெடிச்சப்பறம்

பழைசயும் தெரிஞ்சுக்குங்க!

• படம் : மௌளி



ஒரு சிட்டிகை பெருங்காயத்தூள், கறிவேப்பிலை, தேங்காய்த் துருவல் எல்லாத்தையும் போட்டு, ஒரு நிமிஷம் 'சிம்'மில வெச்சி வதக்கணும்.

அப்புறம் ரெண்டு ஆழாக்கு ஜலத்தைவிட்டு கொதிக்கவிடுங்க. தேவையான உப்பைப் போட மறந்திடாதேள்.

தண்ணி நன்னா கொதிச்சப்பறம், உடச்சு வச்சிருக்கிற ரவையைப் போட்டுக் கிளறுங்கோ. பாத்திரத்தில ஒட்டாம, பதமா கௌறணும். பிறகு அடுப்பை அணைச்சுட்டு வாணலியை மூடி வையுங்கோ. ஒரு டைட்டில் சாங் பாக்கறநேரம் அப்படியே இருக்கட்டும்.



பத்து நிமிஷம் கழிச்சு, சின்னச் சின்ன உருண்டையா நீளவாட்டில் உருட்டி இட்லித் தட்டுல எண்ணெய் தடவி, இட்லி வேக வைக்கறது மாதிரி வேக வையுங்கோ. மறுபடி ஒரு டைட்டில் சாங் டைம்!

அப்புறம் எடுத்து ஆறவச்சு சாப்பிடுங்கோ. இந்தக் கொழுக்கட்டை ஆறின பிறகும் நன்னா இருக்கும். கொழந்தைகள்ளேலேர்ந்து பெரியவா வரை எல்லோருக்கும் பிடிக்கும்.

பிடிகொழுக்கட்டை சம்பந்தமாக இன்னும் சில டிப்ஸ் தர்றேன் குறிச்சுக்கோங்கோ:


தாளிப்பதற்கு தேங்காய் எண்ணெய் உபயோகித்தால், தனி ருசியுடன் இருக்கும். அப்புறம், இஞ்சி பச்சை மிளகாய்க்கு பதில், தேக்கரண்டி துவரம் பருப்பு மிளகு சீரகம் பொரித்துப் போடலாம். அதுமட்டுமில்லே.. வற்றல் மிளகாய் தாளித்தும் செய்யலாம்.

கொழுக்கட்டையைப் பிடிக்கறபோது ரகசியமா ஒரு சின்ன வெல்லக் கட்டியை நடுவிலே ஒளிச்சு வைச்சுப் பாருங்கோ... சில பேருக்கு அந்த அசட்டுத் தித்திப்பே ஒசத்தித் தித்திப்பா தெரியும்...

மைக்ரோவேவ் மாமி, மைக்ரோ வேவ் சம்பந்தமா டிப்ஸ் தராம இருக்கலாமா!

எலுமிச்சம் பழத்திலிருந்து அதிக ஜூஸ் எடுக்கணும்னா, மைக்ரோ வேவ்ல முப்பது விநாடிகள் 'ஹை'யில் வைத்திருந்து விட்டு, அப்புறம் ஜூஸ் பிழியவும்.

ஒரு ஃபுட்பால் புல்லாங்குழல் ஆனது!



பல சினிமா பாடல்களில் இடையிடையே ஒரு புல்லாங்குழல் இசை வந்து நம்மை லயிக்க வைத்துவிட்டுச் செல்லும். 'ஆசை' படத்தில் 'புல்வெளி', 'திலோத்தமா' பாடல்கள், 'மறுமலர்ச்சி' படத்தில் 'நன்றி சொல்ல உனக்கு'... இந்தப் புல்லாங்குழல் நாதத்துக்குச் சொந்தக்காரர் சக்திதாசன்.



"பதினெட்டு வருஷமா தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்னு முன்னூறு படங்களுக்கு மேல வாசிச்சிருக்கேன்" என்கிற இவர், தான் வாசித்த இசையமைப்பாளர்கள்... தேவா, ஹாரிஸ் ஜெயராஜ், இமான் என்று பெரிய லிஸ்டே போடுகிறார்.

"உங்களது குரு யார்?" என்று கேட்டால், "நான் புல்லாங்குழல் வாசிக்க ஆரம்பிச்சது நிஜமாகவே ஒரு ஆக்ஸிடெண்ட்" என்று சிரிக்கும் இவர், "பள்ளி நாட்களில் நான் ஒரு ஃபுட்பால் ப்ளேயர். ஒருமுறை விளையாடும் போது கால் உடைஞ்சு ரொம்ப நாள் படுத்த படுக்கையா இருக்க வேண்டியதாப் போச்சு! அப்போ ஒரு நண்பர் வந்து 'சும்மா இருக்கிறதுக்கு இதையாவது ஊதிக்கிட்டிரு'ன்னு ஒரு புல்லாங்குழலைக் கொடுத்தார்.

ஊதினா காத்துதான் வந்துச்சு. பிறகு பழகப்பழக இசை வசியமானது. கலைமகள் என்னை ஆட்கொண்டாள்" என்று சிலிர்க்கிறார் சக்திதாசன்.

சமீபகாலமாய் இவர் சாக்ஸஃபோனும் வாசிக்கிறார். "ஒரு முறை தேவா சாரோட கனடா போயிருந்தப்போ சாக்ஸஃபோன் வாங்கினேன். ஒரே நாளில் சாக்ஸஃபோன் வாசிக்கப் பழகிட்டேன். மறுநாளே ஒரு கன்னடப் படத்துக்கு சாக்ஸஃபோன் வாசிச்சேன்" என்று ஆச்சர்யப்படுத்தும் இவர், 'செல்லமே' படத்துல 'ஆரிய உதடுகள்' பாட்டுக்கு 'சாட்'னு ஒரு புதுக் கருவியை ஒரே மணி நேரத்துல கத்துக்கிட்டு வாசிச்சேன்" என்கிறார் அசால்ட்டாக.

"பாடல்களுக்கு இசை அமைக்கும் எண்ணமில்லையா?" என்றவுடன், அருகிலிருந்த டேப் ரிக்கார்டரை ஆன் செய்கிறார். 'துன்பத்திலிருந்து தான் இன்பம் தொடங்கும்!' வாணி ஜெயராமின் குரல் நம் காதுகளைத் தழுவிச் செல்கிறது.

"மகிழம்பூ மாலையிலே'ன்னு மெல்லிசைப் பாடல்கள் அடங்கிய ஆல்பத்துக்கு சமீபத்தில்தான் இசை அமைத்து வெளியிட்டேன்" என்றவர்.

"என் இசையில் வரிகள் மிதிபடாது. தமிழுக்குத்தான் முதல் இடம்" என்கிறார் உறுதியாக.

- முகில்

ஈவ் டீசிங்

ஆர். கோபாலன்



“ஹலோ போலீஸ் ஸ்டேஷனா?”

“ஆமாம், என்ன விஷயம்?”

- அலுப்போடு கேட்டார் எஸ்.ஐ. மணி கண்டன்.

“அம்மா மண்டபம் பஸ் ஸ்டாப்புல கல்லூரி மாணவிகளை சில பசங்க ஈவ் டீசிங் செய்யறாங்க சார்! தட்டிக்கேட்டா அசிங்கமா பேசறாங்க. உடனே வாங்க சார்!”

“சரி உடனே வர்றோம்!” என்று தொலை பேசியை 'டொக்'கென்று வைத் தார் மணிகண்டன்.

'ஏற்கனவே ஆயிரத்தெட்டு வேலை கள், அமைச்சர் விசிட்டை கவனிக்கறதா, ஃபைலைப் பார்க்கறதா, இதுக்கு அலையறதா?'

எரிச்சலாக வந்தது மணிகண்டனுக்கு. கொஞ்ச நேரத்தில் மறுபடி ஃபோன்.

“சார் அம்மா மண்டபம் ஸ்டாப்புல....”

“சரிய்யா வர்றோம்.”

ஃபைல்களில் மூழ்கிப் போன எஸ்.ஐ. மணிகண்டன், மதியம் வீட்டுக்கு வந்தார்.

கல்லூரி படிக்கும் அவரது மகள் சுவரில் சாய்ந்து உட்கார்ந்து அழுது கொண்டிருக்க, மணிகண்டனின் மனைவி பதறியபடி சொன்னாள்: “போலீஸ் வீட்டுப் பொண்ணையே ஈவ் டீசிங் பண்ணியிருக்காங்க.”

“எங்கே, யார்?” - ஆவேசத்துடன் கேட் டார் மணிகண்டன்.

“அம்மா மண்டபம் பஸ் ஸ்டாப்ல பஸ்ஸுக்காக..”

- அதற்கு மேல் மனைவி சொன்னது எஸ்.ஐ. மணிகண்டன் காதில் விழ வில்லை.

வலம்புரி முத்து

சத்தியப்பிரியன்

காலையில் இருந்தே கதிரேசன் உற்சாகமாக இருந்தான். தாமரை தேநீர் தயாரிக்கும்பொழுது, சமையலறை வழியில் உட்கார்ந்து நிறைய விஷயங்கள் பேசினான். பழைய விஷயங்கள், புது விஷயங்கள் என... ஓவர் - ஹெட் டாங்க் மீது ஏறி, தாமரை அந்தச் சிறுவனைக் காப்பாற்றியது, பழனியப்பன் சாரின் குறுந்தொகைப் பாடல்கள், பழனி நடைப்பயணம், மதுராவின் மழலைப் பிடிவாதங்கள் என, நிறுத்தாமல் பேசிக் கொண்டிருந்தான்.

"கதிர்! நீ இவ்வளவு தூரம் மூச்சு விடாமல் பேசவே மாட்டே இல்ல. இன்னிக்கு என்ன ஆயிடுச்சு?"

"என்னவோ வீடெல்லாம் துப்புரவு பண்ணி வெள்ளையடிக்கிறதுக்கு முன்னால், பழைய சாமானெல்லாம் தூக்கி வீசுவாங்களே, அது மாதிரி பழசையெல்லாம் தூக்கிப் போட்டிரணும் போல வருது."

"அட்ரா சக்கை. அப்புறம்?" என மோவாயில் கை வைத்து தாமரை அவனைப் பார்த்து அபிநயித்தாள்.

"பழைய குப்பையை ஏத்திக் இட்டே போனா, மூச்சே விட முடியாமப் போயிடும்."

"அடுத்த வாரம் பிள்ளையார் நோன்பு வருது. காரைக்குடிக்குப் போவோமா?" என்றாள்.

"நான் வரலஞ்ச" என்றான் கதிர். காரைக்குடி என்ற பெயரைக் கேட்டதும் அவனிடம் ஆவேசமாய் ஓர் உணர்ச்சி எழுந்து அடங்கியது.

"இப்பந்தானே சொன்ன, பழ



சையெல்லாம் தூக்கிப் போட்டு டணும்னு" என்றாள்.

"அண்ணாதுரைன்னு ஒரு டிரைவர் பத்தி தியாகராஜன் சொன்னாருல்ல. அவரையும் கூட்டிக்கினு முத்தையா செட்டியார் முன்னால் போய் நிக்கணும். வழக்காடணும். நீ நல்லவன்னு ஊர்க்காரங்களுக்கு நிரூபிக்கணும். உன் வீட்டினருக்கு நிரூபிக்கணும்."

''அவங்களுக்கு நிருபணம் ஆகியிராதுன்னு நம்புறியா?'' என்றான் கதிரேசன்.

"நீ மேலும், மேலும் உன்னை நிரூபிச்சுக்கிட்டே வர்ற கதிர்."

"என்னன்னு?"

"வலம்புரி முத்துன்னு."

அவர்களிடம் ஏற்பட்ட தெளிவு, அவர்களது வாழ்வை எளிதானதாகவும், சிக்கல் இல்லாததாகவும் மாற்றக் கூடிய தாய் இருந்தது.

பிள்ளையார் நோன்புக்கு இருவருமே விடுப்பு எடுக்க முடிவு செய்தனர்.

"கந்தரப்பம், கருப்பட்டி பணியாரம், பால் பணியாரம், பயத்தம் பணியாரம், வெள்ளைப் பணியாரம், கவணரிசி, கும்மாயம், தேங்குழல், சீடைக்காய், மன



கோலம் எல்லாஞ் செய்யப் போறேன்" என்றாள் தாமரை.

"யாரு இருக்காக இங்க?" என்றான்.

'நாங்கள் இருக்கிறோம்' என்பது போல அழகப்பனும், தெய்வானை ஆச்சியும் பிள்ளையார் நோன்புக்கு இரண்டு நாட்கள் முன்பு வந்து நின்றபொழுது, கதிரேசனுக்கு உடலெல்லாம் பதறிவிட்டது. ஒரு நெடுங்கனவின் தொடர்ச்சி போல முகவரி விசாரித்துக் கொண்டிருந்த அவர்களைப் பார்த்ததும், கதிரேசன் கண்களில் நீர் மல்க அவர்கள் எதிரில் போய் நின்றான். அவர்கள் மூவர் கண்களிலும் தாங்கள் நிற்பது வீதி என்பது தெரியாமல் நீர் சொரிந்து கொண்டே இருந்தது. "அப்பச்சி" என தெய்வானை ஆச்சி அவன் தலைமுடியைக் கோதிக் கொடுத்த பொழுது, கதிரேசன் வாய் விட்டே அழுதுவிட்டான்.

"பச்சைப் புள்ளையாட்டம் நடுவீதியில் என்னப்பு அழுவுற?" என அழகப்பன் அதட்டினாலும் அவர் குரலிலும் தழுதழுப்பு மறையவில்லை.

இவற்றையெல்லாம் சிட்-அவுட்டிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த தாமரை, மடமடவென்று வாசலுக்குச் சென்று அவர்களது பெட்டிகளை வாங்கிக் கொண்டு "வாங்க! வாங்க" என வாயும், மனமும் நிறைந்து வரவேற்றாள்.

"உங்கம்மாவைக் கொஞ்சம் கண்டிச்சு வைங்க...!"

"ஏன்...என்னாச்சு?"

"பத்து நாளா என்கிட்ட அவங்க சண்டையே போடலை... ரொம்ப போரடிக்குது!"

- லட்சுமி ஆவுடைநாயகம்



"அடடா! வந்ததிலிருந்து எல்லாரும் அழுதுகிட்டிருந்தா எப்படி? பஸ்ல வந்தியளா? ட்ரெயினா? சிரமப் பரிகாரம் பண்ணிக்கிட்டு குளிச்சிப்புட்டு வாங்க. நாளைக்குப் பிள்ளையார் நோம்பு. இழையெடுக்க பெரியவுகளைக் காணோம்னு நெனச்சேன். நானும் கதிரும் ரெண்டு நாளா விடுப்பு எடுத்திருக்கோம்" என்றாள் தாமரை.

அருணாசலம் 'பேசுபவர்களிடம் பேசிக் கொள்கிறேன்' எனச் சொல்லிச் சென்றது தியாகராஜனிடம் இல்லை என்பது இவர்கள் வந்ததும்தான் புரிந்தது. தனது செயல்களில் உள்ள நேர்மை காரணமாக, அவளால் எவரையும் எதிர்கொள்ள முடியும் என்றே தோன்றியது.

வெல்லம் உதிர்த்துக் கொண்டிருந்த பொழுது நிழல் விழவே, நிமிர்ந்து பார்த்தாள்.

"செட்டாத்தான் வச்சிருக்க சமையக் கட்ட" என்றாள் ஆச்சி ஒரே பார்வையில்.

தாமரை இணக்கமாகத் தலையாட்டினாள்.

"சிரமம்னு பார்த்தா எதுலதான் சிரமம் இல்லை" என அவளுடைய பழைய வாக்கியத்தைப் பிடித்துக்கொண்டு பேசத் தொடங்கியதும், தெய்வானை ஆச்சி எதையோ புதிதாகத் துவங்குவதாக இருந்தது.

"அவுகளுக்கு மிஞ்சிப் போயிருந்தா நாப்பத்திரண்டு வயசிருக்கும். சாகக் கூடிய வயசா? இல்லை. எனக்கு இவுனையும் சேர்த்து நாலு பசங்க. வள்ளி மெடிக்கல்ஸை நான்தான் எடுத்து நடத்த ஆரம்பிச்சேன். வீட்டு அடையாளமே அதுன்னு ஆனப்பறம், அதை இழக்க சம்மதிக்க முடியுமா? பெண்கள் சுயமா சம்பாதிக்கலாமா, கூடாதான்னு யோசிச்ச காலத்திலேயே நான் கடை நடத்துனேன். நிர்பந்தம், தேவை. நீயும் அதைத்தானே செய்யிற?"

மற்ற எல்லா செட்டிநாட்டுப் பெண்களையும் விட, தெய்வானை ஆச்சியிடம் ஒரு தெளிவு இருப்பது தெரிந்தது.

அழகப்பனும் பேச்சில் கலந்து கொள்ளும் விதமாக "தாமரை! எங்க வீட்டுப் பிள்ளைக்கு வக்கணையா

சோறாக்கிப் போடுறியா?" என்றார்.

"கதிருகிட்ட கேக்க வேண்டிய கேள்வி" என்றாள் தாமரை.

வார்த்தை ஒரு மையப் புள்ளியை அடையாமல் தாவித் தாவி போய்க் கொண்டிருந்தது. நேரமும், காலமும் கூடி வரும் வரையில் ஒரு சொல், ஒரு பார்வை, ஓர் இசைவுக்குக் காத்திருப்பதுதானே இயல்பு!

நாகப்பன் பற்றிய பேச்சு எழுந்தது.

"அண்ணமுண்டி சொகமா இருக்காகளா?"

தெய்வானை ஆச்சி வெள்ளைச் சேலை முந்தியால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அழகப்பன்தான் பதில் சொன்னார்.

"நாகப்பனுக்கு மன உளைச்சல் ஏற்பட்டிருக்காம்பா. அப்படித்தான் டாக்டருங்க சொல்றாங்க. திடீர், திடீர்னு சத்துதான். கோபமுன்னா கோபம், அப்படி ஒரு கோபம் வருது.

மனநல மருத்துவரிடம் சிகிச்சைக்குப் போய்க்கிட்டிருக்கோம். வெளிய பார்த்தா நல்லாதான் இருப்பான். உள்ள ஒரு கொதிப்பு; குற்ற உணர்வு. அவன் வெளியில பத்த வச்ச தீ, அவன் மேலேயே பத்திக்கிச்சு. கொஞ்சம் கொஞ்சமாய் குணமாயிடும். ஆனா அதுக்குண்டான காலமும், சூழலும் வேணுமாம். மருந்து சாப்பிடறான். அப்பந்தான் உன்னய வந்து வேறு ஒரு விசயமா பார்க்கோணும்னு தோணுச்சு. ஆனா, அருணாசலம் நீ என்னவோ கொலக்குத்தம் பண்ணினவன் மாதிரி தாமரையோட வீட்டில புழுங்கிக்கிட்டிருக்கறதைச் சொன்னான். எங்களுக்கும் உன்னைப் பார்க்க, உனக்கு ஒரு நல்லது செய்ய சந்தர்ப்பம் கிடைச்சது. கிளம்பி வந்துட்டோம்."

கதிரேசன் அழகப்பன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன நல்லதுன்னு கேட்க மாட்டியா?" என்றார் அழகப்பன்.

"சொல்லுங்க."

"ஒனக்கு மெட்ராசுல ஒரு மருந்துக் கடை போட்டுத் தரலாம்னு வந்திருக்கோம்" என்றார் அழகப்பன்.

"வெரிகுட் அண்ணே" தாமரை முழு சந்தோஷத்துடன் கூவினாள்.



"பேச்சுவார்த்தை நடத்தும் இடத்தில் சத்தமே இல்லையே..."
"தெரியாதா? இது, அமைதிப் பேச்சுவார்த்தை!"
- எஸ். மோகன்

"இந்த ஓவியம் இப்படித்தான் பூர்த்தியாகணும்னு இருக்கு. நானே சொல்லலாமுன்னு இருக்கேன். இப்ப இவன் வேலை பார்க்கும் கடையோட மொதலாளி, செஞ்ச வியாபாரம் போதும்னு, சிங்கப்பூரில் பையனோட செட்டில் ஆகப் போறாராம். கடைய மொத்தமா வேற யாருக்காவது கிரயம் செய்யுறதா இருக்காராம். சொல்லுங்க, நாம பேசி முடிவு பண்ணிருவோம்."

"தாமரை" கதிரேசன் தயங்கினான்.

"போதும்! போதும்! அழகப்பண்ணே மொதல்ல நீங்க கௌம்புங்க" என்றாள்.

அழகப்பன், தாமரை, கதிரேசன் மூவரும் கிளம்பினார்கள்.

தெய்வானை ஆச்சி, அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இன்று பிள்ளையார் நோன்பு. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மரகதப் பிள்ளையாரை வழி வழி மரபின் தொடர்ச்சியாக கொண்டு செல்லும் தமிழும், சைவமும், சீலமும் உள்ள ஒரு குலத்தின், பெருமைமிகு பண்டிகையான பிள்ளையார் நோன்பு.

தேங்குழல், முறுக்கு, எள்ளுருண்டை, கடலை உருண்டை, கருப்பட்டிப் பணியாரம், பால் கொழுக்கட்டை, உளுந்து கொழுக்கட்டை, வெல்லப் பணியாரம், சீடைக்காய், மனகோலம், பாயசம் என, தெய்வானை ஆச்சி மனமொப்பி கடவுளுக்குப் பலகாரங்கள் செய்து வைத்திருந்



அப்பாடா!

'திருட்டு வி.சி.டி, ஒழிப்பு' தமிழ்த் திரைப்படத் துறையில் என்ன மாறுதலை ஏற்படுத்தியுள்ளது!

ஒரு சோறு பதமாக பல சினிமா புள்ளிகள் கை காட்டுவது 'எனக்கே எனக்கா' திரைப்படத்தைத்தான்!

லண்டனில் வசிக்கும் தமிழ்ப் பெண் திருமதி சுபா சந்தீப் முதன்முறையாக தமிழில் தயாரித்த படம் இது. ஹாலிவுட் படங்களுக்கு நிதி உதவி செய்து கொண்டிருப்பவர் இவர்.

இவரது 'எனக்கே எனக்கா' படம் புதுமுகங்களை வைத்து எடுத்த படம். 'திருட்டு வி.சி.டியை எதிர்த்து நிற்க வேண்டுமானால், பெரிய ஹீரோக்கள் படங்களால்தான் முடியும்' என்று பல விநியோகஸ்தர்கள் இந்தப் படத்தை வாங்க முன் வரவில்லை.

ஆனால் இப்போது திருட்டு வி.சி.டி ஒழிப்பதில் தமிழக போலீஸ் சுறுசுறுப்பைக் காட்டி, திருட்டு வி.சி.டி பெருமளவில் ஒழிக்கப்பட்டு விட்டதால் படம் பெரும்பாலான ஏரியாக்களில் விற்று விட்டதாம். -ஜி

தான். முதல்நாளே சென்று மூவரும் கடையைக் கிரயம் செய்து, அச்சாரமாக ஒரு லட்சம் கொடுத்து விட்டு வந்தது. அவள் மனத்துக்குச் சாந்தி கொடுத்தது.

கடையைக் கிரயம் பண்ணிய சந்தோஷத்தில் அனைவரும் இருக்கும்பொழுது, தெய்வானை ஆச்சி தாமரையிடம் கேட்டாள். "ஏஞ்சு தாமரை! நாங்களே உன்னை வந்து கேக்குறோம். கதிரைக் கலியாணம் கட்டிக்க சம்மதஞ் சொல்லுவியா?"

தாமரை சட்டென்று சுதாரித்துக் கொண்டாள்.

"ஏன் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டீக ஆச்சி?" என்றாள்.

தெய்வானை ஆச்சியால் பதில் சொல்ல முடியவில்லை.

"நாங்க ரெண்டு பேரும் ஒரே கூரையின் கீழ் குடியிருப்பதாலா? கதிரேசன் எனக்கு அனுசரணையா இருப்பதனாலா? நான் கதிரேசனால் காதலிக்கப்பட்டவள் என்பதனலா? இன்னும் கதிரேசன் திருமணமாகாமல் இருப்பதனாலா? இல்லை அவனுடைய குடிப்பிறப்பின் தாழ்ச்சி, என் கைம்மையுடன் சமனாயிடுச்சு என்பதனாலா? இல்லை அவனுக்கு ஒரு கடையை ஏற்படுத்திக் கொடுத்து, அவனை மீண்டும் கல்லாவில் உட்கார வைப்பதில் நான் காட்டும் அக்கறை காரணமாகவா, எதனால் ஆச்சி இப்படி ஒரு கேள்வி வந்தது?"

தெய்வானை ஆச்சி விக்கித்துப் போனாள்.

"என் மனசில் ஒரு கதிரேசன் இருக்கிறான் ஆச்சி. தூய்மையான கதிரேசன். அவனை உங்க எல்லாருக்கும் அடையாளம் காட்ட ஆசைப் பட்டேன். நடக்கலை. அவனுடைய பழியைத் துடைக்கணும்னு சிறுபிள்ளைத்தனமான வெறி இருந்தது. அதுவேகூட தப்பிதம்னு புரிய வைச்ச கதிரேசன் மேலும் தூய்மையானவன் ஆகிவிட்டான். அவனுக்கு என்னை அர்ப்பணிக்க இப்பத் தகுதி இல்லைன்னு நினைக்கிறேன். எனக்குள்ளே மக்கிப் போன அழுக்கு ஒண்ணு, தூர்வாரப் படாமலே மனசுக்குள்ள புதைந்து கிடக்கு. கதிரேசனின் நல்லதொடர்பு காரணமா அந்த அழுக்கும் போகட்டும். அதுவரைக்கும் நானும், அவனும்... கதிரேசனும், தாமரையுமாகவே இருந்துட்டுப் போறோமே?" என்றாள்.

"அண்ணே! தடுக்குக்குள் போங்கண்ணே" என்றாள் தாமரை.

அழகப்பன் மேல் சட்டையைக் கழற்றி விட்டு இடுப்பில் ஒரு உத்தரீயத்தைக் கட்டிக் கொண்டு, 'சீதக்களப' எனப் பாடத் தொடங்கினார். அந்த உத்தம குலத்தின் முழுமுதல் நாயகனான விநாயகர் அவர்களைப் பார்த்து சிரித்த வண்ணமிருந்தார்.

(முற்றும்)

ஆஹா! நெய் வாசம் மூக்கைத் துளைக்குதே!
செண்பகம் பிராண்ட் நெய் தாங்க!!

செண்பகம்
பிராண்ட்
PURE GHEE

சுவையான சமையல் என்றென்றும் செண்பகம் பிராண்ட் நெய்யில்

தற்போது
15Kg, 5L, 2L, 1L, ½L
டின்களிலும், கேன்களிலும்
மற்றும் 200ml, 100 ml, 50 ml,
பவுச் பேக்கிலும் கிடைக்கிறது.

SRI DHANALAKSHMI & CO.
SENBAGAM BRAND GHEE MANUFACTURER,
18, M.G Pudur, I street,
TIRUPPUR - 641 604
Phone : 0421 - 2213557, Cell: 94433 56808



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
89, (பழைய 42) காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம் - 612 001.
E-mail : vedagdps@sancharnet.in - Website : www.geocities.com/gdpskmu

☎ : (0435)
Off : 2425948
Fax : 2423777
Patasala : 2422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 462 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 150 மாணவர்களுக்கு 14 வேத, சாஸ்திர அத்யாபகர்கள் புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். புதிய பாடசாலை கட்டிடம் ***ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் கடிகா ஸ்தானம்*** என பெயரிடப்பட்டு 21-6-2004 திங்கள்கிழமை ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் திறந்து வைத்து வேத அபிவிருத்திக்கு அர்ப்பணித்தார்.

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு நன்கொடை திட்ட விபரங்கள்	நன்கொடை தொகை	ஸ்திர வைப்பு நிதி "Corpus Fund"
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 8,000
அமாவாஸ்யை (or) *பௌர்ணமி* (or) *க்ருஷ்ண* (or) *சுக்ல பக்ஷ த்வாதசி ஒரு ஸமாராதனைக்கு* [Please choose one specific day of a particular month in a year for Samaradhana]	Rs. 1,500	Rs. 25,000
வேதம் பயிலும் ஒரு மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs.2 Lakhs

நன்கொடைக்கான தொகையை Cross செய்யப்பட்ட D.D/ Cheque-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.



ஆசிரியர் பக்கம்

பற்றுக பற்றற்றான் பற்றினை...

துறவிகளுக்கு உலகெங்கிலும் தனி மரியாதை உண்டு. நம் நாட்டில் தீவிரமான மதிப்பு, மரியாதைக்கும், வழிபாட்டுக்கும் உரியவர்களாகிறார்கள் அவர்கள். காரணம் இல்லாமல் இல்லை. இந்தியாவில் தோன்றிய மதங்கள் எல்லாமே, புலன் நுகர்ச்சிக்கு அடிமையாகாமல், அவற்றைக் கடந்து சென்றால் பரம்பொருளை, பேரானந்தத்தை அடையலாம் என்றுதான் (சிற்சில வேறுபாடுகளுக்கு உட்பட்டுக்) கூறிவருகின்றன. இந்தப் புலன் மறுப்புக் கோட்பாட்டுக்கு வாழும் உதாரணமாக விளங்குவோரே துறவிகள். அதனால் தான் துறவிகளுக்கு நாம் அத்தனை மரியாதை தருகிறோம். சராசரி மனிதர்களால் கடைப்பிடிக்க முடியாத ஒரு வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கும் வைராக்கியம் அவர்களுக்கு இருக்கிறது என்று வணங்குகிறோம். சராசரி மனிதர்களின் சராசரித் தன்மையை நிராகரிக்காமல் ஏற்று, அவர்களை வழிநடத்தி, கைதூக்கிவிடும் கனிவும் மனித நேயமும், இருப்பதால் துறவிகளை வழிபடவும் செய்கிறோம்.

இந்தப் போற்றுதல் காரணமாகவே, துறவு நிலையில் இருப்போரை எடை போடுவது, அல்லது விமர்சிப்பது என்பது நமக்கு உவப்பான காரியங்களாக இருப்பதில்லை. கடவுளை அடைய வழிகாட்டும் ஒருவரை, முழுமையாக நம்ப விரும்புவோமேயொழிய சந்தேகிக்க விரும்ப மாட்டோம். அதனால் தான் சங்கராச்சார்யார் கைது, நமக்குத் தாங்க முடியாத அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

காஞ்சி முனிவர் என்று நாம் போற்றி வணங்கும் பரமாச்சார்யார், பற்றறு நிலை பற்றிக் கூறியிருப்பது இச்சமயத்தில் நினைவு கூரத்தக்கது:

பழம் மதுரமாக இருக்கிறது. இந்த மதுரம் வருவதற்கு முன்பு எப்படி இருந்தது..? பூவில் கசப்பாகவும், பிஞ்சில் துவர்ப்பாகவும், காயில் புளிப்பாகவும், பிறகு மதுரமாகவும் ஆகிறது. மதுரம் என்பதுதான் சாந்தம். சாந்தம் வந்தால் எல்லாப் பற்றும் போய்விடும். புளிப்பு இருக்கும்வரை பற்று இருக்கும்... அப்போது காயைப் பறித்தால் காம்பில் ஜலம் வரும். காயிலும் ஜலம் வரும். அதாவது மரமும் காயை விட்டுவிட விரும்பவில்லை; காயும் மரத்திலிருந்து விடுபட விரும்பவில்லை. ஆனால் நிறைந்த மதுரமாக ஆகிவிட்டால், தானாகவே பற்றும் போய்விடும்; பழம் தானே இற்று விழுந்து விடும்... இரண்டும் ஜலம் விடாமல் - அதாவது அழாமல் - பிரியும்... படிப்படியாக வளர்ந்து மனம் முழுதும் மதுரமான ஒவ்வொருவனும், இப்படியே ஆனந்தமாக சம்ஸார விருட்சத்திலிருந்து விடுபட்டு இருப்பான்.

இல்லறத்தாருக்கு அனுமதிக்கப்படும் படிப்படியான பற்றறு நிலையே கடினமானதுதான். துறவறத்தாரிடம் எதிர்பார்க்கப்படுவதோ, படிப்படியாக வளரும் மதுரம் அல்ல... கண நேரத்தில் உலகை உதறும் வீர வைராக்கியம்!

இத்தகு வைராக்கியத்தை மேற்கொள்ள ஒரு நபர் தேர்ந்தெடுக்கப்படும் போது, அந்தத் தேர்வு வெற்றியடையாமல் போவதற்கும் வாய்ப்பு உண்டு. இந்தத் தெளிவுதான் நமக்கு இன்று அவசியம் தேவைப்படுகிறது. எந்த மனிதரும் தவறு இழைக்கலாம். எந்த அமைப்பும் ஏற்றத் தாழ்வுகளுக்கு அப்பாற்பட்டதல்ல என்பதை ஏற்போம். ஏற்றத்துக்கே பாடுபடுவோம். சமய அமைப்புகளின் செயல்பாடுகளை, நமது நியாயமான விமர்சனப் பார்வைக்கு உட்படுத்துவோம். அவை வாழ்வது, மனித குலத்துக்கு அவசியம். அவை வாழவேண்டுமானால், அவற்றின் குழந்தைகளான நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

மும்பை நியூஸ்



ஷாகி



ஐஸ்வர்யா



டயானா ஹைடன்

ஐஸின் ரெயின்கோட்!

• முன்னாள் உலக அழகி டயானா ஹைடன் பல வருடங்கள் ஒதுங்கி இருந்து விட்டு இப்போது திடீரென திரைப் பிரவேசம் செய்ய இருக்கிறார். அவர் நடித்த படத்தின் பெயர் 'அப்...பஸ்' (இனி... போதும்!) படம் வெளி வந்த பிறகு ரசிகர்கள் இதைச் சொல்லிக் கூச்சலிடாமல் இருந்தால் சரி! டீ.வியையும் விடுவதாக இல்லை. ஏ.எக்ஸ்.என் மற்றும் ஹாங்காங் டூரிஸம் போர்ட் இணைந்து எடுக்கும் டெலிவிஷன் புரோகிராமுக்கும் இவர்தான் தொகுப்பாளினி.

• ஐஸ்வர்யா ராய் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருக்கிறார். உலக அழகி பட்டம் வென்று பத்து வருடங்கள் ஆகின்றன. இப்போது 'ரெயின்கோட்' என்ற வித்தியாசமான கதை அம்சமுள்ள படத்தில் நடித்திருக்கிறாராம் ஐஸ். அவார்டு நிச்சயம் என்கிறார். அதோடு மெகா பட்ஜட் மூவியாக சுமார் இருநூறு கோடி ரூபாய் செலவில் 'சுஜாதா' என்றொரு திரைப்படத்தில் நடிக்க விருக்கிறார் என்ற தகவல் கசிகிறது. இதன் இயக்குநர் சேகர் கபூர். பிராட் பிட் மற்றும் ரிச்சர்ட் கியர் போன்ற ஹாலிவுட் பிரபலங்களை இந்தப் படத்தில் நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. புத்தரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு வர இருக்கும் இத்திரைப் படத்தில், புத்தரின் மனைவி யசோதராவின் ரோலில் ஐஸ்வர்யா ராய் நடிக்கிறாராம்.

• சர்வதேச அளவில் புகழ் பெற்ற பாடகர் ஷாகிக்கு இந்தியா மிகவும் பிடித்திருக்கிறதாம். ஜமைக்காவில் பிறந்த இவர், இப்போது அமெரிக்கப் பிரஜை. இவருக்கு உலகெங்கும் ரசிகர்கள் உண்டு. 95ம் வருடம் கிராமி அவார்ட் வென்ற ஷாகியின் ஆல்பங்கள் மார்க்கெட்டில் வந்தவுடனேயே 'பெஸ்ட் கண்ணா பெஸ்ட்' என விற்றுத் தீர்ந்து விடுமாம். (இலவசமாக ஏதும் தராமலேயே) 75 நாடுகளில் இவர் புரோகிராம் கொடுத்திருக்கிறாராம். பத்து மில்லியன்களுக்கும் அதிகமாக இவரது ஆல்பங்கள் விற்பனை ஆகியிருக்கின்றன. ஆனாலும் ஷாகி ரொம்ப சிம்பிள். "இந்தியா ரொம்பப் பிடிச்சிருக்கு. ஜமைக்கா மாதிரியே இருக்கு. ஜனங்களின் அன்பு, இங்கிருக்கும் இசை, அதன் பாரம்பர்யம் எல்லாமே என்னைக் கவர்கிறது" என்று உருகுகிறார் ஷாகி. விரைவில் தில்லி, மும்பை ஆகிய நகரங்களில் இவரது இசை நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது என்பது போனஸ் செய்தி.

- லதா சேகர்

சாமியார்களுக்குத் தடை விதித்தால் என்ன..?

● கே. துரைசாமி, மங்களப்பட்டி

? பலவிதமான யூகங்களுக்கு இடமளிப்பதால் சாமியார்களுக்குத் தடை விதித்தால் என்ன...?

! ரோஜாச் செடியில் முட்கள் இருப்பதால் செடியை வேருடன் வெட்டி எறிவீர்களா, அல்லது ரோஜாக்களைப் பார்த்து மகிழ்வீர்களா?

● ப. ராமகிருஷ்ணன், காயக்காடு

? மத்திய அரசின் வேலைக்கு உணவுத் திட்டத்தின் மூலம் அரிசி கொடுப்பது, மக்களைப் பிச்சைக்காரர்களாக்குவது போல் உள்ளதே?

! வேலைக்கு உணவு என்பது நிச்சயமாகப் பிச்சை அல்ல. வறட்சி அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, விவசாயம் சார்ந்த மக்களுக்கு, அப்பகுதியின் அடிப்படை வசதிகளைப் பெருக்கும் வகையில் வேலை வாய்ப்பு அளித்து, கூலிக்குப் பதிலாக உணவு தானியம் தருவது அம் மக்களின் பட்டினியைத் தீர்க்கும் என்பதுடன், பிற இடங்களின் உபரி விளைச்சலை உபயோகிக்கவும் வழி செய்யும் - அதாவது, திட்டம் ஒழுங்காக நடைமுறைப் படுத்தப்பட்டால்!

● கு. அருணாசலம், தென்காசி

? சிவகாசி ஜெயலட்சுமி வாழ்க்கை வரலாற்றை மாணவ - மாணவிகளுக்குப் பாடமாக வைக்கலாம் அல்லவா...?

! காவல் துறை பயிற்சிக் கல்லூரியில் பாடமாக வைக்கலாம்!

● தெ. சுந்தர மகாலிங்கம், வத்திராயிருப்பு

? வார இதழ்களில் சிறுகதைகளின் எண்ணிக்கை குறையக் காரணம் என்ன?

! தொலைக்காட்சி செய்த கொலைகளுள் ஒன்று இது... ஒரு கதையைப் படித்து, கதாசிரியரின் மன, கற்பனை ஓட்டத்துடன் ஒன்றி, அதைத் தனது மனத்திலும் மூளையிலும் அசை போடும் / சிந்திக்கும் முயற்சியையும் ஆற்றலையும், கற்பனைக்கிடமேயின்றி காட்சிகளையும் உரையாடல்களையும் வழங்கும் தொலைக்காட்சி நசுக்கிவிட்டது.

● தெ.ச. சேகர், மோரகனியனூர்

? எதை நினைத்தால் உங்களுக்கு அடக்க முடியாத சிரிப்பு வரும்...?

! ஏமாற்றுச் சாமியார்கள் என்பதாக தொலைக்காட்சி சிறப்புப் பார்வையில் பட்டியலிட்டுவிட்டு, அவர்களுள் ஒருவரைப் பற்றிய விளம்பரத்தை அதே குழுமத்தின் வார இதழில் வெளியிடும் தடுமாற்றத்தைக் கண்டு.

● ரேவதிப்பிரியன், ஈரோடு - 1

? நான் அத்வானியிடம் மன்னிப்புக் கேட்கத் தயார், ஆனால் பி.ஜே.பி கட்சி என்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்கிறாரே உமா பாரதி?

! அவர் அப்படிச் சொன்னதும் கண் துடைப்பு; அதற்கு விதித்த நிபந்தனையும் கண் துடைப்பு; அத்வானி என் அப்பா மாதிரி என்று அறிக்கை விட்டுக் கேட்ட மன்னிப்பும், மகா கண்துடைப்பு!



● ஏற்க வேண்டிய...



● ... சிபாரிசு

● கே. முரளிதரன், மதுரை - 10

? ஜயேந்திரர் பிரச்னைக்குப் பின் மற்ற மதத்தார் ஹிந்து மதத்தைப் பற்றி என்ன

நீங்கள் கேட்டவை–தராசு

நினைத்திருப்பார்கள்...?

! பிற மதத்தார் ஹிந்து மதத்தையோ, துறவு நிலையையோ குறைத்து மதிப்பிடுவதாகத் தெரியவில்லை. மதங்களை நிராகரிப்போர்தான் தங்கள் தரப்பு நியாயப்படுத்தப்பட்டிருப்பதாக நினைத்துக் கொண்டு ஆட்டம் போடுகிறார்கள்.



* டபுள் சபாஷ்!

● என். கணேசமூர்த்தி, சிக்கல்

? 'இந்திய கிரிக்கெட் அணியில் தற்போது தலைமை மாற்றம் தேவை' என ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் கேப்டன் ஸ்டீவ் வா கூறியுள்ளாரே?

! செவி சாய்க்க வேண்டிய சொரிக!

● உமரி பொ. கணேசன், மும்பை - 37

? ஜம்மு - காஷ்மீரில் படைகளைக் குறைக்க அரசு எடுத்த முடிவு சரியா?



* கை கொடுத்த குணங்கள்



* பிய்த்தெறிந்த மாலை!

! துணிச்சலான முடிவு என்பதைத்தான் இப்போதைக்குச் சொல்ல முடியும். சரியான முடிவா என்பது, அதனோடு இணைந்து அயலுறவுத் துறை நிகழ்த்தும் பாக். நல்லுறவு முயற்சிகளையும், உளவுத்துறையின் விழிப்புணர்வையும் பொறுத்துதான் தெரியும் - அமையும்.

● கோ. பாலமுருகன், சென்னை - 77

? புன்னகை, மௌனம், கண்ணீர் - பெண்களின் வலுவான ஆயுதம் எது?

! இந்த மூன்றையுமே அனாவசியமாகவோ அளவுக்கு மீறியோ பயன்படுத்தாமல், கௌரவம் காக்கும் மனோ பலமே மிகச் சிறந்த ஆயுதம்.

● சு.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? 'மத்திய அரசுப் பணிகளில் சேர காஷ்மீர் மாநில இளைஞர்களுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படும்' என பிரதமர் அறிவித்துள்ளாரே...?

! அது மட்டுமா? மணிப்பூரில் வேலை வாய்ப்புப் பெருகவும், அஸ்ஸாமில் தொழில் பெருகவும் நிதி ஒதுக்கி, திட்டங்கள் அறிவித்துள்ளார். அதேசமயம் பிரிவினைப் பேச்சுக்குத் 'தடா' போட்டதற்கு இரட்டை சபாஷ்!

● வி. கல்யாணி, மகாராஜபுரம்

? மறைந்த மனநல மருத்துவர் மாத்ருபூதம் பற்றி...?


! பாலியல் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பரபரப்பாகப் பேசப்பட்டவர் என்றாலும், அவருடைய



* நலமதிய ஆவல்!



* பிரச்னைக்குப் பின்....



* மெகா தொடர்!

நகைச்சுவை உணர்வும் இறையுணர்வும் தான் முக்கியமாகப் படுகின்றன. அவை தாம் அவருக்கு உடல் நலக் குறைவை எதிர்கொள்ள கடைசிக் காலத்தில் உதவின.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? 'சங்கராச்சார்யார் கைதில் போலீசார் நேர்மையாகச் செயல்பட்டுள்ளனர்' என்று கருணாநிதி புகழ் மாலை சூட்டியுள்ளாரே?

! 'உள் நோக்கம் கற்பித்து, 'வழக்குத் தொடர இரண்டு மாதம் தாமதித்ததேன்?' என்று கேள்வியும் கேட்டு, அந்த மாலையைத் திரும்பப் பிடுங்கி, பிய்த்தும் போட்டு விட்டாரே!

● என். கணேஷ், கோவை ★

? தனி மனிதனால் சமயமும் சமுதாயமும் வளம் பெறுகிறதா...?

! வளம் பெற முடியும். வெகு அபூர்வமாக அத்தகைய மகான்கள் தோன்றுவார்கள். ஆனால், அவ்வாறு தோன்றுவோர், தங்களால் தான் சமயமோ சமுதாயமோ வளர்ந்தது என்று சொல்லிக் கொள்பவர்களாக இருக்க மாட்டார்கள்.

● ஆர்.ஜி. அம்பிகைராமன், திசையன்விளை

? ரஜினி படத்தில் சிம்ரன் இல்லையாமே?

! கர்ப்பமாக உள்ள சிம்ரனின் உடல்நலனைக் கருதித்தான் அவரை நீக்கி விட்டு, ஜோதிகா சேர்க்கப்பட்டுள்ளார் என்கிறார் 'சந்திரமுகி' இயக்குனர் பி. வாசு. இதுதான் உண்மையான காரணமா என்று சிம்ரன்தான் கூற வேண்டும். ஹலோ, ஸ்ரீசக்கரம்... கொஞ்சம் விசாரிச்சுப் பாருப்பா!

● வே. முருகேசன், சென்னை - 88

? காஞ்சி சுவாமிகள் கைதான பிறகும் சங்கரமடத்துக்கு பக்தர்கள் அதிகமாக வருகிறார்களே...?

! 'பீடம் என்பது பீடாதிபதியைவிட உயர்ந்தது' என்ற கல்கியின் கருத்து நிரூபணமாகியுள்ளது.

● த.வி. மூர்த்தி, சென்னை - 13

? இறைவனை வணங்கும்போது மனம் அலைபாயாமல் இருக்க என்ன செய்யலாம்?

! தியானம் எளிதில் கைவராது. மனம் அலைபாயும். அதற்காகத்தான் பூஜை என்று வைத்தார்கள். தெரிந்த நாமாவளிகளை வாய்விட்டுச் சொல்லியபடியே, வீட்டில் தினமும் சுவாமி அலமாரியை சுத்தப் படுத்துங்கள். பிறகு துளசி தளம், மலர்களால் அலங்கரித்துப் பூஜை செய்யுங்கள். இதில் மனம் லயிக்கும். நாள்பட, தியான வகுப்புக்குப் பிரமோஷன் கிடைக்கும்.

● ஆர்.எஸ். சந்திரசேகர், சென்னை - 53

? ஹர ஹர 'சங்கர ராமா'? ஜய ஜய சங்கர ராமா...?

! பக்தர்களுக்குத் தர்ம சங்கடம் ராமா.

❒ ரூ 100 பரிசு பெறுபவர்
கே. முரளிதரன்,
40/17, முதல் மெயின் ரோடு,
பொன்மேனி ஜெயநகர்,
மதுரை - 10

★ 50 பரிசு பெறுபவர்
என். கணேஷ்,
6C, வி.கே.வி. நிவாஸ்,
வெள்ளக்கிணறு ரோடு,
ஜி.என். மில். அஞ்சல்,
கோவை 641 029



ஓடிக்கிட்டேயிருந்தா...

இது பல்டி சீசன்! பெஸ்ட் பேக்கரி வழக்கில் முக்கிய சாட்சி பல்டி! சந்திரமுகி ஹீரோயின் செலக்ஷனில் பல்டி! ஜயேந்திரர் பேரிலான வழக்கு விஷயத்தில் தலைக்குத் தலை பல்டி! உக்கிரமாய் வெளியேறிய உமாபாரதி பல்டி! எல்.பி.ஜி. விலை விஷயத்தில் பசிதம்பரம் பல்டி!... யாரையும் எதையும் கேட்டுக்கிறதில்லேன்ற சுமியோட ஸ்டாண்ட்லேருந்து பல்டியடிக்காம, ஸேஃப்ஃபா இரண்டு காலையும் தரையில் பதிச்சு வைச்சுக்கறேன்.

'இலங்கையைத் தாண்டுடா ராமா!'ன்னா குச்சியைத் தாண்டி குட்டிக்கரணம் போடற குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான்னு நமக்குத் தெரியும். ஆனா இன்னைக்கு இருக்கற ஹ்யூமன் ஃபிகரோட ஷேப், தோற்றம் எல்லாம் எப்படி ஏற்பட்டுச்சுன்றதுக்கு ஒரு புது தியரி, அமெரிக்காவுல யூடா யூனிவர்ஸிடியில பிறந்திருக்கு தெரியுமா? இந்தத் தியரிப்படி குரங்கிலிருந்து மனிதன் தோன்றினது உண்மையே. ஆனா குரங்கு மாதிரி நாலு கால்ல நடந்துகிட்டிருந்த மனுஷன், முதுகு நிமிர்ந்து இரண்டு கால்ல நடக்க ஆரம்பிச்சப்புறமும் மங்கி மாதிரி மரத்துக்கு மரம் தாவிப் போகற வழக்கத்தையும், ஆற்றலையும் இழக்கலையாம். அந்த நிலையிலேருந்து, இன்னிக்கு நாம பார்க்கற நிமிர்ந்த நன்னடை ஸ்டேஜுக்கு வர, மூணு மில்லியன் வருடங்கள் ஆச்சாம்! அப்படி உருமாறக் காரணமாயிருந்தது, அவனோட ஓட்டம் பிடிக்கற ஆற்றல் தானாம். பரந்த சமவெளிகள்ல மிருகங்களை சேஸ் பண்ண, அல்லது மிருகங்கள் கிட்டயிருந்து எஸ்கேப் ஆக ஓடின வருஷக்கணக்கான ஓட்டம்தான் இப்போதை அனாடமியை மனுஷனுக்குத் தந்திருக்கு... ஆனா இன்னிக்கு..? ஓடணும்னாலும், நடக்கணும்னாலும் ஜிம்முக்குப் போக வேண்டியிருக்கு. இல்லைன்னா, வீட்டுக்கு ஜிம் எக்விப்மெண்ட் வாங்கிட்டு வந்து ஓட வேண்டிருக்கு! அப்புறம் அந்த எக்விப்மெண்ட் செலவுக்காக ஓடி ஓடி சம்பாதிக்க வேண்டியிருக்கு...!

இப்படி வேஸ்டா ஓடறத விட்டுட்டு நேர்மையா ஓடிக்கிட்டேயிருந்தா... ஒரு வேளை மனுஷன் பரிணாம வளர்ச்சியோட அடுத்த கட்டத்துக்குப் போயிடுவானோ என்னமோ...?

ஆனா அப்பவும் சில விஷயங்கள் மாறப்போறதில்லை:

அரசியல்வாதிகளோட பல்டி மாறாது;

ஃபேஷன் டீ.வியில் பூனை நடை மாறாது;

இந்திய கிரிக்கெட் அணி இப்ப மாதிரியே, அப்பப்போ நூறு ரன்னுக்குள்ளே ஆல் அவுட் ஆகும்;

போலிச் சாமியார்கள்கிட்ட வாலன்டரியா ஏமாந்துட்டுப் பெண்கள் புதுசு, புதுசா டீவில புலம்புவாங்க;

முன்னணிக் கதாநாயகர்கள் கிசுகிசுக்களைக் கஷ்டப்பட்டு மறுத்துட்டு, மறு மாசமே மெய்ப்பிப்பாங்க;

பெப்ஸி உமா நிகழ்ச்சியில் 'எப்படி இருக்கீங்க, நான் நல்லாருக்கேன், நீங்க எப்படியிருக்கீங்கன்'ற டயலாக் நாற்பத்தேழரை முறை பேசப்படும்.

செய்தி சானல்களை, பாலியல் பலாத்கார சந்தேகங்கள், குற்றச்சாட்டுகள், ஊகங்கள் பாதிக்கு மேல ஆக்கிரமிப்பது அழுத்தமாய்த் தொடரும் (அதிகரிக்கலாம்)...



சுமி பேச்ல, நாலு வரிக்கொரு தடவை அலட்டல் இங்கிலீஷ் அலம்பல் தற்பெருமை தவறாம இடம் பெறும்.

- சுமி



இதைவிட
பத்திரிகை
பேட்டிகள்ல நிறைய
பூ சுத்தியிருக்கேன்!

கல கல



அண்ணா, உனக்கு
அகர்வால் ஸ்வீட்தான்
பிடிக்கும்னு சொல்லிடவா?





மாப்பிள்ளையும்
இனி
க்ரோர்பதிதான்!

கமெண்ட்ஸ் :
ச.ந. கண்ணன்

படங்கள் : ஸ்ரீஹரி

கல்யாணம்!

நீதான்
தைரியலட்சுமின்னு
அப்பாகிட்ட
சொல்லலையா?





ஒரு பொண்ணு இங்கிருக்கு,
இன்னொண்ணு?
அதான்யா இது!

ஐஷ்வர்யா – தனுஷ்
திருமண ஆல்பம்!

பாலிடிக்ஸ் பஜார்!


• 'சட்டத்தின் ஆட்சி' சங்கராச்சாரியாரையே அசைத்துப் பார்த்த நிலையில், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் - குறிப்பாக பல தி.மு.க முன்னாள் அமைச்சர்களும், பிரமுகர்களும் வெள்ளிக்கிழமை என்றால் தலைமறைவாகி விடுகிறார்கள். "ஜெ.வின் சொத்துக்குவிப்பு வழக்கு, தமிழ்நாட்டில் நடந்தால் நியாயம் கிடைக்காது என்று தானே உச்சநீதிமன்றம் பெங்களூருக்கு மாற்றியது. இது ஒன்றே போதுமே சட்டத்தின் ஆட்சியைப் பற்றிய ஸாம்பிளுக்கு'' என்கிறார் தி.மு.க.வின் மூத்த பிரமுகர் ஒருவர். இது ஒரு பக்கம் இருக்க, பல ஆத்திக அமைப்புகளும், மடங்களும் தங்கள் கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்களின் கணக்கு வழக்குகளைச் சரிப் படுத்திக் கொள்வதில் பிஸியாகிவிட்டன. எல்லாம் ஒரு எச்சரிக்கை தான்!

• ஜெ.



• வாசன்





• கே.எஸ். ராதா கிருஷ்ணன்

எல்லாம் ஓர் எச்சரிக்கை தான்!


• 'வாசன் மத்திய அமைச்சராவார்' என்கிற எதிர்பார்ப்பு அவரது ஆதரவாளர்களிடையே நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இந்த நிலையில், சத்தியமூர்த்தி பவனில் அடுத்த தலைவர் பற்றி பேச ஆரம்பித்து விட்டார்கள். 'அம்பிகா சோனிக்கு சுதர்சன நாச்சியப்பன் ரொம்ப வேண்டியவர்; எனவே அவரே அடுத்த தலைவர்'' என்று பஜனை பாட ஒரு கோஷ்டி கிளம்பியிருக்கிறது.

• ஆலயங்களில் ஒரு கால பூஜை, அன்னதானத் திட்டம் போன்றவற்றைத் தொடர்ந்து, அம்மாவின் அருள்பார்வை மீண்டும் கோயில்களின் பக்கம் திரும்பியிருக்கிறது. கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து முழு வருவாய் கிடைக்கவும், கடைகள், வீடுகள் ஆகியவைகளிலிருந்து நிலுவை இல்லாமல் வாடகை வசூலிக்கவும், கடும் நடவடிக்கை எடுக்க இருக்கிறதாம் தமிழக அரசு. கோயில் பூசாரிகளுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டமும் பரிசீலனையில் இருக்கிறதாம். ஆலய நிர்வாகத்தில் 'இது ஒரு பொற்காலம்' என்று போற்றும் படியாக இருக்கப் போகிறதாம் தமிழக அரசின் செயல்பாடுகள்.

• ஒரு அ.இ.அ.தி.மு.க அமைச்சர் சொன்னது: 'பா.ம.கவும், ம.தி.மு.க.வுக்கும் அ.இ.அ.தி.மு.க கூட்டணிக்கு வர, ஜயேந்திரர் கைதுக்குப் பிறகு 'நல்ல சூழல்' உருவாகியிருக்கிறது!''

• ம.தி.மு.க., தி.மு.க.வில் செய்தித் தொடர்பாளராக இருந்து, இப்போது அ.தி.மு.க.வில் மௌனமாக இருக்கும் கே.எஸ். ராதா கிருஷ்ணன், டிசம்பர் மத்தியில் 'நிமிர வைக்கும் நெல்லை' என்ற புத்தகத்தை வெளியிடப் போகிறார். வெளியீட்டு விழாவுக்கு அவர் பல பழைய நண்பர்களை அழைத்திருக்கிறாராம். இது அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தும் என்கிறார்கள்.

- கௌசி





* நமது அணி

கபடி கபடி உலகக் கபடி!

உலகக் கோப்பை - கிரிக்கெட் போட்டிகளையும், கால் பந்துப் போட்டிகளையும் ஆர்வமாய் பார்த் திருப்பீர்கள். அண்மையில் முதன் முறையாக உலகக் கோப்பை கபடிப் போட்டி நடந்ததும், அதில் இந்தியா கோப்பை வென்றதும் உங்களுக்குத் தெரியுமா? மும்பைக்குச் சென்று, போட்டிகளைக் கண்டு வந்தார் சென்னை மாவட்ட கபடி சங்கத் தலைவரும், 'கபடி ஸ்டார்' என்ற பத்திரிகை நடத்தி வருபவருமான 'கோல்டு' ராஜேந்திரன். இதோ, உலகக் கோப்பை கபடிப் போட்டி யைப் பற்றிய சுவையான தகவல் களை நமக்குத் தருகிறார்.

"இங்கிலாந்து, ஜெர் மனி, ஈரான், மேற்கு இந் தியத் தீவுகள், இந்தியா உட்பட மொத்தம் பன்னிரண்டு நாடு களைச் சேர்ந்த அணிகள் கப டிப் போட்டியில் கலந்து கொண்டன. இந்தப் போட்டிகள் மும்பையில், நவம்பர் 19ம் தேதி முதல் மூன்று நாட்கள் நடைபெற்றன. இறுதிப் போட்டியில் ஈரானும், இந்தியாவும் மோதின. ஈரானைத் தோற்கடித்து கோப்பையை வென்ற இந்திய அணிக்கு, பரிசுத் தொகையாக இரண்டரை லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

போட்டியில் கலந்து கொள்ளவிருந்த பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அணிகள் கடைசி நேரத்தில் வர இயலாது என்று சொல்லி விட்டன.

சிறந்த ஆட்டக்காரருக்கான சிறப்புப் பரிசான ஐம்பதாயிரம் ரூபாயைப் பெற் றவர், இந்திய அணியின் கேப்டனான சஞ்சீவ குமார். தமிழ்நாட்டைச் சேர்ந்த கபடி வீரர் மணிகண்டன் இந்திய அணியில் இடம் பெறுவார் என எதிர் பார்க்கப்பட்டாலும், கடைசியில் அவ ருக்கு இடம் கிடைக்கவில்லை. அணியில் சேர்ந்து விளையாட தமிழ்நாடு கொடுத்து வைக்கவில்லை. ஆனாலும் தமிழ்நாட் டைச் சேர்ந்த நான்கு பேர் போட்டி நடுவர்களாகப் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தது.



* படம்: பாரதி

* ராஜேந்திரன்

வழக்கமாக கபடி ஆடும் களம் மணல் பரப்பப்பட்டதாகவே இருக்கும். ஆனாலும், அகில உலக கபடி விதிகளின் படி, EVA FOAM என்கிற ஒன்றே கால் அங்குல கனமுள்ள மெத்தை பரப்பப் பட்ட அரங்கில்தான் போட்டிகள் நடத் தப்பட்டன. இப்படிப்பட்ட களத்தில் ஆடும் போது, வீரர்களுக்கு காயம்பட வாய்ப்பில்லை.

இந்திய மாநிலங்களில் மகாராஷ் டிராவைத்தான் கபடியைப் பொறுத்த வரை முன்னோடி மாநிலம் என்று சொல்ல வேண்டும். காரணம், எஸ்.பி. சவான், சரத்பவார் தொடங்கி, மகாராஷ் டிர அரசியல் தலைவர்கள் பலர் கபடிப் பிரியர்கள் மட்டுமில்லை, முந்நாள் கபடி வீரர்களும் கூட!

அதனால்தான் தீவிர முயற்சி செய்து, மும்பையில் முதல் தடவையாக, உலகக் கோப்பை கபடிப் போட்டியை நடத் தினார்கள். சரத்பவார் உட்பட பல்வேறு தலைவர்களும் வந்திருந்து, கபடிப் போட்டிகளை ரசித்து மகிழ்ந்தனர்."

- எஸ். சந்திரமௌலி

'கோவிந்தன்' என்ற சத்தம் தசாவதாரங்களையும் குறிக்கும் என்று சொன்னேன். கோ என்று உயர்ந்த வஜ்ராயுதத்துக்குப் பெயர். அதை அடைவித்தவன் கோவிந்தன். வஜ்ராயுதத்தை இந்திரனுக்குக் கொடுத்தான் பகவான். அதனால் அவன் கோவிந்தன்.

வேதத்தில் வரும் மந்திரம் என்ன சொல்கிறது...? ததீசி மஹரிஷியைப் பற்றிச் சொல்கிறது. நாம் கர்ணனுடைய கொடையைப் பற்றிச் சொல்கிறோம். ததீசி என்ற மஹரிஷியும் கொடையில் மிகவும் சிறந்தவர்.

பூர்வகாலத்திலே இந்திரன் ரொம்ப சிரமப்பட்டான். அசுரர்கள் இந்திரனை அடித்தார்கள். அதனால் இந்திரன் ஓடி ஒளிந்தான். இதைப் பார்த்து பகவானுக்கு வருத்தமாயிருந்தது. அதிதி கஷ்டப்பட்டு அழுதாள்..

பகவான் என்ன பண்ணினான்... நாரதரைக் கூப்பிட்டு, "இந்திரன் இடத்திலே போய், ததீசியினுடைய முதுகெலும்பைக் கேட்கச் சொல்லும்" என்றான். "அவருடைய எலும்புக்கூட்டை எடுத்து வந்து விஸ்வகர்மாவினிடத்திலே கொடுத்து, வஜ்ராயுதத்தைத் தயார் பண்ணிக் கொள்ளச் சொல்லும். வஜ்ராயுதம் கையிலே இருந்தால் யாராலும் அவனை ஒன்றும் பண்ண முடியாது என்று சொல்லும்."


நாரதரும் இந்திரனிடத்திலே போய் இதைச் சொன்னார். இந்திரன் நேரே ததீசியினுடைய ஆசிரமத்துக்குப் போனான். அவர் தியானத்திலே இருந்தார். அவர் விழிக்கிற வரைக்கும் அவர் எதிரிலே உட்கார்ந்திருந்தான். அவர் கண் திறந்தவுடனேயே, "சுவாமி! உங்கள் முதுகெலும்பு வேண்டும்" என்று கேட்டான்!

'எலும்பைக் கொடு' என்றால் எங்கேயிருந்து கொடுப்பது! சால்வையைக் கேட்டால் கொடுத்துவிடலாம். 'மேல் வஸ்திரம் வேண்டும்' என்றால், நாம் போட்டுக் கொண்டிருப்பதைத் தந்துவிடலாம். 'எலும்புக்கூடு வேண்டும்' என்றால்...?

ததீசி நினைத்தார்: 'இது பகவத் சங்கல்பம்; லோகத்தினுடைய க்ஷேமத்துக்காகக் கேட்கிறான். பகவானால் பிரேரேபிக்கப்பட்டு வந்திருக்கிறான்.'

மஹா யோகியானதனாலே, ததீசி தன் ஆத்மாவைத் தாமே வெளிக் கிளப்பினார். சுஷும்னா நாடி வழியே அவர் வெளியே புறப்பட்டுப் போய்விட்டார். சரீரத்தை இந்திரனிடத்திலே ஒப்படைத்து விட்டார். இந்திரனும் விஸ்வகர்மாவைக் கொண்டு, ததீசி முனிவரின் முதுகெலும்பிலிருந்து





வஜ்ராயுதம் தயார் செய்வித்தான்.

வஜ்ரத்தை வஜ்ரத்தினால்தான் அடக்க முடியும். ஆகவே இந்திரனுக்கு வஜ்ரி என்று ஒரு பெயர் வந்தது. பகவானுக்கு எப்படி சக்ரி என்று ஒரு பெயரோ (சக்கரம் ஏந்தியவன் சக்ரி) அப்படி இந்திரனுக்கு வஜ்ரி என்று பெயர்.

வஜ்ராயுதத்துக்கு 'கோ' என்று பெயர். அதை அடைவித்ததனாலே பகவானுக்கு கோவிந்தன் என்று பெயர்.

குறையொன்றுமில்லை



எல்லை-வேலன்!

திருச்சியிலிருந்து 'கலைஞர் இன்டர்நேஷனல்' என்ற ஆங்கிலப் பத்திரிகை வந்து கொண்டிருந்தது. அதில் எல்லை வேலன் என்ற பெயரில் அடிக்கடி கலைஞரைப் போற்றி பாராட்டி கவிதைகள் வந்து கொண்டிருந்தன. இந்த எல்லை வேலன் பின்னாட்களில் பள்ளி கல்வி இயக்குனராக இருந்த கி.வேங்கடசுப்ரமணியம் தான். மற்றவர்களைப் பாராட்டுவதற்கு கொஞ்சமும் தயங்கமாட்டார் இவர். கலைஞரை வாழ்த்திய அதே சமயத்தில், இந்திரா, ராஜீவ் என்று காங்கிரஸ் தலைவர்களையும் ஆகா ஓகோ என்று பாராட்டிப் பேசியும் எழுதியும் இருக்கிறார். சமீபத்தில் மறைந்த கி.வே. பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகம் துவக்கப்பட்ட போது அதன் முதல் துணைவேந்தராக பொறுப்பேற்றார். இந்தப் பல்கலைக் கழகத்தின் நவீன இலக்கியத் துறை என்று துவங்கி இந்திரா பார்த்தசாரதி, கி.ராஜநாராயணன் போன்ற பிரபல நாவலாசிரியர்களைப் பொறுப்பில் அமர்த்தி அந்தத் துறைக்கு சிறப்பு சேர்த்தவர் கி.வே. நமது கல்வி முறை, செய்ய வேண்டிய மாற்றங்கள் ஆகியவை பற்றி பத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் எழுதி இருக்கிறார் கி.வே.

- ஸ்ரீநி

கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து, மாரி காத்து, அத்தனை பேரையும் ஏழு நாள் காத்த பிரான்... அத்தனை பேருக்கும் அன்ன சம்விருத்தி உண்டு பண்ணியவன்... அதனாலேயும் அவனுக்கு கோவிந்தன் என்று பெயர்.

ஆகையினாலே, பகவான் வாசுதேவனைக் குறிக்கிற கோவிந்த சத்தத்தை நாம் நினைத்தோமானால், தசாவதாரத்தையும் நினைத்த பலன் ஏற்படுகிறது.

தூங்கி விழிக்கிறபோது 'ஹரி', வெளியே போகிறபோது 'கேசவா', உணவு கொள்கிறபோது 'கோவிந்தா'... திரும்பவும் தூங்கப் போகிற சமயத்திலே, நாம் சொல்ல வேண்டிய திருநாமம்: 'மாதவா'

மஹாலக்ஷ்மியோடு கூடியிருக்கும்படியான நாராயணனை, மாதவ சத்தத்தினாலே வேதம் கொண்டாடுகிறது. அப்படிப்பட்ட மாதவனை தியானம் பண்ணிவிட்டுப் படுத்து உறங்கினால், துர்ச்சொப்பனங்கள் ஏற்படவே ஏற்படாது. நல்ல தூக்கம் வரும். ஆகவே மாதவ சத்தத்தைச் சொல்லிக் கொண்டே, அவனை தியானம் பண்ணியபடியே தூங்க வேண்டும்.

'தனித்து உட்கார்ந்து பகவான் நாமாவைச் சொல்ல அவகாசம் இல்லையானால், நித்யம் நாம் பண்ணக் கூடிய காரியத்தினூடே பகவான் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டிரு' என்று மகான்கள் நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு காரியத்திலேயும் அவன் திருநாமமானது நம் கூடவே இருக்க வேண்டும்.

மந்திரங்களிலே பார்த்தோமானால், உட்கார ஒரு மந்திரம், எழுந்திருக்க ஒரு மந்திரம், சாப்பிடுகிறபோது ஒரு மந்திரம், படுத்துக் கொள்வதற்கு ஒரு மந்திரம் என்று எல்லாவற்றுக்குமே மந்திரம் இருக்கிறது. ஆனால் மந்திரத்தைச் சொல்வதற்கு எல்லோருக்கும் அதிகாரமில்லை. ஆனால், பகவான் நாமா இருக்கிறதே... அதை யார் வேண்டுமானாலும் சொல்லலாம். மந்திரத்தைச் சொன்னால் என்ன பலன் ஏற்படுமோ, அதுவே பகவான் நாமாவைச் சொல்வதானாலே நமக்கு ஏற்படுகிறது.

எத்தனையோ திருநாமங்கள் பக

தீருபாய் அம்பானி இறந்த பிறகு அவரது மகன்களான முகேஷும், அனிலும் மோதிக் கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். காரணம், சொத்து... கொஞ்ச நஞ்சமான சொத்தல்ல. 50,000 கோடி ரூபாய் சொத்து.



அண்ணன் என்னடா? தம்பி என்னடா?

ரிலையன்ஸ் இன்ஃபோகாம் மொபைல் நிறுவனத்தில் அம்பானியின் பங்கு 25,000 கோடி; ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸில் 25,000 கோடி. உயில் எழுதாததால் அம்பானியின் சொத்து அவரது மனைவி, இரு மகள்கள், இரு மகன்கள் என ஐந்து பேருக்குப் பிரிக்கப்பட்டு அளிக்கப்பட வேண்டும்.

இந்திய அரசின் வருமானத்தில் 10% தரும் அம்பானியின் நிறுவனங்களின், அதிகாரம் யாருக்குரியது என்பதில் தான் போட்டி.

"என்ன ஆகும்?" - இந்திய பங்குச் சந்தை கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.

- வி., ஜி.எஸ்.எஸ்.

வானுக்கு 'பலபலவே ஆபரணம்... பேரும் பல பலவே!' என்கிறார் ஆழ்வார்.

அபரிமிதமான திவ்ய பூஷணங்கள், ஆபரணங்கள் பகவான் தரித்துக் கொண்டிருக்கிறான். அதே மாதிரி, அவன் திருநாமங்களும் அபரிமிதமானவை. அவன் திருநாமங்களுக்கு எண்ணிக்கை உண்டா என்றால், எண்ணிக்கையே இல்லை.

ஸஹஸ்ரநாமத்தில் வரக்கூடிய திருநாமங்கள் அனைத்தும் 'கௌனானி' - அதாவது குணப்ரயுக்தமான நாமாக்கள். பகவானுடைய திருக்கல்யாண குணங்களைச் சொல்லக் கூடிய நாமாக்கள் இவையெல்லாம்.

கௌனம் என்றால் பல பொருள் உண்டு - கௌனம் என்றால், 'முக்கியம் இல்லை' என்று ஒரு அர்த்தம்! அமுக்கியத்தை கௌனம் என்று சொல்வதுண்டு. ஆனால் இந்த இடத்திலே கௌனம் என்ற சத்தத்துக்கு, குணத்தைக் காட்டக்கூடிய திருநாமம் என்று அர்த்தம்.

சிறிய கண்ணாடி, பெரிய உருவைக் காட்டுமா போலவே, அந்த எம்பெருமானுடைய பெருமைகளையெல்லாம், விசேஷமாக இந்த சின்னச்சின்ன திருநாமங்களே காட்டுகின்றன.

அந்தத் திருநாமங்களையும் எண்ண முடியாது; அவனுடைய திருக்கல்யாண குணங்களையும் எண்ண முடியாது; பகவானுடைய தோஷங்களையும் எண்ண முடியாது!

'பகவானிடத்திலே தோஷம் இருக்குமா?' என்று நமக்குச் சந்தேகம் வரும்.

ஆள முடியாதது - அதற்கொரு முடிவே இல்லை என்பதனாலே, எண்ணிப் பார்த்து அவனிடத்திலே எத்தனை குணங்கள் இருக்கின்றன என்று அறிய முடியாததனாலே - அவனிடத்தில் எத்தனை குணங்கள் உள்ளன என்று யாருக்குத் தெரியும்?

ஆகவே குணங்கள் எண்ணிலடங்காதவை. தோஷங்கள் என்று இருந்தால் தானே அவற்றை 'ஒண்ணு, இரண்டு' என்று எண்ண முடியும்!... தோஷங்களே இல்லாததால், அவன் தோஷங்களையும் எண்ண முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது!

(வளரும்)


கல்கி
அடுத்த இதழ்...
உங்கள் இதயங்களை
மீட்ட வரும்
இசைச்
சிறப்பிதழ்


சீதா ரவி
எழுதும்
குயில்
தோட்டம்
மினியிசை
தொடர் கதை ஆரம்பம்

கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
கல்கி இணைவில் ஒரு மின்னல்!
(சென்னை வாசகர்களுக்கு மட்டும்)

8 பக்கங்கள் 5 ~~நவம்பர்~~ 2004 இதழுடன் இலவச இணைப்பு



சென்னையின் பிரபல பள்ளியான பத்மா சேஷாத்ரி பால பவனின் முதல்வர் ராஷ்மி பார்த்தசாரதியின் பிறந்தநாள் விழா, நுங்கம்பாக்கம் கிளையில் கொண்டாடப்பட்டது. ஒய்.ஜி.பி ஆடிட்டோரியத்தில், கப்பு ஆறுமுகத்தின் வில்லுப் பாட்டும், ராண்டார் கையின் 'அன்றைய சினிமா இன்றைய சினிமா' பற்றிய மதிப்பீடும் நடைபெற்றது. பெருந்திரளான பள்ளி மாணவர்கள், ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள் முன்னிலையில் தமிழ் சினிமாவைப் பற்றி விலாவாரியாக ஆங்கிலத்தில் (ஆங்காங்கே தமிழில்) பேசிய ராண்டார் கை, இன்றைய சினிமா ஆபாசப் பாதையில் செல்வதாகக் குற்றம் சாட்டினார்.

"பக்கத்து சீட்டில் பாட்டி உட்கார்ந்தா டேக் இட் ஈஸி பாலிசி என்று பாடல் எழுதுகிறார்கள். ஆனால் பாட்டிகள் எவ்வளவு ரொமான்டிக் கானவர்கள் தெரியுமா? எனக்கு அதில் அனுபவங்கள் உண்டு" என்று குதூகலித்துப் பேச, பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு "அந்தக் காலத்தில் முதலிரவுக் காட்சிகள் நாயகனும் நாயகியும் கட்டிலில் உட்கார்வதோடு முடிந்து விடும். இன்று ஹீரோ மிக ஆர்வமாக செம்புடன் உள்ளே நுழையும் ஹீரோயின் வரவை வழிமேல் விழி வைத்து பார்த்துக் கொண்டிருக்கிறான். (என்றபடி விவரிக்க ஆரம்பித்தபோது மாணவ மாணவிகள் தலை குனிந்து கொண்டனர்) இதிலுள்ள ஆச்சர்யம், யார் உடை குறைந்து காணப்பட வேண்டுமோ அவர்கள் முழு உடையோடு இருப்பார்கள். ஆனால் தனிமையிலிருக்கும் அவர்கள் இருக்கும் அறையில் திடீரென 80 குரூப் டான்சர்கள் நுழைந்து அரைகுறை ஆடையோடு ஆடுகிறார்கள்..." என்று மீண்டும் குதூகலித்தார். "அருகில் வள்ளுவர் கோட்டம் இருக்கிறது. ஆனால் இன்றைய தமிழ் சினிமாக்கள் தொப்புள் கோட்டமாக மாறியிருக்கிறது' என்று பலமுறை தொப்புள் என்கிற வார்த்தையை தனது பேச்சில் உதிர்த்தார் ராண்டார். முடிவாகப் பேசிய மாணவியும் "நாங்கள் தொப்புள் ஆர்டிஸ்ட்களை ஆதரிக்க மாட்டோம்" என்று இரு முறை கூற இந்த வார்த்தைப் பிரயோகத்தை சிலாகித்தார் பள்ளி முதல்வர். "ஒரு பள்ளி விழாவிலேயே இத்தனை விஷயங்கள் அரங்கேறும்போது, 'A' சான்றிதழ் பெற்ற சினிமாவில் இதெல்லாம் இடம் பெற்றால் என்ன?" என்ற கேள்வியை நம்மிடம் எழுப்பினார் விழாவுக்கு வந்திருந்த திரையுலகப் பிரமுகர் ஒருவர்.

✍ எழில்

To மயிலை, வித் லவ்...

ஹாய் சென்னை, நாங்க ஏற்கெனவே சொன்ன மாதிரி, அடுத்த இதழ் அண்ணாநகர் ஸ்பெஷலா மலரப்போகுது. அப்பப்பா, நாங்க எதிர்பார்த்ததைவிட அண்ணாநகரிலிருந்து எக்கச்சக்கமான ரெஸ்பான்ஸ். இதோ 19.12.04 இதழ் மயிலாப்பூர் ஸ்பெஷல். என்ன ரெடியாயிட்டீங்களா? மயிலாப்பூர் மற்றும் அதை சுற்றியுள்ள ஏரியாவோட பிரச்சினைகள், சாதனையாளர்கள், விழாக்கள், டேஸ்ட்காம், உங்க படைப்புகள் எதையும் டிசம்பர் 8ம் தேதிக்குள் எங்களுக்கு தட்டி விடுங்க. உங்களை நேரில் பார்க்க நாங்களும் தயாராயிட்டோம்.

- வஜ்ஜாவதி

முகவரி: சென்னை ஸ்கேன், 47-NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032. ஃபோன்: 22345622, 23, 24.
E-mail:chennaiscan@kalkiweekly.com,
chennaiscan@indiatimes.com

என் சிறு வயதில் எங்கள் வீடு மடிப்பாக்கத்திலிருந்தது. அந்த பிள்ளைப் பருவத்தில் ஆறு மாதத்திற்கொருமுறைதான் அப்பா பீச்சுக்கு கூட்டி வருவார். அதன்பின் குயின் மேரிஸில் படிக்கும் பொழுது, விடுவேனா, அனுதினமும் என் தோழி கடலையை ஆரத் தழுவாமல் இருக்க மாட்டேன்.

அன்று சாலிகிராமத்தில் ஷூட்டிங் முடித்து கருணாஸ், காரில் என்னை வீட்டில் கொண்டு விடாமல், நேராக பீச்சுக்கு அழைத்துச் சென்றார். பதறும் என்னைச் சமாதானப்படுத்தினார். பீச்சில் ஆங்காங்கே காதலர்கள், நாங்கள் ஒருவர் மட்டுமே நண்பர்கள். நேராக விஷயத்திற்கு வருகிறார். "உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. பயப்படாதே. நீ காதலிக்காவிட்டால் நான் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன். ஆனாலும், என் விருப்பம் இதுதான்" என்கிறார். அன்று கடலையின் ஓசை, "ஏய்.. சுமன்யா, ஓகே சொல்லிவிடு" என்பது போல் பிரமை. மணலை உதறி விட்டு எழுந்தேன். ஆனால் கருணாஸின் காதலை அல்ல!

அடுத்த முறை மெரினாவிற்கு காதலர்களாய் வந்தோம். அதன் பின் தம்பதிகளாய். இன்றைக்கும் மன ஆறுதலுக்கு நான் தேர்ந்தெடுப்பது அந்த அழகிய கடற்கரையைத்தான். பின்னே என் தோழியல்லவா!

✍ செந்தில்



சி.ஐ.பி

இன்றைக்கும் கே.பி.தான் வேண்டுமா?

- பாரதி பாஸ்கர்



தமிழகத்திலுள்ள அரிதான பெண் பேச்சாளர்களில் பாரதி பாஸ்கரும் ஒருவர். பல பட்டிமன்றங்களில், பல வழக்காடு மன்றங்களில் தன் இனிமையான தமிழால் காதை நனைக்கும் திறன் கொண்டவரை சி.ஐ.பி. பகுதிக்காகச் சந்தித்தோம்.

அண்ணா யூனிவர்சிட்டியில் பி.டெக், எம்.பி.ஏ முடித்த நீங்கள் பட்டிமன்றப் பேச்சாளராக உருவெடுத்தது பற்றி?

என் பின்னணியைக் கேள்விப்படுகிறவர்கள் அத்தனை பேரும் இதேபோல ஆச்சர்யப்படுவார்கள். சிறு வயதில் என் இரு சகோதரிகளையும் கம்பன் கழக விழாவில் தமிழில் இடி முழக்கமிட்டுப் பார்த்து, எனக்குள் நானாக பேசும் திறமையை வளர்த்துக் கொண்டேன். பட்டிமன்றங்களில் பேசும் திறமையினால்தான் எனக்கு சிட்டி பேங்கில் வேலையே கிடைத்தது தெரியுமா!

சிட்டிபேங்க் - பட்டிமன்றம்... எப்படி?

நேர்காணல் இறுதிச்சுற்றின் பொழுது ஒரு பெரிய அதிகாரி எனது அப்ளிகேஷனிலுள்ள இதர ஆர்வம் பகுதியில், தமிழில் வழக்காடுதல் என்று குறிப்பிட்டிருந்ததைப் பார்த்து கேள்வியெழுப்பினார். பட்டிமன்றம் பற்றி எடுத்துக் கூறியபொழுது, உடனே வலை குடாப் போவைப் பற்றி ஆதரித்தும் எதிர்த்தும் இரு நிமிடங்களுக்கு பேசச் சொல்ல, நான் அதேபோல் படபடவென உடனே பொரிந்து தள்ள, என் பேச்சுத் திறமையை வியந்து என்னைத் தேர்வு செய்துவிட்டார்.

பட்டிமன்றங்கள் வேறு எந்த மொழிகளிலாவது உள்ளதா?

கிடையவே கிடையாது. தமிழைத் தவிர வேறெந்த மொழிகளிலும் இப்படி ஒரு தலைப்பை ஆதரித்தும், உடனடியாக எதிர்த்தும் பேசும்படியான பட்டிமன்றங்கள் இல்லாதது, நமக்குப் பெருமையான விஷயம். சமீபத்தில் அரபு நாடுகளில் பட்டிமன்றம் நடந்தபோது, 'சினிமாவும் கிடையாது. இசை நிகழ்ச்சியோ அல்லது கிரிக்கெட் மேட்ச்சோ எதுவுமில்லை. அதெப்படி ஆறேழு பேர் பேசுவதை மக்கள் கேட்கிறார்கள்' என்று சுல்தான் நாட்டின் மன்னர் மிகவும் ஆச்சர்யப்பட்டுப் போனார்.

பேச்சாளர்கள் ஒரு வரையொருவர் தாக்கிக் கொள்கிறீர்களே!

பட்டிமன்றங்களில் அநேகமாக ஆயிரம் பேர் முன்னால் ஒருவரையொருவர் கிண்டலடித்துக் கொண்டாலும், அந் நிகழ்ச்சி முடிந்தபிறகு அவர்கள் நட்பில் எந்தவொரு பாதகமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வார்கள். ஆனாலும் பேச்சாளர்கள் தங்கள் மனைவியை வைத்துக் கிண்டல் செய்துகொள்வது தவறான ஒன்றுதான்.

பெரும்பாலான பட்டிமன்றங்கள் பாட்டி, தாத்தா மன்றங்களாகவே இருக்கின்றன. இளைஞர்கள் தென்படுவதில்லையே...

இந்த மனக்குறை எங்களிடமும் உள்ளது. பட்டிமன்றம் என்பது ஒரு நிகழ்ச்சியாக மட்டுமில்லாமல், பேசும் திறமையை, கம்யூனிகேஷன் ஸ்கில்லை வளர்க்கும் ஒரு கலையாகும். எதிராளியிடமிருந்து பறந்து வரும் அம்பை திருப்பி வீசக் கற்றுத் தரும். ஆனால் ஆங்கிலப் பள்ளிகளில் படிப்பதால் தமிழில் பேசும் திறமையை இழந்து விடுகின்றனர். இன்னும் முப்பது நாற்பது வருடங்களில் இனி மெல்ல தமிழ் சாகும் என்ற நிலை வந்து விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது.

நீங்கள் சொன்னதில் ரசித்தது...

'ஆண் - பெண் நட்பு தேவையா?' என்கிற தலைப்பில் ராஜா பேசும் பொழுது, அந்தக் காலத்தில் நமது பாட்டி, தாத்தாவெல்லாம் நட்போடு இருக்கவில்லையே இதனால் என்ன குறைந்து போனார்கள் என்கிற ரீதியில் பேசிவிட்டுப் போனார். நான் பேச வந்த பொழுது, துரியோதனன் மனைவி பானுமதியும் கர்ணனும் சொக்கட்டான் விளையாடியபோது, துரியோதனன் வர, அப்பொழுது 'தெறித்த முத்துகளை' எடுக்கவா, கோக்கவா' என்றானாம் துரியோதனன். ஆக அந்தக் காலத்திலேயே ஆண் - பெண் நட்பை ஆரோக்கியமாக எடுத்துக் கொள்வது அந்தக் கால ராஜாக்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் இந்தக் கால ராஜாக்களுக்கு தெரியவில்லையே என்றதுதான் தாமதம், அரங்கம் ஆர்ப்பரித்துச் சிரித்தது.

இடைவட்டாக்கள் பற்றியும் ஆபாச சினிமா பற்றியும் என்ன சொல்கிறீர்கள்?

எந்தவொரு கலையும் மக்களின் ரசனையை மேம்படுத்த வேண்டும். டீவிக்களில் டி.ஆர்.பி ரேட்டிங்கை நம்புவது எந்தளவுக்கு சாத்தியமென்று தெரியவில்லை. 24 மணி நேரமும் சினிமா அல்லது சீரியல்கள், வன்முறை, அழுகை என திகட்டிப் போகின்றன. ஆனால் பாலசந்தர் சீரியல்கள் வித்தியாசமாக இருப்பதைப் பார்க்கும் பொழுது, இன்றைக்கும் புதுமையைப் புகுத்த வேண்டுமானால் பாலசந்தர்தான் வர வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.

'நியூ' படத்தைப் பார்த்தபோது அதன் ஆபாச வசனங்கள் அதிர்ச்சியாக இருந்தன. விவரம் தெரியாமல் இளைஞர்கள் கொடுக்கும் ஆதரவு ஒரு வெற்றியே அல்ல. ஒரு படைப்பாளியாய் சினிமாவில் இருக்க வேண்டியவர்கள், வியாபாரிகளாய் மாறிப் போனது நம் துரதிர்ஷ்டம்.

இந்த தலைமுறையில் பிறந்திருக்கலாம் என்றெண்ணுவீர்களா!

ஓரளவு. காரணம் முன்னேறுவதற்கு இன்றைக்கு நிறைய ஸ்கோப் உள்ளது. ஆனாலும் வருத்தமெல்லாம் கிடையாது. காரணம், இன்று நான் பிறந்திருந்தால் இதற்கு முன் என் வாழ்வில் சந்தித்த பல அற்புதமான மனிதர்களை இழந்திருப்பேனே.

ஜி + ✍ ச.நா.கண்ணன்



இந்தியாவில் சுற்றிப் பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கு. ஆனா அதைியெல்லாம் போய்ப் பார்க்கணும்னா, அதைப் பத்தியெல்லாம் முழுசாத் தெரிஞ்ச, எல்லா வசதிகளோடும் கூடிய டிராவல்ஸ் அமையணுமே என இனி ஏங்க வேண்டாங்க. நம்ம பாலின் டிராவல்ஸ் விதவிதமான சுற்றுலா பேக்கேஜ்களை அறிமுகப்படுத்தியிருக்காங்க. குறிப்பா நம்ம சென்னையை முழுசா சுத்திக் கட்ட, மகாபலிபுரம், திருப்பதி, பாண்டிச்சேரி, கொடைக்கானலுக்கு ஜாலியாப் போக பக்காவா பிளான் போட்டு வச்சிருக்காங்க. அதற்கான பயணத்தொகையும் ரொம்ப அதிகமில்லை. என்ன ரெடியா? உடனே போன்: 26444621, 26471134

✍ முராரி

"நாக்கை அடக்குங்கப்பு!"

போன வாரம் நானும் என்னோட தோழியும் திருவான்மியூரிலிருந்து வேளச்சேரி வரைக்கும் M-Service பஸ் ஒன்னுல போனோம். அப்போ ஒரு காலேஜ்ல படிக்கிற பொண்ணு அந்த பஸ்ல ஏறிச்சு. ஆனா, M-Service பஸ்ல இலவச பஸ் பாஸுக்கு அனுமதி கிடையாதாமே. பஸ்ஸுக்குள்ள ஏறின கண்டக்டர் நேரா அந்தப் பொண்ணுகிட்ட போயி, 'இந்தா ஒன் ரொக்கி, போ, ஒனி பஸ்ஸில யாராவது இட்டுகினு போவான். இந்த பஸ்லேருந்து இறங்கு தொலை'ன்னு நாக்குலே நரம்பே இல்லாம சிடுசிடுன்னு பேசிட்டாரு. அந்தப் பொண்ணு அப்படியே கூனிக்குறுகி, தலையைக் கவுத்துகிட்டு இறங்கிப் போச்சு. உண்மையிலேயே அந்தப் பொண்ணு மேல தப்பு இருந்தாலும், 'ரொக்கி ஒன்'ணு பேசினது ரொம்ப ஓவர்தானே! இனிமேலாவது கண்டக்டர் நாக்கை அடக்கி வச்சிக்கோங்கன்னு மனதார வேண்டுகோள் விடுக்கிறேன்!

✍ கலை



• ரெட்ஹில்ஸ் ஏரி (பழைய படம்)



• வி. தங்கவேலு

இப்போ ஒரு பொருளை மார்க்கெட்ல எடுபட வைக்கணும்னா, அது கூட ஏதாவது ஒரு பொருளை இலவசமாத் தரணும். அதையும் தாண்டி விற்பனைல 'பெஸ்ட் கண்ணா'ன்னு பேர் எடுக்கணும்னா, ஒரு சுலபமான வழியை நாங்க சொல்லித் தர்றோம். அந்தப் பொருளோட ஒரு பாட்டில் தண்ணியையும் சேர்த்து ஃப்ரீயா கொடுங்க - சும்மா வியாபாரம் பிச்சிக்கிட்டுப் போகும். குறிப்பா சென்னைல. அந்த அளவுக்குத் தண்ணீர்ப் பஞ்சம் தலைகால் புரியாமப் போயிட்டிருக்கு. இதைத் தீர்க்கறதுக்கு அரசாங்கமும் மூளையைக் கசக்கி தெலுங்கு கங்கை திட்டம், கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், புதிய வீராணம் திட்டம்னு ஒன்னு ஒண்ணா கொண்டு வந்துட்டே இருக்கு. ஆனாலும் இந்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு மட்டும் கிடைக்கவே மாட்டேன்னு அடம் பிடிக்குது. இதுக்குக் காரணம்தான் என்னன்னு சில துறை சார்ந்த அதிகாரிகள்கிட்ட பேசினோம்.

இப்போது சென்னைக்கு மிக முக்கிய நீர் ஆதாரமாக இருப்பவை பூண்டி ஏரி, சோழவரம் ஏரி, ரெட்ஹில்ஸ் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி மற்றும் வீராணம் ஏரின்னு ஐந்தே ஏரிகள்தான். அதிலும் ரொம்ப உபயோகமா இருப்பது ரெட்ஹில்ஸ் ஏரியும், வீராணம் ஏரியும்தான். சமீபத்து பருவ மழை எல்லா ஏரிகளையும் கொஞ்சுண்டு நிரப்பி விட்டனவாம். அப்படி இருந்தும் ஏன் தண்ணீர் பற்றி அதிகாரிகள் மட்டத்திலும் சரி, பொது மக்கள் மட்டத்திலும் சரி - ஒரு பயம் இருக்கிறதே என்றால், "பல ஏரிகள் நிரம்பினாலும் அவை முழுமையாகத் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. அதன் காரணமாக, அதில் தேங்கிய தண்ணீரானது சிறிது சிறிதாக வெளியேறி விடுகிறது. ஒருவேளை இவையெல்லாம் சரியான நேரத்தில் முறையாகத் தூர்வாரப்பட்டிருந்தால் எதற்கும் அஞ்ச வேண்டியிருக்காது" என்றார் அதிகாரி ஒருவர். "ஏன் தூர் வாரியிருக்க வேண்டியதுதானே" என்றால், "தூர் வாருவது என்பது ஒன்றும் நீங்கள் சர்வ சாதாரணமாகப் பேசுவது- எண்ணுவது போல சாதாரண விஷயமல்ல. ஏதோ ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஆழப்படுத்துவது மட்டும் தூர்வாரி விட்டதாக ஆகிவிடாது. உண்மையில் அதற்கான வாய்ப்பு வசதிகளைப் பார்த்து, நிதி ஆதாரத்தைப் பார்த்து, நன்கு திட்டமிட்டுச் செய்ய வேண்டும். இதையெல்லாம் முறையாகச் செய்து முடித்த பின்னர் மழை வந்தால்தான் ஆச்சு. இல்லையென்றால் அரசுப் பணத்தை விரயமாக்கி விட்டதாக வீண் குற்றச் சாட்டுகள்தான் சுமத்தப்படும்" என்கிறார் சூடாக.

"ஏரிகளைத்தான் தூர் வார முடியவில்லை. சரி, மழை நீரானது யாருக்கும் பயன்படாமல் கடலுக்குச் சென்று கலப்பதையாவது தடுக்க யோசனை ஏதும் சொல்ல முடியுமா?" என்று கேட்டதற்கு,

"சென்னைக்கு மிக அருகில் இருக்குற கும்மிடிப்பூண்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தேவைக்கு அதிகமாக மழை பெய்து நீரானது வீணாகக் கடலுக்குச் சென்று விடுகிறது. இதனைத் தேக்கி, பைப்புகள் மூலம் சோழவரம் ஏரிக்குக் கொண்டு சென்று சேர்க்கலாம். ஆந்திர மாநிலத்தை ஒட்டியுள்ள பகுதிகளான முக்கரம்பாக்கம், பூவலம்பட்டு கிராமங்கள் வழியாக, பழவேற்காடு கடலில் கலக்கும் மழைநீரை சோழவரம் ஏரிக்கு கால்வாய் மூலம் கொண்டு வரலாம். இங்கேயே பார்த்தால் அடையாறில் தண்ணீரானது பெருமளவில் தேங்குகிறது. இதுவும் மழைநீர்தான். இதையும் மேற்கூறிய முறைகளில் பயன்படுத்தலாம். தூர் வார முடியாவிட்டாலும், தேவையான இடங்களில் தடுப்பணைகளைக் கட்டி, இணைப்புக் கால்வாய்கள் வெட்டினாலே இதற்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட வாய்ப்புண்டு. பருவ மழை பொய்க்காத பட்சத்தில்" என்று பீதியூட்டி முடித்தார் அந்த ஓய்வுபெற்ற மூத்த அதிகாரி.

இவ்வளவு விவகாரம் இருந்தாலும் சென்னை மக்களின் தாகத்தைத் தற்போது ஓரளவுக்கேனும் தீர்த்து வரும் புதிய வீராணம் திட்டம் பற்றி 'மெட்ரோ வாட்டர்' வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் வி. தங்கவேலுவிடம் கேட்டோம்.

"வீராணத்தில் தண்ணீரே இல்லாத நிலை இருந்தால், 45 ஆழ்துளை கிணறுகளை அமைத்து அவற்றில் முப்பதிலிருந்து ஏழரைக் கோடி லிட்டர் தண்ணீர் எடுத்தோம். தற்பொழுது சென்னை மக்களுக்கு மெட்ரோ வாட்டர் மூலம் விநியோகிக்கும் தண்ணீரில், வீராணத்தின் பங்கு 72 சதவிகிதம் ஆகும். இத் தண்ணீரை பதினாறு பிரதான பம்பிங்ஸ்டேஷன்கள் மற்றும் ஒன்பது சிறிய ஸ்டேஷன்கள் மூலமாக விநியோகிக்கிறோம். இத் திட்டம் மட்டும் மின்னல் வேகத்தில் நடந்து முடிந்திருக்காவிட்டால், சென்னையைக் காப்பாற்றியிருக்க முடியுமா என்பது சந்தேகம் தான்."

"புதிய வீராணம் திட்டம் வெற்றி என்று நீங்கள் கூறினாலும், குழாய்களில் ஏற்பட்ட லீக்கேஜ்கள் ஏற்பட்டு தண்ணீர் வீணாகிறதே" என்றோம் அதிமுக கவுன்சிலர் பி. வெற்றிவேலிடம். "இத்திட்டம் நீண்ட காலமாகக் கிடப்பிலேயே இருந்தது. அதுமட்டுமின்றி திமுக ஆட்சிக்காலத்தில் பழைய லைன்களை எடுத்து விட்டு, புதிய லைன்களைப் போட்டனர். அதில் ஏற்பட்ட குறைபாடுகளால்தான் இப் பிரச்னை. இருந்தாலும் தற்போது லீகேஜ் எல்லாம் முடிந்து, ஏறக்குறைய 95 சதவிகிதம் குறைபாடின்றி இத்திட்டம் வெற்றிகரமாக மக்களைச் சென்றடைந்து வருது" என்றார்.

📷 ராஜன் ✍ முத்துக்குமார்

✉ **காதல் டாக்டர் சிவாவின் ஃபீஸ் வாங்காத கன்சல்டேஷன் கூப்பன்.**

- பாண்டியன், ஆழ்வார் திருநகர்

✉ **"லஜ்ஜாவதி தான் ஒரு ஆல்ரவுண்டர் என்று நிரூபித்துவிட்டார். அது சரி, அவங்க ஏதாவது டான்ஸ் கிளாஸ் எடுக்கறாங்களான்னு சொல்லுங்களேன்.**

- வினோத், தாம்பரம்

✉ **பவானிதேவி, கார்த்திகா - தமிழ்நாட்டின் உறையிலுள்ள இரு கத்திகள். ஜொலி ஜொலிக்கட்டும் அவர்கள்.**

- சுடர்விழி, ராயபுரம்



உங்கள் கருத்துக்களை chennaiscan@kalkiweekly.comல் மெயிலலாம்.

"உதித் நாராயணன் தேவையில்லை"



வோட்டுப் போட வயது வரும் முன்பே தமிழ் சினிமாவின் இசையமைப்பாளராகிவிட்டார் இமான். விஜய் - ப்ரியங்கா சோப்ரா, ஜீவ் என்ற கூட்டணியோடு கலர்ஃபுல்லாக 'தமிழன்' படத்தில் அறிமுகமானவர். பின்னர் 'அழகிய அசுரா' (விசில்) மூலம் அறியப்பட்டார். இன்று 'கிரி' பாடல்கள் சுமாரியமாக ஹிட். அந்த சந்தோஷத்தில் திளைத்துக் கொண்டிருந்தவர் நம்மிடம் மனம் திறந்து பேசினார்.

'**த**மிழன்' பாடல்கள் எல்லாம் ஹிட்டானாலும் தனித்துவமாக ஒரு பாடலும் பெரிய அளவில் பேசப்படவில்லை! 'விசில்' அழகிய அசுரா பத்தி சொல்லவே வேண்டாம். எல்லா பாடல்களிலிருந்தும் தனித்து நின்று வெற்றி பெற்றது. இந்தப் பாடலை பெண்டாமிடியாவைச் சேர்ந்த அனிதா சந்திரசேகர் பாடினது அவங்க வித்தியாசமான குரலுக்காகத்தான்.

சுந்தர் சி.யுடன் 'தகதிமிதா' படத்திற்காக ஒன்பது பாடல்கள் அமைத்து கொடுத்த பொழுது அதில் இம்ப்ரான் ஆகி கிரி வாய்ப்பு கொடுத்தார். கம்போஸிங் உட்காரும் போதே மெலடி எதுவுமில்லாமல் ஃபாஸ்ட் பீட்டில் பாடல் அமைக்க வேண்டும் என்று முடிவு எடுத்தோம். அதன்படி இன்று 'கிரி' பாடல்கள் ரசிகர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

நான் இசையமைத்ததில் பெரும்பாலானது 'தட தட' பாடல்கள் தான். அழகிய அசுரா கூட ரெண்டும் கெட்டானாக மெலடி, பீட் இரண்டும் நிறைந்தது.

இன்று தமிழ் சினிமாவில் பாடும் பாடகர்களில் முக்கால் வாசிப்பேர் மலையாளிகள்தான். ஆனாலும் அவர்கள் மொழி சுத்தமாகப் பாடுகிறார்கள். தமிழை கொலை செய்யும் உதித் நாராயணனை இதுவரை நான் பயன்படுத்தியதில்லை. இனியும் பயன்படுத்த மாட்டேன். (அடடே!) அவர் பாடினால்தான் பாடல்கள் ஹிட்டாகும் என்பதெல்லாம் தங்கள் இசைமீது நம்பிக்கையில்லாதவர்கள் சொல்வது. '7G ரெயின்போ காலனி' பாடல்கள் ஒன்றைக் கூட உதித் நாராயணன் பாடவில்லை. அந்தப் பாடல்கள் ஹிட்டாகாமலா போனது?

பாடல் ஆசிரியர், பாடகர்கள் பாட்டுமில்லாமல் இசையமைப்பாளர்கள் எப்படி இசையமைக்க வேண்டும், எந்த இசை உபகரணங்களை கொண்டு பிஜிஎம் பண்ண வேண்டும் என்பதைக் கூட டைரக்டரும் தயாரிப்பாளர்களும் தான் இன்று முடிவு செய்கிறார்கள்.

கூடவே சென்னை சில்க்ஸ், போத்தீஸ், ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ் போன்ற விளம்பரங்களுக்கும் மறுபக்கம் இசையமைத்துக் கொண்டிருக்கிறேன்.

தற்பொழுது ஆறு படங்களுக்கு மேல் இசையமைத்துக் கொண்டிருக்கிறேன். எனக்குப் பெரிய படங்கள் வராததற்கு வருத்தமே கிடையாது. என்னை ஏற்றிவிட தந்தையோ, பின்புலமோ எதுவும் கிடையாது. இந்த 21 வயதில் தெளிவாக இருக்கிறேன். என் திறமைக்கான பலன் நிச்சயம் கிடைக்கும்.

✍ ச.ந.கண்ணன்





ஜப்பானிய மேளங்கள்! ஷோம்யோ தாளங்கள்!

'**ஜ**ப்பானிய சித்திர எழுத்துகளைப் போலவே ஜப்பானிய இசையும் அழகானதுதான்' என்று உணர்த்தினார் தகாடா மிடோரி.

சென்னைக்கு வந்திருந்த ஜப்பானிய மேளங்கள் இவர் கை பட்டதும் உற்சாகமாக அதிரத் தொடங்கின.

9ஆம் நூற்றாண்டில் சீனாவிலிருந்து புறப்பட்டு ஜப்பான் கதவுகளைத் தட்டிய ஒரு முக்கிய இசை வடிவம் 'ஷோம்யோ.' பின்னர் 19ஆம் நூற்றாண்டில் இது திடீரென்று மறைந்து போய், இரண்டாம் உலகப் போரின் முடிவிற்கு பின்பே உயிர் பெற்றது. பின்னர், அங்குள்ள புத்த விஹாரைகளில் இந்த இசை, இறை வழிபாட்டோடு சேர்த்து இணைக்கப்பட்டது.

இந்த வடிவம் சொல்லும் சேதி இதுதான். 'ஓசைகளைப் புரிந்து கொள்வதன் மூலம்தான் நிசப்தத்தைப் புரிந்து கொள்ள முடியும்.'

தகாடா சென்னைக்கு ஷோம்யோவை அறிமுகப்படுத்தினார். விசித்திரமாகத் தான் இருந்தது இதன் வடிவம்.

முதலில் நமது தலையை, தாடையை, கால்களைத் தட்டித் தட்டி ஒலியெழுப்புகிறார் தகாடா. பின்பு நமது வாயினால் சில விநோத சத்தங்களை எழுப்புகிறார். பின், அங்கிகள் அணிந்த நான்கு புத்த பிட்சுகள், தாங்கள் கொண்டு வந்திருந்த ஏடுகளிலிருந்து சில குறிப்புகளை வாசிக்கிறார்கள்.

தகாடா சிறு சிறு ஒலிகளை அவ்வப்போது மிருதுவாய் உருவாக்குகிறார். தொங்க விடப்பட்ட தாம்பாளத் தட்டுகளின் ஓசையாய் ஒரு இரும்பு. குட்டிக் குட்டி வெண்கல வாத்தியங்களின் மீது மெல்லிதாய் சில உரசல்கள். இடையிடையே சிறிய மணிகளின் ஓசைகள். இவ்வளவு தான் மொத்த இசையும்.


ஷோம்யோவின் வடிவத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், கேட்பதற்குச் சுகமாகவே இருந்தது. ஒருவேளை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாததால்தான் சுகமாக இருந்ததோ என்னவோ!

இது தவிர, கம்பீரமாக ஒலிக்கும் பெரிய மேளங்களும் இருந்தன. சதுர வடிவில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு மாக்கட்டை, இதுவரைக்கும் கேட்டிராத சில ஒலிகளை உருவாக்குகிறது.

சிறிது இமைகளை மூடினால் தகாடாவும் பெரிய பெரிய தாளக் கருவிகளும், சிவகாமி பெத்தாச்சி அரங்கமும், பார்வையாளர்களும் எங்கோ மறைந்து போகிறார்கள்.

அன்று ஜப்பானிய இசைக் குறிப்புகளுக்கிடையே ஒளிந்து கொண்டிருந்தது சென்னையின் நிசப்தம்.

✍ மன்மதன்



ஆதங்கம்

எங்களை விளம்பரங்களுக்கு அழைப்பதில்லை!



பொதுவாக எந்த விளையாட்டிலும் பெண்களுக்கு கிடைக்கும் அமோக ஆதரவு கிரிக்கெட்டில் மட்டும் பூஜ்யம் என்பதை, தமிழ் நாட்டின் முன்னணி கிரிக்கெட் வீராங்கனையான கிருத்திகாவின் மனக்குமுறல்களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இதோ அவரது ஷாட்ஸ் :

"**பொ**ண்ணுங்க எந்த விளையாட்டும் விளையாடுவாங்க. ஆனா கிரிக்கெட்டை மட்டும் ஆடவே மாட்டாங்க. அதனால எங்கள் தெருக்களில் பசங்களோடுதான் கிரிக்கெட் விளையாடிட்டிருந்தேன்.

கோச் சண்முகம் சார் இல்லாட்டி, நான் உங்ககிட்ட இப்படி பேட்டியெல்லாம் கொடுக்கவே முடியாது. அவர்தான் என் திறமையைப் பார்த்து என்னை முறையா பயிற்சி பெற வைத்தார். இன்னைக்கு நான் ஆஸ்திரேலியன்களுக்கான செலக்ஷன் டீமில் இடம்பெறும்வரை முன்னேறியிருக்கிறேன்.

ஆண்கள் அளவிற்கு பெண்கள் கிரிக்கெட் விளாமறாகவும், அதிரடியாகவும் இருக்காததற்குக் காரணம், ஆண்களுக்குள்ள பவர் எங்களிடம் இல்லாததுதான். ஆண்கள் கிரிக்கெட்டில் உள்ள அதே ரூல்ஸ்தான் பெண்களுக்கும். பவுண்டரி அளவுகள் உட்பட...

2003 உலகக் கோப்பையில் ஆண்கள் அணி இரண்டாவது இடம் பெற்றது போல், பெண்கள் அணி மூன்றாவதாக வந்தது என்று எத்தனை பேருக்குத் தெரியும்? நாங்கள் ஆடும் இன்டர்நேஷனல் மேட்ச்களுக்குக் கூட எந்தப் பத்திரிகைகளும் முன்னுரிமை தருவது கிடையாது.

பெண்கள் கிரிக்கெட் போராக இருக்கிறது என்கிறார்கள். முதலில் யார் வந்து எங்கள் மேட்ச்சைப் பார்க்கிறார்கள்? இதையெல்லாம் நினைத்தால் அவ்வளவு கஷ்டமாக இருக்கும். ஆனாலும் ஒருமுறை கொல்கத்தாவில் நடந்த மேட்சின் பொழுது அவ்வளவு கூட்டம் வந்தது. எங்களால் நம்ப முடியவேயில்லை!

ப்ராக்டிஸ் செய்ய முறையான மைதானங்களும் எங்களுக்குக் கிடைப்பதில்லை. கல்லூரிகளிலும் மறுத்து விடுகிறார்கள். இதை முதல்வரிடம் கோரிக்கையாக வைத்திருக்கிறோம். விளையாட்டிற்கும், பெண்களுக்கும் அவர் செய்வது மாதிரி யார் செய்கிறார்கள்!

இதோ நான் அடுத்ததாக இந்தியன் டீமுக்கு செலக்ட் ஆகப் போகிறேன். ஆனாலும், சேப்பாக்கம் மைதானத்தில் எந்த இன்டர்நேஷனல் மேட்ச் நடந்தாலும் பார்க்க பாஸ் எதுவும் கிடையாது. காசு கொடுத்துத்தான் பார்க்க வேண்டும். விரைவில் பி.சி.சி.ஐயுடன் எங்கள் வுமன்ஸ் கிரிக்கெட் அசோசியேஷன் இணைந்த பின் இந்நிலை மாறும் என நம்புகிறோம்.

விளம்பரங்களில் எப்பொழுதும் பெண்கள் ராஜ்யம்தானிருக்கும். ஆனால் அதிசயமாக ஆண் கிரிக்கெட் வீரர்கள் பக்கா மாடல்கள் போல் விளம்பரங்களில் ஜொலிக்கும் போது, இதுவரை ஒரு பெண் கிரிக்கெட் வீராங்கனை கூட விளம்பரங்களில் நடித்ததேயில்லை என்பதும் ஒரு வருத்தம்.

பெண்கள் என்றாலும் மேட்சுகளில் தோற்றால் அழவே மாட்டோம். அப்படியும் அழுதால் அந்தப் பெண்ணை டீமிலிருந்து வெளியேற்றி விடுவோம்" என்று சீரியஸாகப் பேசிக் கொண்டிருந்தவரை நிறுத்தி, "சரி பெண்கள் கிரிக்கெட்டின் சிறப்பு அம்சம் என்ன?" என்றோம்.

சட்டென்று, "பெண்களைவிட வேறென்ன சிறப்பு!" என்றாரே பார்க்கலாம்!

📷 + ✍ செந்தில்

ஹேர் கட்டிங்... கேக் ஃபுட்டிங்!

நான் உருப்படியான விஷயங்களை மட்டும்தான் பண்ணுவேன்னு உங்களுக்குத் தெரியுமே! அதான் போய் என் ஹேரை 0.75செ.மீ. ட்ரிம் பண்ணிக்கிட்டு வந்தேன் ஐந்நூறு ரூபா கொடுத்து! லஜ்ஜாவதி பர்ஸுல பணம் விளையாடுதுன்னு தப்புக் கணக்கு போடாதீங்க. நுங்கம்பாக்கம் ஹைரோடு இஸ்பானி சென்டர்ல இருக்குற 'Bounce'-ல டிசம்பர் 1, 2, 3, போயி முடிவெட்டிக்கிட்டு வாங்க. நீங்க கொடுக்கிற பணம் அப்படியே 'canstop' அமைப்பு மூலம் கேன்சர் நோயாளிகள் பலருக்கு போய்ச் சேரப் போகுது. அதனால ஹேர்கட்டிங் பண்ணிக்கிட்டு, மீட்டருக்கு மேல 'சில நூறுகளை' கொடுத்திட்டு வந்தேன். அடுத்த வாரம் போயி ஹேர் கலரிங், ஸ்கின் கேர் ட்ரீட்மெண்ட் பண்ண வாம்னு இருக்கேன். சொல்ல மறந்துட்டேனே, நரேன் கார்த்திகேயன், அப்பாஸ், சொர்ணமால்யா, ராபின்சிங், சோனியா மிர்சா இப்படி லஜ்ஜாவதிக்கு ஜூனியர் வி.ஐ.பி.ங்க Bounce-ல கஸ்டமர்ஸ்! ஓ.கே. என்னை மாதிரி கேன்சர் பேஷண்ட்டுக்கு உதவ நினைச்சீங்கன்னா, அப்பாயிண்ட்மெண்ட் வாங்க, நம்பரைக் குறிச்சுக்கோங்க: 28330508 / 09







அங்கேயிருந்து கிளம்பி ஸ்வீட்டா டேஸ்ட்டாக்காக ஜி.ஆர்.டி. ரேடிசனுக்கும் போனேன். காய்ந்த முந்திரி, செர்ரி, பாதாம், அத்திப் பழம்னு ட்ரை ஃப்ரூட்ஸ்கூட (பாதி ஃப்ரூட்ஸ்க்கு பெயர் தெரியல) ஊத்த வேண்டியதையெல்லாம் ஒரு கொப்பரைல ஊத்தி, நல்லாப் பிசைஞ்சுக் கிட்டிருந்தாங்க. ட்ரை ஃப்ரூட்ஸ் மாதிரி பல கலர்ல நிறைய வெள்ளைக்காரங்க குவிஞ்சிருந்தாங்க. என்ன மேட்டர்னா கிறிஸ்மஸுக்காக இப்பவே இந்த கேக் ஃபுட்டிங்கை தயார் பண்ணி ஏர் டைட்டா மூடி வச்சிடுவாங்களாம். கிறிஸ்மஸ் நேரத்தில் இதை வைச்சுத்தான் கேக் பண்ணுவாங்களாம். அப்புறமென்ன, கிறிஸ்மஸ் அன்னிக்கு கேக் சாப்பிட வாரேன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.

- லவ்லி லஜ்ஜாவதி

பொலிட் பீரோ





ஸ்ரீ ராஜன்

• ரப்பர் கணக்காய் இழுத்துக் கொண்டிருந்த இணைப்பு விவகாரம், ஒருவழியாய் தலைநகரில் முடிவுக்கு வந்து ஒரு தரப்பினருக்கு நிம்மதியை ஏற்படுத்தியிருந்தாலும், அது தற்போது பதவியிலிருக்கும் இளைஞர் தலைவருக்குத் தூக்கத்தை முற்றிலுமாக விரட்டி விட்டதாம். எல்லாம் தலைமை மாற்றப்பட்டு விடுமோ என்ற பயம்தான் என்கிறது விவரமறிந்த தரப்பு. இது குறித்து கருத்துத் தெரிவித்த மூத்த காங்கிரஸ்காரர் ஒருவர், "நிலைமைப் பதவியிலே இதையெல்லாம் சகிச்சுக்கிட்டுத் தான் போகணும்" என்கிறார்.

• தலைவரின் பெயரே தொண்டர்களுக்கு மறந்து போகும் அளவுக்குச் சத்தமாக ஒதுங்கியிருந்த டாக்டர் கிருஷ்ணசாமி, மீண்டும் போர்முக்கு வருகிறாராம். அதுவும் அவருடைய உடன்பிறவா சகோதரர் கையிலெடுத்துப் போராடக் காத்திருக்கும் இரட்டை வாக்குரிமை விவகாரத்தை எடுத்துக்கொண்டு, டெல்லி வரை சென்று ஒரு கலக்கு கலக்கத் தயாராகிவிட்டாராம். இதை அவரது தொண்டர்கள், "எங்கள் டாக்டர் ஒரு பீனிக்ஸ் பறவை" என்று ஆர்ப்பரிக்கின்றனராம்.

• அடுத்து சென்னை மாநகராட்சியை 'கொசு மருந்து வாங்கிய விவகாரம்' ஒரு உலுக்கு உலுக்கக் காத்திருக்கிறதாம். இக் குற்றச்சாட்டு ஆளும் கட்சி தரப்பிலேயே எழுப்பப்படுவதால், எதிர்கட்சிகளும் முஷ்டியை உயர்த்திக் கொண்டு களமிறங்க உள்ளதாம். இதில் அடிபடுபவர் முன்னாள் அதிகாரியாம். இவருக்கும் தற்போதைய அதிகாரிக்கும் உள்ள நெருக்கம்தான் இந்த நெருடலுக்குக் காரணம் என்கிறது ஒரு தரப்பு.

• ஜயேந்திரர் விவகாரம் தொடர்பாக வைகோவின் கருத்து மீடியாக்களில் பெரிய அளவில் வருவதே இல்லையென்ற வருத்தம், அவரது தொண்டர்களை வாட்டி வதைக்கிறதாம். இவருக்கு ஓரளவுக்கேனும் ஆதரவுக்கரம் நீட்டிய ராஜ் செய்தியும், விஜய செய்திகளும் நிறுத்தப்பட்டு விட்டதால் தம் கருத்துக்கு வேறு ஒரு வழியைத் தேடியே ஆக வேண்டும் என தலைமையை நச்சரித்து வருகின்றனராம் அவரது தொண்டர்கள்.

• பணி நீக்கம் செய்யப்பட்ட சாலைப் பணியாளர்களுக்கு மீண்டும் பணி நியமனம் கோரி, அவர்கள் குடும்பத்துடன் உண்ணாவிரதம் இருந்தார்களல்லவா? அப்போது ஸ்டாலின் உள்ளிட்ட பல தலைவர்கள் வந்து சம்பிரதாயத்துக்கு உரையாற்றிவிட்டுச் சென்று விட்டாலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நல்லகண்ணு மட்டும் வெகு நேரம் இருந்து அவர்களுக்கு ஆதரவாகப் பேசிவிட்டு சென்றாராம். இது அவர்களுக்கு மிகுந்த மன ஆறுதலைத் தந்ததாம். அந்த உற்சாகத்தில்தானோ என்னவோ, அங்கிருந்த சிலர் "இவர்தான் உண்மையான காம்ரேட்" என்று பேசிக் கொண்டார்களோ!

கலை

காதல் முதல் கொசு வரை!



ஆங்கில கவிதைகளின் தொடக்கம் மற்றும் வளர்ச்சி குறித்தும், முக்கியக் கவிஞர்களின் பங்களிப்பு பற்றியும் சென்ற வாரம் பிரிட்டிஷ் கவுன்சில் வளாகத்தில் உரையாற்றினார்கள். 30க்கும் மேற்பட்ட கவிதைகள் வாசிக்கப்பட்டன. தோட்டாதரணி தன் தூரிகையால், அரங்கத்தை கவிதைகள் விளையும் களமாக மாற்றியிருந்தார்.

உலகம் மிகப் பெரிய குப்பைத் தொட்டி என்று சொல்லியிருக்கிறார் டி.எஸ். எலியட். இதற்காக உலகம் அவரை உச்சி முகர்ந்து பாராட்டியிருக்கிறது. பல புரட்சிகரமான முழக்கங்களை கவிதைகளில் புகுத்திய பைரன் மிகச் சாதாரணக் காய்ச்சலில் மாண்டு போயிருக்கிறார். தமது கண் பார்வையை இழந்தாலும் மில்டன் 'இருட்டு எனக்குத் தெரிகிறதே' என்று பாடியிருக்கிறார்.

'ஒரு கோப்பையில் உன் முத்தத்தை சிந்தி விட்டுச் செல். இனி நான் மதுவை நாடிப் போக மாட்டேன்' 'நான் உனக்கு அனுப்பிய ரோஜாக்களை ஏற்காமல் திருப்பி அனுப்பிவிட்டாய். இப்பொழுது அவற்றை முகர்ந்தால் எல்லாவற்றிலும் உன் வாசம்தான் நிறைந்துள்ளது'. இப்படியெல்லாம் காதலில் கசிந்து உருகிக் கிடந்தவர் 17ஆம் நூற்றாண்டு கவிஞர் பென் ஜான்சன்.

18ம் நூற்றாண்டில் வாழ்ந்த ராபர்ட் பர்ன்ஸ் இன்றைய சினிமா கதாநாயகர்களை மிஞ்சி நிற்கிறார். கடல் நீர் எல்லாம் வற்றிப் போனாலும், சூரியனின் வெப்பம் தாங்காமல் பாறைகள் இளகி ஓடினாலும், இவர் தொடர்ந்து காதலித்துக் கொண்டே தான் இருப்பாராம்.

காதலிலிருந்து கவிதையைப் பிரித்து காலத்திற்குக் கட்டி வந்தவர் வொர்ட்ஸ் வொர்த். 'புத்தகங்களை வீசியெறிந்துவிட்டு ஓடி வாருங்கள். மலர்களும் மரங்களும் உங்களுக்குப் பாடம் சொல்லத் தயாராக இருக்கின்றன' என்று இயற்கையை ஆராதித்தார் இவர்.

காதலும் வேண்டாம் இயற்கையும் வேண்டாம் என்று ஏனோ கொசுவைப் பற்றி பாடியிருக்கிறார் டி.என். டான்னே. 'என் ரத்தத்தை உறிஞ்சி உறிஞ்சிக் குடிக்கிறாயே! இது உனக்கே நியாயமா?' என்றெல்லாம் கொசுவை நிற்க வைத்து (அல்லது பறக்க வைத்து) கேள்வி மேல் கேள்வியாக கேட்கிறார். கொசு அவருக்கு என்ன பதில் சொல்லியது என்று தெரியவில்லை.

அதேபோல் தனது மியாவ் குட்டி இறந்து போனதை, ஏதோ உலக மகா சோகம் நடந்து விட்டதைப் போல பாடியிருக்கிறார் தாமஸ் க்ரே.

வில்லியம் ப்ளேக் இவர்கள் யாரோடும் சேர மாட்டார். அவரது கவிதைகள் அளவில் சிறியவை. எளிமையானவை. ஆனால் ஆழம் பொதிந்தவை. உதாரணத்துக்கு ஒன்று. 'எனக்கு ஒரு நண்பன் இருந்தான். அவனிடம் எனக்கு மகா கோபம். என் கோபத்தை அவனிடம் கூறினேன். அது மறைந்துவிட்டது. எனக்கு ஒரு விரோதி இருந்தான். அவனிடம் எனது கோபத்தை நான் கூறவில்லை. என் கோபம் அதிகரித்தது. பின்பு அது ஒரு மரமாக மாறியது. என் விரோதி அந்த மரத்திலிருந்து ஒரு பழம் பறித்து உண்டான். பின்பு இறந்து போனான்.'

ஒரு குறும்பான வாசிப்பாளர் (பி.சி. ராமகிருஷ்ணா) காதல் கவிதை வரும்போதெல்லாம், மற்றொரு வாசிப்பாளரான அம்ரிதாவின் அருகே சென்று அவரைப் பார்த்தபடியே வாசிக்க, பாவம் அம்ரிதாவால் ஒழுங்காகச் சிரிக்கவும் முடியவில்லை. முழுமையாக வெட்கப்படவும் முடியவில்லை.

தங்களைப் பற்றியும் பேசப் போகிறார்கள் என்று எப்படியோ தெரிந்து கொண்டு, சில கொசுக்கள் வந்திருந்தன. டி.என். டான்னே இவற்றில் ஏதோ ஒன்றிடம்தான் கேள்வி கேட்டிருக்க வேண்டும்.

மருதன்

அசோகர் மரம் நட்டாரா?



வரலாறு, சமூகவியல் தொடர்பான கட்டுரைகளும் புத்தகங்களும் எழுதி வரும் ரோமிலா தாப்பர் 'காடுகள்' பற்றி, சென்ற வாரம் பொருட்காட்சி அரங்கத்தில் உரை யாற்றினார். சில முக்கியக் குறிப்புகள்.

• இதிகாசங்களிலும், புராணங்களிலும் காடுகள் பற்றிய பல மிகைப்படுத்தப்பட்ட குறிப்புகள் காணப்படுகின்றன. பேய்கள், பிசாசுகள் வசிக்கும் ஒரு இடமாக காடு கருதப்பட்டது. மிருகங்களை பலியிடும் வழக்கம் இருந்த காலத்திலும் காட்டு விலங்குகளை யாரும் பலியிட்டதில்லை. 'எது வேண்டுமானாலும்' நடக்கும் ஒரு இடம் தான் காடு.

• உலகத்திலிருந்து தன்னை துண்டித்துக் கொண்ட துறவிகள் தனிமையில் தவம் செய்வதற்கு காடுகளையே நாடியிருக்கிறார்கள். யாருக்கும் இடைஞ்சல் ஏற்படாமல் இருக்கவே காடுகளுக்கு இவர்கள் பயணப்பட்டார்கள் என்றாலும், காடுகளுக்கே இவர்கள் இடைஞ்சலாக மாறிப்போனது தனிக் கதை.

• அசோகர், மௌரியர் உட்பட எந்த அரசர்களும் சூழியல் பற்றிய அக்கறை கொண்டவர்கள் என்று கருத இயலாது. காடுகளை பாதுகாக்க வேண்டும் எனும் நோக்கத்துடன் அவர்கள் செயல்பட்டார்கள் என்றும் கூற இயலாது. காடுகள் என்பது வளங்களை அளிக்கும் ஒரு சாதனம், அவ்வளவுதான்.

• ஒரு அரசன் விலங்குகளை வேட்டையாடும் பொழுது அது அந்த அரசனின் வீரத்தை குறிக்கும் செயலாகக் கருதப்பட்டது. ஆனால் காடுகளில் வாசம் செய்தவர்கள் உணவுக்காக வேட்டையாடும்பொழுது அவர்கள் 'காட்டுமிராண்டிகளாக' மாறிப்போயினர். இந்நிலை இன்னமும் மாறவில்லை.

• காலம் மாற காடுகளும் மாறத் தொடங்கின. வேளாண்மைக்கும், மக்கள் குடியிருப்புகளுக்காகவும் காடுகளை அழிக்கத் தொடங்கினர். காட்டுவிர்கள் மதிப்பிடப்பட்டன.

• காடுகள் அழிக்கப்பட்டதற்கு அந்நாட்களிலேயே எதிர்ப்புகள் இருந்து வந்திருக்கின்றன. இந்த எதிர்ப்புகுரல்கள் பல இடங்களில் மறைமுகமாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

ஒரு காட்டைப் போலவே பரந்துபட்டது அதனால் பற்றிய ஆராய்ச்சியும். ரோமிலா தாப்பரின் இந்த உரை, அவரே சரியாக குறிப்பிட்டது போல ஆழமானதோ முழுமையானதோ அல்ல.

காடுகளைப் பற்றி கேள்விகள் கேட்கலாம் என்றதும் ஒரு பார்வையாளர் 'வீரப்பனைப் பற்றிக் கேட்கலாமா?' என்று கேட்டார். ரோமிலா தாப்பர் புன்னகை செய்தார்.

📷 மீடியா ராமு ✍ கங்கா

மன்றத்தில் உதிர்ந்த



முத்துக்கள்

ஒவ்வொரு மாதமும் சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டம் நடைபெறும். அப்போது அறிவிக்கப்படாத அஜெண்டாவாக ஒரு குஸ்திக் காட்சி அரங்கேறும். அத்தகைக் காட்சியானது இந்த மாதமும் கொஞ்சம்கூட குறை குறையாமல் நடந்தேறியது. அவர்களின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளில் மினி கலகமே விளைந்தது. இம்முறை மன்றக் கூட்டத்துக்கு நேரடியாகவே சென்றிருந்ததால் அங்கு நடந்த சில சுவையான நிகழ்வுகள்:

• மன்றத்தில் பேசிய பாஜக உறுப்பினர் ஒருவர் ஆணையருக்கு ஓவராகவே ஐஸ் வைத்துப் பேச, ஆணையரோ அதைக் கொஞ்சம் கூடக் கவனிக்காமல் யாருடனோ பின்னாக விவாதித்துக் கொண்டிருந்தார். அதே உறுப்பினர் முன்னாள் மேயர் ஸ்டாலினை 'தளபதி ஸ்டாலின்' என்று கூற, அதிமுக தரப்பிலிருந்து இலேசான சலசலப்பு ஏற்பட்டது. சட்டென்று கதாரித்த உறுப்பினர் 'ஸ்டாலின்' என்றவாறு தொடர்ந்தார்.

• அவரே 'ஜகேந்திரர் கைது' பற்றிப் பேச, இதற்காகவே காத்துக் கொண்டிருந்தவர்கள் போல அதிமுக உறுப்பினர்கள் காட்டுக் கூச்சல் போட்டனர். இதில் வேதனை என்ன தெரியுமா! அவர்களில் பெரும்பாலானோர் சிரித்துக்கொண்டே எதிர்ப்புக் குரல் எழுப்பியதுதான்.

• ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் பேசும்போது, 'இங்கு நம் அணியினர் மட்டுமே உள்ளனர். அதனால் சொல்லி விடுகிறேன்' என்று சொல்லி பேச முற்பட்டார். "அப்போ மாற்று அணியினர் சபையில் இருந்தால் வேறு மாதிரி பேசுவாரோ" என்று ஐயம் எழுப்பினர் எதிர்கட்சியினர் (வாயில் நின்று)

📷 ராஜன் ✍ முராரி

சிங்காரச் சென்னை எழும்பூரு சென்னைன்னு பாலிடிக்ஸ் பண்றதுக்கு என்ன பேரு வச்சிக்கிட்டாலும், குப்பைகளுக்கு மட்டும் விடிவு காலமே இல்லைன்னு ஆயிப் போச்சு. இது இப்படியே விடப் போறதில்லைன்னு சென்னை மாநகராட்சி ஒரு அதிரடி முடிவை எடுத்திருக்கு. அதன்படி இனிமே மக்கும் குப்பை - மக்காத குப்பைன்னு தனித்தனியே நாமளே பிரிச்சுத் தந்திடணுமாம். ஆனா எல்லாருக்கும் எது மக்கும் குப்பை, மக்காத குப்பைன்னு தெரியாதுல்ல. அதனால அதை சென்னை மக்களுக்கு விளக்க டீம் ஒன்னு உருவாகியிருக்கு. அதனுடைய மெம்பர்கள் யார் தெரியுமா? "நான் எங்க எப்படி இருக்க வேண்டியவன், என் கொசும் இங்கே வந்து குப்பை கொட்டிட்டு இருக்கேன்" என்று அடிக்கடி நம்ம இட்டே பீட்டர் விடுவாங்களே, அதே ஸ்கூல் டீச்சர்தான். இவங்க கூட அறிவொளி இயக்கத் தொண்டர்களும், மாநகர ஊழியர்களும் வர்றாங்க. வர்ற வெள்ளிக்கிழமை வரைக்கும் இந்த டீம் உங்க வீடுகளுக்கு வரும். எடுத்துச் சொல்லும். கவனமாகக் கேட்டுக்கிட்டு, அதுக்கேத்த மாதிரி நடந்துக்கணும்! சரி, குப்பையைக் கொட்டியாச்சு. அடுத்து அக்குப்பையை என்ன செய்யப் போறாங்களாம்? மக்கும் குப்பையை உரமாக மாற்றிடவும், மக்காத குப்பையை மறுசுழற்சி செய்யவும் திட்டம் வச்சிருக்காங்களாம். ஹோ, உருப்படியா ஏதோ செய்யப் போறாங்க. நாமளும் கொஞ்சம் ஹெல்ப் பண்ணுவோமா!

📷 ரிச்சர்ட் ✍ ஸ்வரா







வழக்கம் போலில்லாமல் சென்னையில் படிக்கும் வட இந்தியப் பெண்ணான ஷர்மிளாவை நம்மூர் பெண்ணான ஜெயஷாலினியோடு மோத விட்டு வேடிக்கை பார்த்தோம். (அடடா, இரு பெண்கள் மோதிக் கொள்வதைப் பார்ப்பது எத்தனை சுகம் தெரியுமா?)

"நமஸ்தே. சென்னை ரொம்ப ஹாட் ஹை. ஏதோ நார்த் இண்டியன்ஸ் நாங்க நிறைய்ய இருக்கிறதால சென்னையில தோடா தோடா ரெய்ன். புரிஞ்சுதா?"

"ஐ தோடா?! நீங்க எல்லாம் தமிழ்நாட்டுக்குள்ள நுழையாத போது இங்கு ஒரு சொட்டு மழையும் பெய்யல பாரு. ஆனாலும், இந்த பேய்மூரி ஆளுங்களுக்கு பந்தா ஓவர்தான்."

"பகுத் அச்சா! வீ, உங்க ட்ரெஸ் பாவாடை தாவணி, புடவை. ஆனா நீங்க எங்க ஊர் சுடிதார், சல்வார் கமீஸ்தான் போடறீங்க. ஹா.. ஹா.. ஹா.. உங்க டிரஸ் உங்களுக்கே பிடிக்கலை."

"கபடாவாது துக்கடாவாது. எதுவுமே போணியாக மாட்டேங்குதுனு உங்க ஊர் டெக்ஸ்டைல் பிஸினஸ்காரங்க எல்லாம் கீழ விழுந்து புரண்டு, புரண்டு கெஞ்சினதால இரக்க மனசுள்ள நாங்க சுடிதாருக்கு மாறி உங்க ஊர் பிஸினஸ்வாலாக்களுக்கு பொழப்பு தேடித் தந்திருக்கோம். தெரிஞ்சுக்க. கல்யாணம், விழாக்கள்ல சரசரன்னு பட்டுப் புடவையில மின்னுவமே, நீ பார்த்ததில்லையா?"

"கழுவுற மீன்ல நழுவுற மீன்ஷன்னு உங்க ஊர் கவிஞரே தமிழ்நாட்டுப் பெண்களை மட்டும் தட்றாரு ஹா.. ஹா.. ஹா."

"கழுவுற மீன் நழுவுவாட்டி ரோல்ட் ஆயிடும். மாறும் ஹை!"

"ஐஸ்வர்யாராய், மல்லிகா ஷெராவத் எல்லாம் ஹாலிவுட் படங்களில் நடிக்கறாங்க. சென்னையைத் தாண்டியதுண்டா உங்க டமில் ஆட்கள்?"

"நீ இந்த உலகத்திலதானே இருக்கே. கோடம்பாக்கம் சுப்பராயன் தெருவிலிருக்கிற ரஹ்மான் சாதனைகள் தெரியாதா உனக்கு?"

"இந்த ஊர் ரோடெல்லாம் குண்டும் குழியுமா இருக்கு."

"உங்க ஊர்ல ரோடே கிடையாது. இந்தியாவிலேயே பெஸ்ட் ரோட்ஸ், ட்ரான்ஸ்போர்ட்ஸ் தமிழ்நாட்டிலதான் இருக்கு."

"பஸ்ஸெல்லாம் ஒரே கூட்டம்."

"உங்க ஊர் ட்ரெய்னை விடவா?"

"சப்பாத்திக்கு டால் கொடுக்கவே மாட்டேங்கறீங்க."

(சிரிப்பு அடக்க முடியாமல்) "சரி சரி, உனக்கு தமிழ்நாடும் சென்னையும் பிடிக்கலை. எப்போ மூட்டையைக் கட்டப் போறே?"

"நோ. என்னப்பா, கோவிக்கறீங்க. சென்னையிலிருக்கிற எஜுகேஷன் வசதிகளும் பரபரப்பேயும் இருக்கிற அமைதியும், ஜாதி, மொழி பார்க்காத அன்பான தமிழ் மக்களும் இந்தியாவுல எங்கே தேடினாலும் கிடைப்பாங்களா? சொர்க்கமே என்றாலும் அது தமிழ்நாடு போல வருமா.." என்று உச்சஸ்தாயில் பாடி செல்ஃப் கோல் அடிக்க 'ம்.. அது' என்று பெருமிதம் காட்டினார் ஜெயஷாலினி.

✍ ச.ந.கண்ணன்

லப் டப் லவ் லெட்டர்

அப்பாடா! என் சந்தோஷத்துக்கான  கிடைச்சாச்சு இனி என் டுவீலரோட [Backspace] காலியா இருக்காது. என் வாழ்க்கையை [Ctrl] செய்வதற்கு ஒரு ஆள் கண்டுபிடிச்சாச்சு. எங்க ஆபீஸ்லே இனி நான் நைட் [Shift] செய்யத் தேவையில்லை. மற்ற எல்லா வேலையையும் இனி [Del] பண்ணிடலாம். ஆமாங்க, கூடிய விரைவில் நான் [Wed Lock]ல் [Enter] ஆகப் போகிறேன். இனி என் [Home] ஸ்வீட் ஹோம். - கோமதி நாயகம், சைதாப்பேட்டை.

(வாசகர்களின் லப்டப் லவ் லெட்டர்கள் வரவேற்கப்படுகின்றன.)

சிலிர்க்க வைக்கும் சிருஷ்டி

உங்களோட இனிய இல்லத்தை அழகுப்படுத்தணும்னா என்னவெல்லாம் செய்வீங்க? ஒண்ணு வண்ண வண்ண ஓவியங்களை வாங்கிட்டு வந்து சுவர்களில் மாட்டுவீங்க. அழகழகான பீங்கான்களை - பூச்செடிகளை அங்கங்கே வைப்பீங்க. இவையெல்லாம் செஞ்சா ஓரளவுக்கு அழகு வரும். அந்த அழகுக்கு மெருகேற்றணும்னா, ஒரே வழி மரத்தால் ஆன கைவினைப் பொருள்களைக் கொண்டு அலங்கரிப்பதுதான். அவற்றை பர்சேஸ் செய்ய இப்போ ஒரு சூப்பர் சான்ஸ் - ஆழ்வார்பேட்டை பார்க் ஷெராட்டன் ஹோட்டலுக்கு எதிரே 'சிருஷ்டி'ங்கற பெயர்ல ஒரு கண்காட்சி நடந்துட்டிருக்கு. இங்க என்ன ஸ்பெஷல் தெரியுமா? கர்நாடகா ரோஸ்வுட்டால் ஆன சோபா செட், சிம்மாசனம் கணக்கா நாற்காலி செட், காஷ்மீர் ஸ்பெஷல் ரவுண்டு டைனிங் டேபிள், அழகான ஆளுயர தெய்வச்சிலைகள், குட்டிக் குட்டிச் சிலைகள், பொம்மைகள்னு ஏகப்பட்டது இருக்கு. மரத்தால பதிப்பு வேலை செய்யப்பட்ட ஓவியம் ஒண்ணு இருக்குது பாருங்க. அதுல, "காலை நேரத்து கிராமத்துப் பரபரப்பை" அவ்வளவு தத்ரூபமா சித்திரிச்சிருக்காங்க. இங்க பத்து சதவீதம் தள்ளுபடி வேற தர்றாங்க. உடனே பார்க்கணும் - வாங்கணும்னு தோணுதோ. அப்போ வர்ற திங்கட்கிழமைக்குள்ள (டிசம்பர் 8) போயிட்டு வந்துடுங்க! அப்புறம் கிடைக்கலேன்னு 'பூமராங்'க்கு லெட்டர் போடக் கூடாது!



📷 + ✍ முராரி

Registered with the Registrar of Newspaper of India under No. 104/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 *
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 5.12.2004


MILKA
WONDER CAKE
அற்புதமான ஆறு சுவைகளில்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG
(CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 *
Registered as a Newspaper in Srilanka